ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி அணா | உள்நாடு 0-1-0
வெளிநாடு 0-1-6

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரக விளம்பரம் அங். 1க்கு ரூ. [illegible]
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்திற்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில வருடம் கார்த்திகை மீ 16 உ (1—12—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 30

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண்காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், "வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட்" என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்தி பெற்ற

## மகா சந்தனாதி தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேகநீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல், காது மந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச்சூடு, நீரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒருமுறை இந்த தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2-2-0.

## சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2-8—0.

## மகா வில்வாதி லேகியம்

அஜீரணம், வயிறு பொருமல், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலை சுற்றல், வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கைகால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீரண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2

## அமிர்த சஞ்சீவி லேகியம்

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்க வேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச்சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2.

## குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. கார மாத்திரை அணா 8. சுரபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ 1-0-0. மாந்தக் குடோரி எண்ணெய் ரூ, 1-0-0,

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்ப வேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒற்றைத்தலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், பீளை விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், பிராபோல விழுதல், வாய்க்கசப்பு, பல்லீறு, ரத்தம் வடிதல் முதலிய வியாதிகளெல்லாம் தேகத்திற்குசௌகரியமுண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

# பார்சு வாய்வு மருந்து.

வாத வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய வாத சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். ஏஜண்டுகள் தேவை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)



# தமிழரசு

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை புதிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் நாட்டுத் தேசவுரிமையை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடைந்தக் கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் துணிந்து கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் அமைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வரைந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0
| வெளிநாடு ரூ. 4-0-0

'தமிழரசு' காரிய நிலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

(65)



நிவர்த்திக்கமுடியாமல் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ கண்டுபிடிப்பு! இதை—சாதனைசெய்ய ஆச்சரிய நிவர்த்தி!!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, ஸ்வாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த க்ஷணத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9-0-0.
6 டின் விலை ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0.
F, M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8-0.
இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
.. கொண்டையன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.



உயர்வும் உத்தரவாதமுமுள்ளது!

உலகப் பிரசித்தி பெற்ற

# மாயவரம் K. ... கிருஷ்ண அண்டு கோ.,

லத்துரு சிங்கச் சந்தன த் தைலம் பிருங்காமலகத் தைலம்
அசுவகந்தா விதைத் தைலம்

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தந்து தேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பசிலை மூலிகைகளைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை

இவைகளை ஸ்நானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி சிரேசத்திற்கு குளிர்ச்சியையும், நறுமணம் புகம்பும் கலந்த பரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச் சிபார்சு செய்யப்பட்டவை.

ஒருமுறை பரீட்சியுங்கள், பரீட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய்நாட்டில் கிடைக்குமிடம்:— | ஆர். சந்தானகிருஷ்ணன்,
பி. கோவிந்தசாமி பிள்ளை, | ஷாப் அண்டு சந்தனக்கடை,
48-50, சிராங்கூன் ரோடு, | மாயவரம்.
சிங்கப்பூர். |


சாதி வேற்றுமையை அடியோடு ஒழியுங்கள்.

# இந்துராஜாக்களைக்கெடுத்ததும் யாகம்; இந்து தேசத்தை அடிமைப்படுத்தியதும் யாகமே.

(கைவல்யம்)

பூர்வீக இந்து ராஜாக்களுக்கு யாகம் செய்வதே எல்லாவற்றிற்கும் மேலென்று கற்பிக்கப்பட்டிருந்ததினால், இந்து ராஜாக்களும், அவர்கள் ராச்சியமும் சூறையாடப்பட்டு ஜன சமூகங்கள் படாதபாடெல்லாம்பட்டு அடிமை புகுந்தனரென்பதையும், செய்துவந்த யாகங்கள் நமது ராச்சியத்திற்குவேண்டிய ஒரு நூல் இழையைக்கூட அசைக்கவில்லையென்பதையும்பற்றி முன் வியாசத்தில் சுருக்கிச் சொன்னேன். அதில் இன்னும் சிலவற்றை இந்த வியாசத்தில் சொல்லுகிறேன். எழுதுவதில் எனக்குச் சலிப்பில்லை, படிப்பவர்கள் சலிப்பெய்தல் கூடாது. படிப்பிலுள்ள ஆலசியமும் அலட்சியமும் விட்டு நாமும் மனிதரோடு மனிதராக வாழ்வதற்கு எல்லோரும் ஒன்று சேர்வோமாக!

பார்ப்பனர்கள் தங்கள் உயர்விற்கும் பிழைப்பிற்கும் தகுந்தவாறு பல ஏடுகள் எழுதி, பிர்மா, தேவேந்திரன், ரிஷிகள் சொன்னதாகவும், அதுவே சாஸ்திரமென்றும் கற்பித்து நமது தேசமெல்லாம் பரப்பிவிட்டார்கள். அவ்வழியில் முன் ஆலோசனையுடன் அவர்கள் தொழிலையும் பிழைப்பையும் கெட்டிப்படுத்திக்கொண்டார்கள். அதனால் இந்துசமூகங்கள் சீரடையாமல் பிரயோஜனமற்றுப்போயிற்று என்பதை நமது தேசத்து உயர்ந்த அறிவாளிகளெல்லாம் ஒத்துக்கொள்வார்கள்.

இந்து ராஜாக்கள் சிற்றரசர்கள் பணக்காரர் மற்ற ஜனங்கள் இவர்கள் மத்தியில் இதிகாச புராணங்களும், ஸ்மிருதிகளின் கர்மங்களுமே இந்து சமயமென்று நெடுங்காலமாக இருந்துவருகிறது. இதில்யாகங்களைப் பற்றிச் சொல்லியிருப்பவைகளைக் கீழே சொல்லுகிறேன். இவை பிர்மா, நாரதர், கிருஷ்ணன், பராசர் முதலியவர்கள் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள்சொன்னதுதானா? பார்ப்பானின் பிழைப்பிற்குஎழுதிவைத்துக்கொண்டு நெடுங்காலமாக உலகத்தைஏமாற்றிவருவதா என்பதை நீங்களே ஆலோசித்துப் பாருங்கள். பிராமணனுக்கு சாஸ்திரத்தால் விதித்த விதிகளையும் தள்ளி தங்களுக்கு ஏற்பட்டிருந்த வரம்பையும் தாண்டி இங்கிலீஷ் நாகரீகமே தங்கள் வாழ்க்கையாகவுங் கொண்டு ஜன சமூகங்கள் அறிவு சிறிது பெற்றிருக்கும் இந்தக் காலத்தில் சமயக் கொடுமையால் அன்னிய மதங்களுக்கும், பசியின் துன்பத்தால் பல அன்னிய தேசங்களுக்கும் இந்து சமூக ஏழைகள் போய்க் கொண்டிருக்கும் மலையான தேசத்தில் இரண்டு வயது நீண்டு விட்ட விவாக சட்டத்தை ஒழிக்க யாகமென்னும் பேரோடு பார்ப்பனர்கள் ஆயிரமாயிரமாகக்கூடி இரண்டுவயிறு உண்டு மந்திரம் ஜெபிப்பதானால் அந்தக் காலத்தையும் அந்தக்காலத்தின் யாகத்தின் தன்மைகளையும் நீங்களே நினைத்துப்பாருங்கள்.

பராசர ஸ்மிருதியிலும் ஐந்தாம் வேதமான இதிகாசத்திலும் யாகத்தைச்சொல்லியிருப்பவைகளில் சிலவற்றைமட்டும் உங்களுக்குச்சொல்லிவிட்டால் இந்து ராஜாக்கள் யாகம் செய்யத் தூண்டப்பட்டதும், பார்ப்பனர்கள் அடைந்த லாபங்களின் வழிகளும் உங்களுக்குத் தெரிந்துவிடும். பராசரரும் வியாசரும் சொல்லப்பட்டதாகச் சொல்லும், சாஸ்திரங்களின் முதலிலேயே பிர்மா உலகத்தை யாகத்தின் பொருட்டே படைத்தார்; வேதியன் வேள்வி செய்யும் பொருட்டே படைக்கப்பட்டான்? வேள்விக்காகப்படைக்கப்பட்ட உலகத்தில், பங்களாவாசமும், மோட்டார் சவாரியும், காஸ்மாபாலிட்டன் கிளப்பு மேல்மாடி டின்னரும் எப்படி வந்ததென்றும், வேள்விக்காகப் படைக்கப்பட்ட வேதியனுக்கு வக்கீல் வேலையும் சோற்றுக்கடை வியாபாரமும் ஏன் வந்தது என்று பிர்மாவைக்கேட்பதற்கு அவர் இங்கில்லை. என்றாலும், பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் வேள்வியைப்பற்றிச் சொல்லுமிடத்தில் எவ்வகையாலும் வேட்பித்தல் என்பது வேதியர்க்குச் சீவனப்பொருட்டாக விருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள், தேவர்கள் வேள்வியின் பொருட்டே உண்டாயின. பசுக்கள் யாகத்திற்குப் பலியும் தட்சணையுமாகின்றன. வேள்வியின் பொருட்டே பிறந்தன. வெள்ளியும் பொன்னும் யாகத்திற்கு தட்சணையாகின்றன, பாத்திரங்கள் யாகக்கலையமாகின்றன; பிராமணர்களையும் வேள்வியின் பொருட்டே படைத்தார். வேள்வியால் உலகங்கள் நிர்மலமாய் ஒளிசெய்கின்றன. வேள்வியால் தேவர்கள் மரணமில்லாமையை யடைந்தார்கள், வேள்வியால் பாவம் ஒழிந்தவனாய் மரணமில்லாத விஷ்ணு உலகத்தை யடைகிறான். வேள்வியில்லாதவனுக்குத் திக்கில்லை. வேள்வியில்லாதவன் சுபத்தையறியான். வேள்வி செய்யாதவன் சுத்தமில்லாத ஆன்மாவையுடையவனாய் கிழிந்த இலைகளைப் போல விழுந்து விடுவான். நாத்திகத்தினாலாவது அன்றறிவோமென்னும் ஆலசியத்தினாலாவது யார்வேள்வி செய்யவிரும்புவதில்லையோ, யார் வேள்வியால் தேவர்களைப் பூசிப்பதில்லையோ அவன் பல நரகங்களை அடைகிறான். இரண்டுலகங்களுடைய செல்வமும் யாகத்தால் வெளிப்படுகிறது. யாகத்தால் களிக்கப்பெற்ற தேவர்கள் உலகங்களை விருத்தி செய்கின்றார்கள். ஆனதால் யாகத்தைச் செய்தவன் போகத்தையும் மோட்சத்தையுமடைகிறான். எல்லா கர்மங்களின் நோக்கமும் யாகத்தில் அடங்கியிருக்கின்றன. (எழுதும்பொழுதே என் அவசரத்தால் ஒரு கேள்வியும் கேட்டுக்கொள்ளுகிறேன்) எந்த யாகத்தால் எந்த தேவர்களால் மேனாடு செல்வப் பெருக்கெடுத்தும் உலகமெல்லாம் ஆண்டுக் கொண்டுமிருக்கிறது? எந்த வேள்வியால் எந்த தேவர்களால் நம் நாடு வயிற்றிற்குக் கஞ்சியில்லாமலும் இடுப்பிற்குத் துணியில்லாமலும் சொத்தெல்லாம் அடமானத்திலுமிருக்கிறது?

அற்பமாகிய பொருளுடையவனுக்கு வேள்வி தகாதென்று மனு சொன்னதாக பராசர் இவர் ஏட்டில் சொல்லுகிறார். வேறாகிய புண்ணிய காரியங்களைச் செய்துகொண்டு பொறி புலனடக்கியவனாக இருந்தாலும் எவ்வளவு அசந்தாப்பமாயினும் குறைந்த தட்சணையோடுங் கூடிய வேள்வியை வேட்டலாகாது. குறைந்த தட்சணைகளையுடைய வேள்வி, பொருகளையும், யஜலையும், சுவர்க்கத்தையும், ஆயுளையும், கீர்த்தியையும், மக்களையும், பசுக்களையும் கெடுக்கின்றது. அன்ன சாந்தியில்லாத வேள்வி இராஜ்யத்தைச் சுட்டுவிடும். தட்சணை குறைந்த வேள்வி தலைவனைச் சுடும். ஆதலால் வேள்விக்கு வேண்டியபடி தட்சணை கொடுக்காவிட்டால் வேள்வியோடு ஒத்த பகையில்லை. இவைகள் கலியுகத்தின் பிரமாணமான பராசரஸ்மிருதியின் வாக்கியங்கள். இது பராசரர் சொன்னதோ? பார்ப்பனப் பண்டிதன் சொன்னதோ? நீங்களே ஆலோசியுங்கள்.

இந்து ராஜாக்களின் மனதில் யாகத்தை நிறைத்த இதிகாச உபதேசங்களை இன்னும் கேளுங்கள். அவிட்சின் புத்திரனானமருத்தனென்னும் அரசன் செய்த யாகத்தில் இந்திரன், வருணன், பிரகஸ்பதி முதலிய தேவர்களும், சிருட்டி கர்த்தாக்களும் பிரத்தியட்சமாக வந்தார்கள். இவன் செய்த யாகங்களில் தேவேந்திரன் வெட்கப்பட்டான். பிரகஸ்பதியை விட்டு யாகம் செய்யாமலிருக்கச் சொன்னான். சொல்லியும் கேளாமல் பிரகஸ்பதியின் தம்பியான ஸம்வர்த்தரென்னும் ரிஷிபால்மருத்தன் அநேக யாகங்களைச் செய்தான். அந்த யாகத்தின் விசேடத்தால் அவன் ராஜ்யத்தில் பூமி, உழவு முதலிய வேலையின்றியே பயிர்கள் வளர்ந்து செழித்தன. வசுதேவர்கள் ஸதஸ்யர்களாகவும், மருத்தென்னும் தேவர்கள் ஸோமபானம் செய்யும் ரித்விக்குகளாகவும், சாத்தியர்களும் மற்ற தேவர்களும் பரிசாரர்களாகவுமிருந்தார்கள். அவன் கொடுத்ததட்சணையோ அனந்தம்.

விதிதன் புத்திரனான சுகோத்திரன் என்னும் அரசன் செய்த யாகத்தில் இவனுடைய பிரியத்திற்காக இந்திரன் ஒருவருடம் பொன்மாரி பெய்வித்தான். ஆறுகளில் பொன்னீரோடிற்று. இந்திரன் ஆறுகளில் மீன், நண்டு, ஆமை, முதலை, திமிங்கலம் இவைகளை பொன்னுருவமுள்ளதாகப்படைத்தான். இவ்விதம் நிரம்பிய அளவிலாத சுவர்ணத்தை யாகத்தில் பிராமணர்களுக்கு அளித்துவிட்டான்.

பிருகத்ரதனென்னும் அரசன் செய்த யாகத்தில் வெண்ணிறமான பத்துலட்சம்குதிரைகளையும், சுவர்ண ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பத்து லட்சம் கன்னிகைகளையும் தானம்செய்தான். பின்தான் விஸ்தாரமாகச்செய்த யாகத்தில் பத்ம மாலையணிந்த பத்து லட்சம் யானைகளையும் ஆயிரமாயிரம் பசுக்களையும் அதைத் தொடர்ந்த கோடிகாளைகளையும் தட்சணையாகக் கொடுத்தான்.

உசினன் புத்திரனான சிபிஎன்னும் அரசன் காட்டிலிருக்கும் பசுக்களோடுதனக்குள்ளபசுக்களையும்குதிரைகளை யாவற்றையும் யாகத்திற்காக தானம் செய்தான். இந்த அரசனைப்போல் யாகம்செய்வதற்கு வேறு அரசர்உண்டாகப்போவதில்லை என்று பிர்மதேவர் நினைத்தார்.

துஷ்யந்தனுக்கு சகுந்தலையிடம் பிறந்த பரதன் தேவர்களைக்குறித்து யமுனைக்கரையில் முன்னூறும் சரஸ்வதிக்கரையில் இருபதும், கங்கைக் கரையில் பதினான்கும் மற்ற இடங்களில் "பலவுமாக ஆயிரம் யாகங்கள் செய்தான். நூறு ராஜசூயயாகங்களும் செய்தான் அவன் பிராமணர்களுக்குச்செய்ததானத்தைப் போலும் கொடுத்ததட்சணையைப்போலும் யார் கொடுப்பார்கள்?]

பகீரதன் என்னும் அரசனுடைய விஸ்தாரமான யாகத்தில் இந்திரன் ஸோமரசத்தைக்குடித்து மதம்பெருகித்தன் கைவன்மையால் பல்லாயிரம் அசுரர்களை ஜெயித்தான். அந்த பகீரதன் தன் யாகத்தில் ஆபரணம் பூண்டபத்துலட்சம் கன்னிகைகளை தானமாகக் கொடுத்தான். தானம் கொடுத்த ஒவ்வொரு கன்னிகைக்கும் நான்கு குதிரைகள் கட்டிய ஒவ்வொரு ரதமும், ஒவ்வொரு ரதத்தைப்பின் தொடர சுவர்ண ஆபரணம்பூண்ட நூறுயானைகளும்யானைகட்குப்பின் ஆயிரம்குதிரைகளும் ஒவ்வொரு குதிரைக்குப் பின் ஆயிரம் பசுக்களும், ஒவ்வொரு பசுவிற்குப்பின் ஆயிரம் ஆடுகளும் பிராமணர்களுக்குத தானம்கொடுத்தான். அவன் மடியில்தான் கெங்கைகுழந்தைபோல் உட்கார்ந்திருந்தாள். கெங்கை துடையின்மீது உட்கார்ந்தகாரணத்தால் கங்கை ஊர்வசி யென்னும் பெயருள்ளவளாள். மூவுலகையும் பரிசுத்தம் செய்யும் கங்கையும் அதிக தட்சணையுள்ள யாகங்களைச் செய்து பகீரதனுக்குப் பெண்ணானாள்.

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

# இதிகாசங்கள்

## இராமாயணம்—சுந்தர காண்டம்

### கட்டுரை—5

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

**சருக்கங்கள் 18 முதல் 22 முடிய:-**

விடியச் சிறிது நேரம் இருந்தது. அப்போது இனிய இசையொலி கேட்டு இராவணன் விழித்துக் கொண்டான். அவன் சீதையை நினைத்துக் கொண்டு பேராசையுடன் அவளைக் காணப் புறப்பட்டான். அப்போது அவனுடைய மனைவியர் அவனிடத்தில் வைத்த பிரியத்தாலும் மரியாதையாலும் பின் தொடர்ந்தார்கள், பல பெண்கள் ஒளி மிகுந்த விளக்குகளைப் பிடித்துக் கொண்டு முன்னே சென்றார்கள். இராவணன் மன்மதனைப் போல் பேரழகுடன் விளங்கினான். இப்படி பல பராக்கிரமங்கள் முதலிய குணங்களில் ஒப்பற்றானும் பிறரால் செய்ய முடியாத காரியங்களைச் செய்து முடித்தவனும் தூரத்தில் வந்து கொண்டிருந்தாலும் பேரழகு விளக்கத்தால் மிகச் சிட்ட உருவினனைப் போல் தோன்றுகிறவனுமான இராவணனை அனுமான் கண்டு நன்றாய்ப் பார்க்க வேண்டுமென்று கிழ்க்கிளையில் இறங்கினான். பலத்திலும் ஒளியிலும் சிறந்தவனான அனுமானும் இராவணனுடைய ஒளிக்கு முன் நிற்க முடியவில்லை. ஆகையால் அனுமான் "எல்லா மாயைகளுக்கும் நிதியான இராவணனுக்கெதிரில் நமது நுண்ணிய உருவம் பயன்படாது" என்று எண்ணி உடனே இலைகளடர்ந்த கிளைகளில் மறைந்தான். இராவணன் கருங்குழலும் நெருங்கிய கொங்கையும் அழகிய அல்குலுமுடைய சீதையைப் பார்க்க அணுகினான்.

பேரழகும் இளமையும் வாய்ந்த அரக்கர்பெருமானைச் சீதை கண்டு நடுங்கி தன் வயிற்றைத் துடைகளினாலும் கொங்கைகளைக் கைகளினாலும் மறைத்துக்கொண்டு அழுதாள். அவள் மாசு படிந்த மேனியளாயினும் பேரழகுடன் விளங்கினாள். அவளை நோக்கி மிகவும் இனிய சொற்களால் இராவணன், "காதலி! யானைத் துதிக்கை போன்ற அடையுடையாளே! உன் வயிற்றையும் கொங்கைகளையும் ஏன் மூடிக் கொள்கின்றாய்? உனக்கு என்மேல் பிரியமுண்டாகாத வரையில் உன்னைத்தொடேன். வீணாய் உன்னைக் கெடுத்துக் கொள்ளாதே. என்னை வெல்வார் உளரோ? இங்கிருக்கும் புலால், கள்முதலியவைகளை உன்மனம்போல் உண், நீ என்னை மணந்து கொண்டால் இங்கு எல்லோரையும் ஏவிக் கொண்டு இனிது வாழலாம். அநாதையாகக் காட்டில் அலையும் இராமனால் என்ன முடியும்? முன் இரணியகசிபு தவம் செய்து கொண்டிருக்கையில், அவனுடைய கருப்பிணியான மனைவியை இந்திரன் கொல்லப்பார்த்தான். அப்பொழுது நாரதன் தடுத்தான். அதுபோல் உன்னை இராமனால் அடைய முடியாது. நீ என்னைக் கூடி இன்புறுக. உன் உறவினரை வாழ்விப்பேன்" என்றனன்,

சீதை ஒரு துரும்பை அவனுக்கும் தனக்கும் நடுவே போட்டு புன்சிரிப்புடன் பின்வருமாறு கூறினள். "நீ உனது மனைவியரைப் பாதுகாப்பவன்; என்னை அணுகலாமா? உனக்கு நல்லறிவு கூற வீடணன், மாலியவான் முதலியோர் உளரே! திருமாலின் தோற்றமாகிய இராமனுக்குச் சீதேவியாகிய நான் மனைவி. நான் பிறரை மணப்பேனோ? நீ இராமனைச் சரணமடைந்தால் பிழைப்பாய். இல்லையானால் உன்னை இராமன் கொல்லாமல் விடான்." இதைக் கேட்ட இராவணன், "என் மனம் புண்ணாகும்படி பேசிய உன்னைக் கொல்வேன், உன்மேலுள்ள ஆசை தடுக்கிறது. நான் கெடுவைத்த பன்னிரண்டு மாதங்களில் இரண்டுமாதங்களே உள. அதற்குள் என்னைச் சேராவிட்டால் மறுநாளே என் சமையற்காரர் உன்னைக் கொன்று சமைப்பார்கள்" என்றனன். தேவ கந்தர்வப் பெண்கள் சிலர் ஜாடை காட்டிச் சீதையைத் தேற்றினர். சீதை, "என்னிடம் தகாத பேசும் உன்னைச் சுட்டெரிப்பேன். ஆனால், இராமன் எனக்கு அவ்வாறு கட்டளையிடவில்லை. குபேரனுடைய தம்பியும் வீரனுமாகிய நீ என் இராமனை மோசஞ் செய்து என்னைத் திருடி வந்தாய்?" என வினவினள்.

இராவணன் மிகச் சீற்றங் கொண்டு, "நீதி நெறியில்லாமல் பொருளிழந்து திரியும் இராமனை எண்ணும் உன்னை இப்போதே கொல்வேன்" எனக்கூறி அங்கிருந்த காக்கற்றவள், சிங்கமுகத்தினள் பன்றிமுகத்தினள் முதலிய அரக்கியரை நோக்கி, "இவளை ஒத்து நடந்தும், ஒவ்வாது நடந்தும், கொடுத்தும், ஒறுக்க முயன்றும் வசப்படுத்துங்கள்" என்று கட்டளையிட்டு சீதையை அடிக்கடி மிரட்டினான். அப்போது அவனது மனைவியான தானியமாலி அவனை இறுகத்தழுவி, "தலைவரே! என்னைக் கூட வாரும். முகம்வெளுத்து விகாரமாக இருக்கும் இவளிடத்தில்என்ன இன்பம் அடையப்போகிறீர்?" எனச் சொல்லி இழுத்துக்கொண்டு போனாள். அதனால் சினம் தணிந்து இராவணன் தன் மனைவியர் சூழ தனது அந்தப்புரத்தை அடைந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராவணன் விடியுமுன்னரே இன்னிசைகேட்டுவிழித்துக்கொண்டான். இதனால் அவன் உத்தமமான ஒழுக்கமுறையுடையவன் என்பது விளங்குகிறது. வால்மீகி அவனை மன்மதனைப்போலப் பேரழகுடையவனென்னும் பல பராக்கிரம முதலிய குணங்களில் ஒப்பற்றவனென்றும், அவனுடைய பேரழகுவிளக்கம் ஒப்பும் உயர்வும் அற்று விளங்கியதென்றும்கூறுகிறார். ஆதலின் இவனைப்பற்றித்தீயவனெனத் தற்காலத்தில் மக்கள்நினைப்பதற்கு யாதொருஆதாரமும் இல்லை. மேலும் அவன் பிறரால் செய்யமுடியாத காரியங்களைச் செய்துமுடித்தவனென்றும் வால்மீகி கூறுகிறார். செய்கிறதற்கு அருமையான காரியங்களைச் செய்து முடிப்பதே பெரியார் இயற்கை. தெய்வப் புலவர் திருவள்ளுவ நாயனாரும்,

"செயற்கரிய செய்வர்பெரியர்சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

எனக் கட்டளையிட்டனர். ஆதலின் செயற்கரிய செய்த பெரியவனாகிய இராவணேச்வரனைப்பற்றி தற்காலத்தில்மக்கள் சிறுமைப்படப்பேசுவதற்கு காரணம்கோழுப்புத் தடித்த ஆரியர் சிலர் வேண்டுமென்று இராவணனுக்கு இழுக்குண்டாக்கக்கூடிய முறையில் வால்மீகி எழுதியஇராமாயணத்தைச் சிதைத்தும், அடித்தும், திருத்தியும், புதுவது புகுத்தியும் செய்துவிட்டனர். இதனை முன்னரே விளக்கினேம். பின்னரும் விளக்குவோம்.

பலத்திலும் ஒளியிலும் சிறந்தவனான அனுமானும் இராவணனுடைய ஒளிக்குமுன் நிற்கமுடியாமல் கலங்கி எல்லா மாயைகளுக்கும் நிதியான இராவணனுக்கெதிரில் நமது நுண்ணிய உருவம்பயன்படாதெனத் துணிந்து கிளைகளில்மறைந்துகொண்டனனும்! என்னே இராவணனுடைய பெருமை? அறிஞரே! சிந்தித்துணருங்கள். மாற்றார் பேச்சையும் கோடரிக்காம்புகளின் பேச்சையும் செவிகொடுத்துக்கேளாதீர்.

இராவணனைக் கண்ட சீதைதன் வயிற்றைத் துடைகளினாலும் கொங்கைகளைக் கைகளினாலும் மறைத்துக் கொண்டனள். இராவணனும் அவளைக்கண்டு அவளுடைய அடையை நோக்கி "யானைத் துதிக்கைபோன்ற அடையுடையாய்! ஏன் அவைகளை மறைத்துக்கொள்கிறாய்' எனவினவுகிறான். இதனால்சீதை அப்போது இருந்தகோலம்வெளிப்படை. துடைகளும் வயிறும், கொங்கையும் தெரிய இருந்த சீதையையே அனுமான்அடிக்கடி உற்று நோக்கி, இராமன் கூறியாங்கு ஆராய்ந்தனன் போலும். அனுமான்அவைகளை எக்கண் கொண்டு ஆராய்ந்தானோ?

இராவணன் "உனக்கு என் மேல் பிரியமுண்டாகாத வரையில் உன்னை தொடேன்' என்று கூறினன். இது அவன் அவளைத்தொட்டெடுத்துமான பங்கம் செய்து இலங்கையில் பல இடங்களுக்கும் அவளை இழுத்துப் போயினன் எனமுன்னர் நம்பார்த்த செய்திக்கு மாறாக உள்ளது. இது சீதையின் கற்புடைமையைக் காக்க பிற்கால ஆரியர் செய்தமாற்றமோ அன்றி உத்தமனான இராவணன் தான் அவளைத்தொட்டெடுத்து வந்திருந்தாலும் மானபங்கம் செய்யாமல் அவள் மனமறிந்து கூடலாமென எண்ணியிருந்தானோ தெரியவில்லை. இராவணன் சீதையினுடைய குணத்தை அறிந்துகொண்டு "புலால்கள்முதலியவைகளை உன்மனம்போல் உண்" என்று கூறுகிறான்.

கொலைபாதகனும் பெண்களைக் கெடுக்கும் பாவியுமாகிய இந்திரனைப்பற்றி இங்கொரு செய்திகாணப்படுகிறது. இரணியன் தவம்செய்து கொண்டிருக்கிற சமயம் பார்த்து இந்திரன் அவனுடைய அரண்மனையையடைந்து இரணியனுடைய கருக்கொண்ட மனைவியைக்கொல்ல முயன்றானும்! என்னே இப்பாவியினுடைய தீச்செயல்! இப்பாவிக்காகத் திருமால் நரசிங்கமாய் வந்து இரணியனைக்கொன்றானும்! தெய்வங்களின் இயற்கை மிக அழகிதே!

திருமாலே இராமனென்றும் சீதேவியேதானென்றும்சீதைகூறுகிறாள். இதனை அவள் எவ்வணம் உணர்ந்தாளோ? தெய்வமாகிய திருமாலுக்கு இராமனாகப் பிறந்து மனைவியைப் பறிகொடுத்துத் திண்டாடவேண்டிய காலமும் வந்ததோ? சீதை இராவணனைநோக்கி, "உன்னைச்சுட்டெரிப்பேன். இராமன் ஆணை தராததாலேயே சும்மா இருக்கிறேன்." என்று கூறினளாம்! இராமனுடைய ஆணை எதற்கு இராமன்? ஆணையினாலேயே இராவணன் ஆக்கியதறுகு உடன் பட்டு ஆடையுமில்லாமல் அவள் இருந்தனள் போலும்!

அரக்கியர் பலர் சிங்கம பன்றி போன்ற முகமுடையவராகவும், நாக்கில்லாதவராகவும் இருந்தனராம். இதைப்பற்றி முன்னரே விவரித்தோம். நாக்கற்றவராயிருப்பது எப்படியோ? ஆரியர் புரளியே புரளி!

தானியமாலி "முகம்வெளுத்து விகாரமாயிருக்கும் இவளிடத்தில் என்ன இன்பம்அடையப்போகிறீர்?" என இராவணனை அழைத்து சென்றனளாம். ஆரணியகாண்டத்தில் சூர்ப்பணகையைப்பற்றிக் கூறுமிடத்து, சீதையினுடைய இயற்கைகளை விவரித்தோம். சீதையது முதிர்ந்தவளாகிய விகாரமாக இருந்தாளென்று நாம் அங்கே எடுத்தியம்பியது இதனால் வலியுறுகின்றது. இனி கம்பர் புரளியைக் காண்பாம்.

வால்மீகி இராவணனைப் பற்றிப் புகழ்ந்து கூறும் இடங்களையெல்லாம் கம்பர் மறைத்தார். இராவணனது உண்மையான இயல்புகளையும் அனுமான் அவனைப்பற்றிப்

(17-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

## சாத்திரங்களின் ஆபாசம்

(ஏ. டி. நாயகம்)

சகோதர சகோதரிகாள்!

விந்தையினும் விந்தை! நினைக்கவும், எழுதவும், ஆரம்பிக்கும்போதே ஐயோ, என் சிரிப்பை அடக்கமுடியவில்லை. இத்தனை ஆபாசத்தையும் பூர்வ அறிஞர்கள் எவ்வாறு மனஞ்சகித்து ஏற்று அவற்றை ஆதரித்தனரென்னும் விடயமே என் ஓயா நகைப்புக்குக் காரணமாயிற்று. சாத்திரங்களாம். அவற்றின் வழி ஒழுகாவிடின், தவறும். சாத்திரங்களின் உறுப்புகள்தானெத்தனை? அந்தோ! எண்ணத்தொலையாதன. இறக்கை தட்டி இந்தியாவில் வட்டமிட்டேழை மக்களின் வாயில் மண்ணைச்செலுத்தின-செலுத்துகின்றன. இனிமேலாவது அவ்விதம் செலுத்த விடாமல் முயற்சித்தால் இன்று முதலாவது அக்கொடிய சாத்திரக்கட்டுகள் என்னும் ஆபத்தின் பொறிவாயினின்றும் தப்பலாம். இன்றேல் ஏதேது? நாம் சடைத்தேறோம். இது திண்ணம்! திண்ணம்!! பார்வைக்குற்றமாம்; பில்லி சூனியமாம்; கோடாங்கியாம். குறியாம்; இரசவாதமாம்; கோவில்களாம்; அவற்றில் மேலான சாமிகளாம்; அவைகட்குத் தோத்திரங்களாம்; சாதிகளாம்; தீட்டுகளாம்; அதிலும் பலவிதத் தீட்டுகளாம்; அதற்கும் பரிகாரங்களாம்! என்னகொடுமை? எண்ணத்தொலையாத அத்தனையுமெழுதத்தான் முடியுமா? இவ்வாண்டு முழுதும் இரவும் பகலும்விழித்திருந்து ஓயாமல்வாயாற் கூறிக்கொண்டே யிருப்பினுந்தான் முடியக்கூடியதா? நிற்க;) என் அனுபவத்தில்தெரிந்துகொண்ட ஓர் நிகழ்ச்சியைக் கூறிப் பின் மேற்செல்லுகின்றேன். என் ஊருக்குச் சமீபத்தில் ஓர் கிராமத்தில் ஓர் பெரிய கட்டிடத்தில் "சாமிகளின் உருவங்கள் எனப்படும் பல அழகிய உருவங்கள் எழுதப்பட்ட கண்ணாடிப் படங்களை வரிசை வரிசையாயமைத்துப் பிரதி சனிக்கிழமைகளிலும் இரவு முன்னேரத்தில் சிலர் கூட்டங் கூடி சங்கீதங்களை மிக இனிமையாகப் பாடுவர். அவர்களிலொருவர், நம் நண்பர் 'கந்தப்பன்' என்பவர் மற்றெல்லோரினும் மிக இன்னிசையுடன் பாடுந் திறமையுடையவர். இவருக்கிணையாக இப்பிரதேசத்தில் எவரும் 'ரவை' 'பொடி'கள் வைத்துப் பாடவியலாது என்பதே இவ்வூரின் தீர்மானம். ஆகவே, ஓர்நாள் நம் நண்பர் கந்தப்பன் இனிய குரலுடன் பாடுவதை அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பெரியாரொருவர், "நம் கந்தப்பன் கண்ட சாரீரம் எவ்விருந்துதானமைந்ததோ? நேற்று அவன்-பாட்டின் அருமை—அப்பப்பா! என்ன [illegible] ஓசைது? [illegible] இத்தகைய இனிய குரலமைந்த பாக்கியசாலிகள் இவனொருவனேயன்றி வேறெவருமிராரென்றே கூறலாம்" எனக்கூறி ஆச்சரியமுற்றார். இப்பெரியவரடைந்த ஆச்சரியத்தினின்றும் அவ்வூராரும் அவனைப் புகழ்ந்தனர். மறுநாளே கந்தப்பன், கண் திருஷ்டியால்தன்தொண்டை கம்மிவிட்டதென்றும், நன்றாய்ப் பேச முடியவில்லையென்றும் கூறி யதமிக நொந்து படுக்கையிலிருந்தனன். அவன் வீட்டார், தங்கட்குத் தெரிந்த வரை ஔடதப் பிரயோகஞ் செய்தும் பலனிலாதொழியவே, பக்கத்திலுள்ள மற்றோர்கிராமத்தில்வசித்த 'பார்ப்பன'ரொருவர் கந்தப்பன்வீட்டில் வந்து அங்குள்ளாரை நோக்கி, "ஏன் வீணாய் வருந்துகின்றீர்கள்! பார்வைக் குற்றங்கள், யாவும் சாந்தியெனும் பரிகாரத்தின் முன்பஞ்செனப் பறக்குமே; அதிலும் திருஷ்டி சாந்தி மிக இலேசாயிற்றே; செலவும் ஐம்பது ரூபாய்க்கு மேற் போகாமல் பார்த்துக் கொள்ளலாம். சாந்தி பரிகாரத்தால் நிவர்த்தியாகாக் குற்றங்களிவ்வுலகிலேது" என்றனர். கந்தப்பன் அக்கணமே ரூபாய்ஐம்பதைஅப் பார்ப்பனரிடமீந்து சாந்தி செய்ய வேண்டினன். பார்ப்பனப் பெரியார் கையிற் பணமேறவே என்னால் விவரிக்க வியலா முறையில் சிற்சில பொருள்கள் மூலமாயும்—மற்றும்—எப்படியோ, என்னமோ அப்பார்ப்பனர் தன் மனதைத் தானே அல்லது காசு கொடுத்த கந்தப்பனின் மனதைத் தானோ எதையோ முடிவாய்ச் சாந்தி செய்தாய் விட்டது. பார்ப்பனப் பெரியார் தன் வீடு சேர்ந்தார். கந்தப்பன் அன்று முதல் ஓர் விதசுகமடைந்தான். எத்தகைய சுகம்? முன்போல் பிரதி சனிவாரமும் பாடிக்கத்தித்தன் தொண்டையைப்புண்ணாக்கி அவஸ்தைப்படு முறைப் பிணியினின்றும் விடுபட்டான். ஏன்? பார்ப்பனப்பரிகாரத்தால் கந்தப்பன் தொண்டை நோய் குறையவில்லை. சாந்தியின் வல்லமை, சாந்தமடைந்து விட்டதுபோலும். கந்தப்பன்மேலும்மேலும்நோயினாற் துன்புறவே, இவ்வூரில் சுதேச வைத்திய முறைகளில் தேர்ந்த நிபுணராகிய திரு. நாராயணன் பண்டிதரின் பார்வையிலும் சிகிச்சையிலுமிருந்தான். அப்பண்டித வீரனுந் தன் வல்லமையால்அவன்சுக சன்னி நோயாற் பீடிக்கப்பட்டுள்ளனென அறிந்து தன்னரிய கைம்முறையாற் செய்தஔடதத்தால்தீர்த்துவிட்டனர். ஈதன்றோ உடக்குற்றங்களைதற்குவழி! பார்ப்பன சாந்தியாற் பயனென்னவாயிற்று? சகோதரர்காள்! கந்தப்பனுக்கு ரூபாய் ஐம்பது செலவு; பரிகாரியாகியபார்ப்பனனுக்கோ வீணாக வரவு ரூபாய் ஐம்பது. இவர்களிருவரிற் சமர்த்தன் யார்? பார்ப்பனனேஏமாற்றப்பட்டதுயார்? நம் கந்தப்பனே; ஐயோ இவ்வாறே பலபெயரால் பல சடங்குகளையும் ஏற்படுத்திப் பார்ப்பனர் நம்மை ஏமாற்றுகின்றனர். எல்லோருங்கண் விழித்துக்கொண்டிருங்கள்! சாந்தி எனப் பெயரிட்டு நம்மி[illegible] பறித்து அவர்களின் வயிற்றை வளர்ப்பதற்கே சாத்திரங்களையும் பரிகாரங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். இவ்விடயமாய் சுயமரியாதை இயக்கத் தனி வீரராம் நம் தலைவர் உயர்திரு ஈ. வெ. இராமசாமிப்பெரியாரின் கட்டுரைகளை யகத்திற்றெளிந்து நடக்கத்துணியின், பாட்டிப்பாவெது மிக வினிமை யென்று கூறிவிட்டால், கந்தப்பனின் தொண்டைக்குள் திருட்டிக் குற்றங்குடிபுகுந்து விடுகிறது. இனிமையாகப் பாடும் அவனின் குரல் நன்றாயில்லை யென்றாலோ நண்பன் கந்தப்பனுக்கு மிக்க மனவருத்தமே. கல்லெறிக்குத் தப்பினாலும் கண்ணெறிக்குத் தப்பமுடியாதாம்! தோட்டங்களிலும் வயல்களிலும் காய்த்துக் கொண்டிருக்கிற பயிர்களை எவனாயினும் ஊன்றிப் பார்த்தானேயானால் உடனே அப்பயிர்களும் பலன் குன்றி அழிந்து விடுமாம். இவை நம் பத்தக் கதையோ? முற்கூறியாங்கு பயனற்ற, கருத்தற்ற, அழகற்ற குற்றங்களையும் அவற்றின் வீணான பரிகாரங்களையும் கற்பித்த ஆரியரின்கூற்றை இன்னுமுண்மையென நம்பி மதியிழந்து பரிதவிக்க வேண்டாம். மனிதருக்கு இன்றியமையாதவையெனவமைந்த கண்களும் வாய்களும் போராடி மனிதருக்கே, 'திருட்டி' எனும் கேடு விளைத்தன வென்பது இயல்புக்கும் மாறுபட்டிருப்பதை உணருவீர்களாக. நன்றாய் ஒருவன் உரமிட்டுச்செய்யும் பயிரை மற்றொருவன் தன் கண்களாலூன்றிப் பார்த்தால்அப்பயிரின் விருத்தி குன்றி அழிந்து விடுமாம். பரிகாரம் செய்தால் மீண்டும் பயன் பெறுமாம். ஊன்றிப் பார்ப்பதால் பொருள்கள் கெடுவனவெனின், ஊன்றிப்பார்க்கப் பட்டனவும்படுகின்றனவும்படுவனவுமான பல பொருள்களிவ்வுலகினுள்ளனவன்றோ? அவையனைத்துமவ்வாறே திருட்டியாலழிகின்றனவா? சூரியனைப்பார்க்கிலும் ஒளியில் மிகுந்த பொருள் வேறேதுமில்லையே. அச்சூரியனைக் கண்ணாலொருவனூன்றிப்பார்த்து வாயால் "ஆ சூரியனின் ஒளிதானென்ன? எவ்வளவு பிரகாசமாயுள்ளது?" என்று கூறிவிட்டானேயானால் சூரியன் அழிந்து கலிந்து மெலிந்து நாசமாய் விடுமோ? மலையைப் பார்த்தொருவன், பெருமூச்செறிந்து, "ஆ இம்மலை எத்தனை பெரிது?" என்பானாயின் அம்மலையும் மெலிந்து மேனி வாடி யழிந்து விடுமோ? என்னே! மடைமை. இவ்வாறு பார்வையாலும், சொற்களாலும் பொருள்களை அழித்துவிடலாமெனின் எப்பொருள்தானின்று வரையிவ்வுலகில் நிலைத்து நிற்கவல்லது? இனிமேலும் நிலைக்கற்பாலது?

இம்மட்டோ? பில்லி சூனியமாம், .........அந்தோ, இவ்வயிற்றெரிச்சலை ஓரே அடியாய்க் கிளப்புவானேன்? அடுத்த வாரம் பேசிக்கொள்வோம்.

(தொடரும்)

---

[illegible]

— விளம்பரம் செய்தல்

## குடி அரசின் கொள்கை

(உறந்தை ப. இராமலிங்கம்)

நமது நிலதேக தத்துவங்கட்கு வேறாகச் சூட்சம தத்துவங்களென்பதின்றி, மாலிக்யூல்ஸ் ஆடோம்ஸ் முதலான அணுத்தொகுதிகளின் சேர்க்கையினாலேயே அளவிறந்த காரிய நாமரூபங்கள் தோன்றி, அவ்வணுக்களின் பிரிதலாலேயே அக்காரியங்களின் நாசமும் நமக்குக் கண்கூடாகின்றது.

இக்காரியங்கட்குக் காரணமாயுள்ள அணுத்தொகுதிகளின் போக்குவரத்து சேர்க்கை பிரிதலாதிய இயக்கங்கட்கு ஆக்ஸிஜன் ஹைட்ரோஜன் ஈதர் எலெக்ட்ரான்ஸ், ரேடியம், மாக்னடிஸம் முதலிய ஆகாச பதார்த்தங்கள் அவைகளின் அகம்புறத்தும் அணுகுதமாயிருந்து வருகின்றன.

இச்சரீரத்துள் நினைத்தல் நிச்சயித்தல், சிந்தித்தல் அபிமானித்தலாதிய அறிவுத்தன்மை தர்மங்களனைத்தும் ஆகாசாதிய அணுக்களின் சேர்க்கை விசேட தொழிற்குண, தோற்றற்குண பண்பேயொழிய, இவற்றிற்குவேறாக சூட்சம திரவிய பதார்த்தம் அன்று. அவ்வறிவு சக்திகளனைத்தும மூளையின் ஏற்றக்குறைவின் பரிபக்குவ விசேடமேயாம், என நமது தேசத்திய லோகாயுதர் சார்வாகரர்களும் மேல்தேசத்தில்ஹாமில்ன்கோம்டே, நீரோ, மாண்செல், டார்வின், கிப்பன், ஹ்யூம், ரீட், பக்லி, ஹக்ஸிலி. டிண்டால், ஸ்பென்லர், வால்டயர், லெக்கி, ஸ்டீபன், காலின்ஸ், வெயின், ஜே. எஸ். மில், பிராட்லா முதலானோர்கள் சித்தாந்தம் செய்திருந்தார்கள். பின்னர் அந்த மூளையின் ஓர் பாகத்தில் "ஞாபக மர்த்தனி" யென்னும் நோய் தோன்றி அம்மூளையை அசேதனமாய் நின்று கொண்டு போம்பொழுது வாக்கால் வசனிக்க முடியாதிருந்ததே யன்றி அறிவு சக்தி அழிந்ததாகக் காணாமையால், இந்த அறிவு சக்தியானதுகேவலம் மூளையின் விசேட குணமாகாமல் அதற்கு வேறான பதார்த்தமாகவே இருக்கவேண்டுமென்பதாக அப்பண்டிதர்களிற் சிலரும் சொல்லி இருக்கின்றார்கள்.

ஒரு ஈர்க்கை வெகு சுலபமாய் ஒடித்துவிடலாம். ஆயிரக்கணக்கான ஈர்க்குகள் சேர்ந்து ஓர் கட்டாயிருப்பதை அவ்வளவு சுலபமா யொழிக்கச் சாத்தியமாயதில்லை. காரணம், இவைகளின் சேர்க்கை விசேடமே. ஓர் பெருஞ்சக்தியாய் நிகழ்கின்றது. இங்ஙனே பார்த வெளியின்கண் [illegible] நாமரூபங்களின் சேர்க்கையால் விளையும் இவ்வுலகு சூரியன் சந்திரன் நட்சத்திரங்களாகிய [illegible] புறத்தும் [illegible] ரேடியம், மாக்னடிஸம் முதலியனவும்

இதுவரையில் இப்பண்டிதர்களால் கண்டுபிடிக்க முடியாத இன்னுமெத்தனையோ சக்திகள் வாய்ந்த அணுத்தொகுதிகளிருக்கலாகும். இவைகளனைத்தும் கேவல ஜட பதார்த்தங்களாகவே இருப்பின் இவைகளின் சக்தியும் ஜட சக்தியாக இருக்கலாமேயன்றி அறிவு சக்தி யாகாதின்று.

சாணம் முதலிய ஜடப்பொருள்களினின்றே புழு முதலிய பல்வேற ஜந்துக்களுண்டாவதாகக் கூறின்; அவைகளின் உடற்பாகமே அங்ஙனம் பரிணமிப்பதன்றி உயிர்பாகம் உற்பத்தியாவதின்று. இக்காலத்து மேற்கத்தியர்கள் எவ்வளவோ அற்புத இயந்திரங்களையும், அதிசய மனிதப் பிரதிமைகளையு முண்டுபண்ணியபோதினும், அதனிடத்துநினைத்துப் பகுத்துணரும் மனிதனின் அரிய அறிவு சக்தியை அமையச் செய்வது அசாத்தியமாகவே முடிகின்றது.

இந்த அறிவு சக்தியின் சிறப்புணர்வுமொரு படித்தாய் இன்றிப் பல படித்தாயும் பலவித மாற்றத்தோடு போக்கு வரத்துத் தன்மையும் பொருந்தியதாயிருப்பதால், அதுவும் அணுத்தொகுதிகளின் சேர்க்கை விசேடமெனவே செப்ப வேண்டும். ஆனால், அவ்வணுப் பதார்த்தங்களைக் கேவலம் சேதன சொரூபமெனவும், கேவலம் ஜட சொரூபமெனவும் சொல்லவியலாது. இவ்வறிவு சக்தியும் ஒவ்வொரு சரீரத்திலும்வெவ்வேறாகவே தோற்றி சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய ஜீவர்களென அழைக்கப்படுகின்றது. இந்த அறிவின் எண்ணவெழுதலுக்கிணங்கி, நமது தேகத்தின் சில பகுதிகள் அசைந்திளகித் தொழில் புரிகின்றன. சில பகுதிகளோ (சுவாசப் போக்குவரத்து, இருதயத் துடிப்பு, நாடியோட்டம் முதலியன) இணங்குவதின்று. இவ்வண்ணம் நிகழ்வதையே கிழக்கத்தியரும் மேற்கத்தியரும் முறையே மானிட சக்தி என்றும், தெய்வீக சக்தியென்றும் தெரிவித்து வந்தார்கள். இந்தியாவினின்று மேனாடு சென்ற யோகிகள், எதுவெது மனித சக்தியால் அடக்கியாள முடியாதென்று சாதித்தார்களோ, அவைகளை மனித சக்தியினுலேயே அடக்கியாளக் கூடுமென்று அறிவித்து, அங்ஙனே அடக்கியாண்டு காண்பித்து, இதுவரையிலும் மேனாட்டார் கொண்டிருந்த சித்தாந்தத்தை அடியோடு பெயர்த்தெறிந்து விட்டார்கள். இதனாலே மக்களிடத்துள்ள சிற்றறிவும், சிறு தொழிலுமுடைய தத்துவமே பேரறிவும் பேராற்றலுமுடைய தெய்வீக சக்தியாகத் திகழ்வதாகின்றதேயன்றி, இதற்கு வேறாக அவ்வியப் பழப்புகளோடு ஓர் அரிய புருஷவிசேடமிருந்து, அடியார்களின் வந்தனை வழிபாட்டிற்கு அகமகிழ்ந்து அனுக்கிரகம் புரியவோ, அன்றும், அவ்வாறு [illegible] திருமேனிதாங்கி தருக்கோவில்களிலெழுந்தருளி ஆங்காலமும் அன்னம் முதலியன புசித்துத்தான் தனித்திருக்க முடியாது தனக்குத் துணையாக இரண்டு மூன்று அம்மன்களைத் திருக்கலியாணம் முதலியன செய்து கொண்டு சில மக்களைப் பெற்றும் பெரும் குடும்பியாகி, அக்குடும்பத்தை நிர்வகிக்க முடியாது பிச்சையேற்றும்,மண் சுமந்தும், மாரனிடம் அடியுண்பட்டு அல்லற்படுவதாகக் கூறுவது ஆராய்ச்சியிகுந்த அறிஞர்கட்கழகல்லவென்றும் குடிஅரசு கூறுகின்றதேயன்றி, அவ்வறிவு பதார்த்தத்தையும் ஒரே அடியால் இன்றெனவே நாத்திகப் பிரசாரம் செய்து பொதுமக்கள் அறிவையும் பக்தியையும்நாசப்படுத்த வந்ததன்று.

பசுவின் சரீரத்தில் பாலானது பரவி இருப்பினும் அதன் மடியின் வழியாகவே பாலிறங்குவதுபோல சர்வத்திரபரி பூரணராயுள்ள பரமன் விக்கிரகத்தின் வாயிலாகவே வெளிப்படுதற்கு விக்கிரகவாராதனையும் இன்றியமையாததென்னில், அவர் பள்ளியறைக்குச் சென்று படுத்துறங்குகையில் கர்ப்ப கிரகத்தில் அவர் உண்டா? இன்று? உண்டெனில்,அர்த்த சாமம் முடிந்தபின்னர் அறைக்கதவைச் சாற்றியேன் தாளிடவேண்டும்? அங்கின்றெனில் அக்கடவுளை விக்கிரகத்தில் புகுத்துவதும் அதினின்று வெளிப்படுத்துவதும் அர்ச்சகனே யாவதால், அக்கடவுளையும் மனிதன் சிருட்டிக்கிறானேயன்றி இவனுக்கு வேறாகக் கடவுளிருக்கிறாரென்பது எவ்வளவு ஏமாற்றமாகின்றது. இவ்வண்ணமாய்கடவுள் ஆராய்ச்சியுற்ற எவ்வறிஞனும்யேற்க இயலாமையை முன்னிட்டே கடவுளை நம்பிக் காசைத் தொலைக்காதே என்று கூறுவதில் யாது குறையுளது?

மேற்கூறிய ஆத்திகக் கொள்கை குடிஅரசு பத்திராதிபருக்குக் கொஞ்சமேனும் உடன்பாடின்றி தூலதத்துவங்கட்கு வேறான சூட்சமதத்துவமே கிடையாதென்று அவர் நாத்திகப் பிரசாரந்தானே செய்கின்றாரென்று சிலர் கூறுகின்றார்கள்.

நமது கண் முதலிய இந்திரியங்களுக்குக் கோசரமாகாது. சூட்சுமமாயும் தூரத்திருப்பதையும் பூதக்கண்ணாடி தூரதிருஷ்டிக்கண்ணாடியாகிய கருவியின் துணையால் காணக்கூடியதை எவரும் இல்லையென்று சொல்ல வியலாமை போன்று, எப்பதார்த்தங்களையும் ஆய்ந்தறியும் அறிவுப் பொருள் இத்தேகத்துக்கு வேறாக இல்லையென்று சாதிக்கிறாரென்பது அசங்கதமே யென்பதற்குப் போதிய சான்று 1929 ஜூலை 28ந் தேதியிலும் ஆகஸ்டு 11ந் தேதியிலும் அவரால் எழுதப்பெற்றுள்ள (கடவுளும் மதமும்) என்னும் கட்டுரையைக் கவனிப்போர்க்கு நன்கு விளங்கும். அஃது வருமாறு:- "கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்கள் அறிவு ஆற்றல் இன்பமடைதற்குத் தடையாயமைந்துள்ள மத, சம்பிரதாயக் கட்டுப்பாடுகளை உடைத்து, விடுதலையடையச் செய்யவேண்டிப் பிரசாரம் செய்து அது சிறிது தலை தூக்கி வரும்பொழுது, அரசியல் தேசிய வாதிகளின் பேரால் பிழைக்கும்பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதாரிற் சிலரும் சமயம், புராணம், சங்கம், பிரசங்கமாதிகளால் வயிறு வளர்க்கும் சில பண்டிதர்களும், நமது இயக்கத்தைத் தடுக்கக் கடவுளையும், மதத்தையும், பற்றிய குழப்பக்கொள்கைகளைக் கண் மூடித்தனமாய்க்கொண்டுள்ள சில பொது மக்களின் ஆதரவைக் கொண்டு புராணிகளின் மூலம் அவர்களது புத்தியபிவிர்த்தியைத் தடுக்க முன்வந்தவர்களை முன்னிட்டே கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேசநேர்ந்ததேயன்றி மற்றபடி அவைகளில் நமக்கு யாதும் கவலை இல்லை". என்று எழுதியிருக்கிறார். ஆனால், காரியங்களின் உண்மையைக் கண்டுணர முடியாத அறியாப்பருவத்தில் வழக்கப்பழக்கத்தில் வந்துள்ள தன்னிலும் வேறாயுள்ள கடவுள் செயலெனவே கொண்டிருந்த கொள்கைகள், பின்னர் அதன் உண்மைகளைக் கல்வி கேள்வியினுலும் பிரத்தியக்ஷ அனுபவத்தினுலும் கண்டறிந்த காலத்து அறிவிற்கு முன்னும் பின்னும் உலகையும் கடவுளையும் உளதெனக் காட்ட முடியாமையால், அக்கடவுள் சக்தியில் நம்பிக்கைத் தானே நழுவி தனது அறிவு மாற்றலுமே மேம்பாடடைகின்றன. அவ்வறிவின் அபிவிர்த்தியினுலேயே "போறிவினுனி வாழாமை பொய்" என்ற பிரமாணத்தால், துக்க நிவர்த்தியும் சுகப்பிராப்தியும் உண்டாம். இச்சர் ஞான முயற்சிக்குத்தக்க பலனும பிராப்த மாகின்றது. இதைத் தடுக்கச் சில வைணவ, சைவ, சித்தாந்திகள், பூனைக்குட்டிக்குச் சமானமாயுள்ள நமது இச்சாபிரயத்தனத்தால் யாதும் முடித்துக்கொள்ள முடியாதிருக்கத் தாய் பூனைத் தன் குட்டிகளைக்கெளவி சில விடங்களில் வைத்துத் தூக்கிச் சென்று தனக்கு வசதியான விடத்தில் வைத்துக் காப்பாற்றுவது போல, எல்லாம் கடவுள் செயலாகவே நடைபெறுவதன்றி எதுவும் நம்மாலும் சாதிக்க முடியுமென்பது மூட அகங்காரத் தன்மையேயாம். "என்னல் மறைத்துவைக்கப்பெற்றுள்ள மாயையை, எவராலும் அகற்றிக்கொள்ள வியலாது" என்று பகவானே பகர்ந்திருப்பதால், அவனால் விதிக்கப் பெற்றுள்ள விதி விலக்குகளை உணர்ந்தொழுகும் அறிவும் ஆற்றலும்நமக்கின்மையால் சிவா, இராமா என்று ஒன்று இரண்டு முறை ஓதுவதாலும், விக்கிரகங்கட்கு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனைகள் செய்து, தினமும் ஆறுகாலம் பூசனைகளால் நைவேத்தியஞ் செய்தும், ஆடு, மாடு, கோழிகளை அவர் பேரால் கொன்று கொழுக்கப் புசித்தும் பைசா முதல் பதினாயிரக்கணக்கான உண்டியற் காணிக்கை செலுத்து மிடத்து அவரவர் போட்ட பணத்திற்குத் தக்க புண்ணிய பலன் பெறலாகுமென அக்காலத்து ஏழை மதியினரை ஏமாற்றியது போலவே, இக்காலத்து ஏமாற்றிப் பிழைப்பது நலமன்று. அக்காலத்து விஸ்வாமித்திராதியோர்கள் நம்போன்ற மக்களாகவே இருந்து அந்தர சொர்க்கமாதிகளைச் சிருஷ்டித்திருக்கின்றார்களெனினும், புராணங்களை நம்பும் புலமை மிகுந்த வைதிக சைவ சித்தாந்திகளும் வைணவ சித்தாந்திகளும் இப்பொழுது செத்தவர்களைப் பிழைக்கச் செய்யவும் இவ்வுலகிலிருந்து செவ்வாயுலகமும்அங்கிருந்து சந்திர உலகிற்குப் போக்கு வரத்தும் சம்பாஷணையும் சாத்தியமாகுமென்பதைக் கேள்வியுற்றும், மனிதன் எப்பொழுதும் பரதந்திரப் பசு அடிமையாயிருக்க வேண்டுமே யொழிய, சுதந்தர சுயமரியாதையுடையோனுயிருத்தலியலாது என்று சாஸ்திரம் பேசியும், அனுமார் குட்டிக்குரங்காயிருக்குங் காலத்து இவ்வுலகிற்கு எத்தனையோ லட்சக் கணக்கான மைல் தூரத்திற்கப்பால் உதயமான சூரியனை மாங்கனியெனத் தாவிப்பிடிக்க அதுவோ ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கிர இரதத்தில்சாரதித்தியஞ்செய்யும் சூரிய பகவானுயிருக்கக் கண்டு, அந்த இரதத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே அவரிடம் நவவியாகரணம் நன்கு கற்றுப் பண்டித சிரேஷ்டராயிருந்தும், அநேக மலைகளை அடியோடு பிடுங்கி எறிந்தும் என்றுஞ் சாகா வரம் பெற்றும், இன்றும் நாளையும் எங்கு இராமாயணம் படித்துக் கேட்கின்றார்களோ அவர்களோடு தானும் இருந்து கேட்டுக் கொண்டு போகிறதைக் கண்ணுற்கண்டவர்களெத்தனையோ பேர் வழிகளிருந்தும், அவரை மந்திரசக்தியால் வசியப்படுத்தியும் அவருக்கு ஆலயங்களமைத்து அபிஷேகவலங்காரம் அர்ச்சனையாதிகளால் பூசித்து அநேக அபீஷ்டங்கள் அடையப் பெற்று, வருணச்சிரம தர்மத்தில் வழுவாதிருந்து வருவோர்கள், இவ்விந்தியாவை அடிமைத்தனத்தினின்றும் எவரும் விடுதலை செய்யாது கம்பர் கவியழகும் சேக்கிழார் செய்யுள் சிறப்பையும் காணக் காணத் தான் சுயராச்சியம் பெற்று சுயமரியாதையோடு சுகமாய் வாழலாகுமென்பதை எந்த நியாயத்தாலேற்கப்பாலதோ அறிகிலம்.

நமது தூல தேகத்துள்ள பலவித அவயவப்பகுதிகள் பல்வேறு வினைகளியற்றுதற்கு அவைகளில் அனுகூலமாயுள்ள பிராண சக்தி பலவாயிராமல் ஏகமாகவே இருப்பது போல, சர்வ சரீரத்தும் ஏக பரிபூரணமாயும் எவ்வித நாம ரூபமும் ஜட சேதத் தன்மையும்மற்றுமுள்ள பதார்த்தமே சரீர உபாதிகளின் வேறுபாட்டால் வெவ்வேறாய் விளங்குவதாக அறிய உபநிடதங்களும் ஆகமங்களின் உத்தர பாகமும் உரைப்பதைச் சுயநலமேவிட்ட குருக்கள் மறைத்து அதற்கு மாறாக ஜீவ நகர பேதமும், ஜீவ பரம்பர பேதமும் அநுஷ்டித்தியமாகவே யுளதென்றும், பழிப்படி

(இதின் தொடர்ச்சி 15-ல் பார்க்க)

# திருவல்லிக்கேணியில் யதீந்திரதாஸ் வாசகசாலை திறப்பு விழா

## திரு. ஈ. வெ. ராமசாமியின் சொற்பெருக்கு

21-11-29ந்தேதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி பைகிராப்ஸ் ரோட் திரு. வடூர் துரைசாமி அய்யங்கார் வீட்டு மேல்மாடியில் யதீந்திரதாஸ் இலவச வாசகசாலை என்னும் பெயரால் பிள்ளைகளுக்கு இலவசமாய் பல பாஷைகள் சொல்லிக்கொடுத்தல், தேகாப்பியாசம் பழக்கிக்கொடுத்தல், நூல்நூற்றல், பாரதியாரின் தேசியப் பாடல்கள் கற்றுக்கொடுத்தல் ஆகிய காரியங்கள் செய்விப்பதற்காக ஒரு ஸ்தாபனம் திறக்கப்பட்டது.

அத்திருவிழாவுக்கு அநேக வாலிபர்களும் பெரியோர்களும் வந்திருந்தார்கள். முக்கியமாக திருவாளர்கள் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர், மதுரை சுப்பிரமணிய அய்யர், திருவண்ணாமலை நா. அண்ணாமலைபிள்ளை, தென்னாடு பத்திராதிபா த. நா. நடராஜன், ஆர். சபாபதி முதலியார், ராமபத்திர சர்மா, சக்கரை சர்மா, பாஷ்யம், வேணுகோபால்பொன்னம்பலனார், குருசாமி, லிங்கம், எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் அநேகர் வந்திருந்தார்கள்.

தேசியகீதம் பாடியவுடன் திரு. ராமபத்திர சர்மா எழுந்து வாசகசாலையின் அவசியத்தைச் சொல்லி திரு. எம். எஸ். சுப்பிரமணிய அய்யரை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ள, திரு. சுப்பிரமணிய அய்யர் தலைமை வகித்துப் பேசியதாவது:- இன்றைய சம்பவம் மிகவும் முக்கியமானதென்றும், அதாவது தமது பழைய நண்பராகிய திரு. ஈ. வெ. ராமசாமியும் தானும் இங்கு கூடியிருப்பது பலருக்கு அதிசயத்தைக் கொடுக்குமென்றும், இன்றைய துண்டுப் பிரசுரம் திருவல்லிக்கேணியில் பெருத்த பரபரப்பை உண்டாக்கிவிட்டதென்றும், அதனாலேயே இவ்வளவு பேர்கள் இங்கு கூடியிருப்பதாகக் கருதுவதாகவும், திரு. ராமசாமி காங்கிரசை விட்டு விலகி விட்டது போல் வெளிக்குத் தோன்றினாலும் அவர் விலகவில்லை என்றும், அவரது உள்ளத்தில் காங்கிரஸ் கொள்கையே குடிகொண்டு இருப்பதாகத் தாம் கருதுவதாகவும், பல விஷயங்களில் அபிப்பிராயபேதம் இருந்தபோதிலும் சொந்த விஷயத்திலும் அபிப்பிராயபேதமில்லாத மற்ற விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இருக்கக்கூடாதென்றும், பாரதப்போரில் பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் பகலெல்லாம் சண்டை நடந்தாலும், இரவில் ஒரே பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டு வந்ததாக ஜயமுனி பாரதம் கூறுகின்றதென்றும், அதேபோல் இருக்கவேண்டியதே நீதி என்றும், அதற்கு உதாரணமாகவே இன்று இங்கு கூடி இருக்கின்றோம் என்றும், திரு. இராமசாமி காங்கிரசில் மிக்க கவலை கொண்டு உழைத்து வந்தவர் என்றும் சொல்லி, இன்று திறக்கப்படும் வாசகசாலை தேசிய விடுதலைக்கு மிகவும் முக்கியமானதால் அதை திறந்து வைக்க திரு. இராமசாமியே தகுந்தவர் என்றும் சொல்லி, திரு. இராமசாமியை வாசகசாலையைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

### திரு. ராமசாமி

திரு ஈ.வெ. ராமசாமி வாசகசாலையைத் திறந்துவைக்குமுன் நிகழ்த்திய சொற்பெருக்கு வருமாறு:-

தலைவரவர்களே! அன்புள்ள நண்பர் அவர்களே! இன்று திறப்பு விழா கொண்டாடும்படி இந்த பல பாஷை சொல்லிக்கொடுக்கும் முதலிய காரியங்கள் செய்யும் வாசகசாலையை நான் திறந்து வைக்கவேண்டுமென்று எனது பழைய நண்பர்கள் பலர் கேட்டுக்கொண்டதை நான் ஒரு பெருமையாய்க் கருதி அத்தொண்டாற்றவே இங்கு வந்துள்ளேன். எனினும், இத்திறப்புக் கொண்டாட்டத்தை நான் நடத்துவதின் மூலம் எனக்குக் கிடைத்த பெருமையை விட நான் இங்கு வந்து எனது பழைய நண்பர்களை சந்தித்து அளவளாவ சந்தர்ப்பம் கிடைத்ததே எனக்கு மிகுதியும் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்கதாகும். இந்த விழாவிற்கு இன்னார் வந்து சொற்பொழிவாற்றுவார்கள் என்று சொன்னவுடன், யான் எவ்வித யோசனையும் செய்யாமல் உடனே வருவதாக ஒப்புக்கொண்டேன். இந்தப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே என்கின்ற ஆசை எனக்கு வெகு நாளாகவே இருந்து வந்தது. என்னுடைய ஆசையும் அக்கிராசனர் ஆசையும் இவ்விழாவுக்கு முக்கியஸ்தர்களான திருவாளர்கள் ராமச்சந்திர சர்மா, மதுரை சுப்பிரமணிய அய்யர் ஆகியவர்கள் ஆசையும் ஒன்றுபட்டு வெற்றிபெற்றிருப்பதைப் பார்க்கும்போது சிங்கார ரசத்தில் உள்ள ஒரு இடம் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது, ஒரு நாயகியும் நாயகனும் தங்களது ஒத்த காதலின் பெருக்கினால் ஏற்பட்ட ஊடல் பிரிவைச் சகிக்கமாட்டாமல் ஒருவரை ஒருவர் சமாதானம்செய்துகொள்ள ஒருவருக்கொருவர் முந்த வெட்கத்தினால் தடைபட்டிருந்தவர்களை சந்திரஉதயம்வந்து இன்னார்தான் முதலில் சமாதானத்துக்கு வந்தார்கள் என்பதை இருவர்களும் அறிய முடியாதபடி கூட்டிவைக்கும் இடம் ஒன்று உண்டு. அதுபோலவே தேசத்தொண்டு வேகச்செருக்கால் ஏற்பட்ட ஊடலினால் பிரிந்து இருந்தவர்களை இப்போது நாட்டில் தோன்றி இருக்கும் உண்மை விடுதலை அவா உணர்ச்சி என்னும் சந்திர உதயமானது நம்மில் யார் முதலில் சமாதானத்திற்கு முயற்சித்தார்கள் என்று சொல்ல முடியாத மாதிரியில் இன்று இங்கு கூடி இருக்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தை நான் எனது தொண்டுக்கு அனுகூலமாக அதை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையால் இவ்விழாவில் ஏதாவது அபிப்பிராயத்திற்கு இடம் ஏற்பட்டு ஒழுங்காக நடைபெற முடியாமல் போவதன் மூலம் அபிப்பிராய பேதத்திற்கு அதிக இடம் ஏற்பட்டு விடுமோ என்கின்ற எண்ணம் தோன்றிற்று. எனினும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் எப்படியாவது உபயோகித்துக் கொள்ளப் பார்ப்போம் என்கின்ற ஆசையுடனும் உறுதியுடனுமே எப்படியாவது உள்ளே நுழைந்துகொள்ளலாம் என்று வந்துவிட்டேன்.

நண்பர்களே! அக்கிராசனரவர்களே நான் காங்கிரசை விட்டு விலகிவிட்டதாகத் தோன்றினாலும் நான் உண்மையிலேயே விலகவில்லை என்று தான் நினைத்திருப்பதாகச் சொன்னார். காங்கிரசை நான விடவில்லை என்பது உண்மையேயானால். காங்கிரசு என்னை விட்டு விட்டது என்பதை நான் மறைக்க முயலவில்லை, காங்கிரசு என்பது ஒரு கூட்டம் என்கின்ற அர்த்தமானால் இப்போது காங்கிரசின் பேரால் கூடும் கூட்டம் என்னை சேர்த்துக் கொள்ள முடியாது. மற்றபடி காங்கிரசு என்பது தேசிய முற்போக்கு, தேசிய விடுதலை, தேசிய சுயமரியாதை என்றால் அது என்னை ஒருக்காலும் விட்டு தனித்திருக்கமுடியவே முடியாது. நான் எங்கு சென்றாலும் அது என்னை தொடர்ந்தே தீரும். எனக்கு அந்த தைரியமும் நம்பிக்கையும் உண்டு.

நான் காங்கிரசைவிட்டு விட்டதாகத் தலைவர் நினைக்கவில்லையானாலும் அநேகர்கள் அந்தப்படியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், பொது வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வளவு அபிப்பிராய பேதமுடைய கொள்கைகளை உடையவர்களாயிருந்தாலும் அவ்வபிப்பிராய பேத முடையவர்களின் உட்கருத்தை கவனித்து இவ்வித அபிப்பிராயம் அவர்கள் கொள்ளக்காரணமென்ன? இதனால் அவருக்குள்ள லாபம் என்ன? எந்த சுய நலத்திற்கு எதிர்பார்த்து இப்படி செய்கின்றார்? முன் பின் இருந்த மனிதனுடைய நடவடிக்கை என்ன? என்கின்ற விஷயங்களைக் கவனித்துப் பார்த்து பிறகு ஒரு வித அபிப்பிராயம் கொள்ளுவதானால் உண்மையான தொண்டர்களுக்குள் அபிப்பிராயபேதம் காரணமாக பிரிவினையோ மனஸ்தாபமோ விரோதமோ ஒருக்காலமும் ஏற்படாவே ஏற்படாது.

எவ்வளவு அபிப்பிராய பேதமிருந்தாலும் இருவர்களும் ஒன்றுபட்டே தீருவார்கள்.

இந்தப்படி ஒன்றுபட முடியாமல் பொதுத் தொண்டர்கள் என்பவர்களுக்குள் ஏதாவது சொந்த மனஸ்தாபமிருக்குமானால் அது கண்டிப்பாய் அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்டதல்லவென்றும் தேசத் தொண்டு என்னும் போர்வையைப் போட்டுக்கொண்டு சுயநலத் தொண்டு செய்கின்றார்கள் என்று கருதி அன்பர்கள் மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகமும் அல்லது தீர்மானமுமே தவிர வேறில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எதிரியின் நல்ல எண்ணத்தில் சந்தேகமில்லாவிட்டால் வெறும் அபிப்பிராய பேதத்திற்காக யாரும் பிரியமாட்டார்கள். சொந்த மனஸ்தாபமும் கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

ஆதலால் நாம் சுயநலமில்லாதவர்களாயிருந்தால் நமது அபிப்பிராயங்களைக் கொட்டி கலந்து ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் கொள்கைக்குச் சற்றுவிட்டுக் கொடுத்தோ அல்லது விரோதமில்லாதவைகளை ஏற்றுக்கொண்டோ அந்த அளவுக்கு இருவரும் கலந்து ஏன் வேலை செய்யக்கூடாது? ஆதலால் ஒற்றுமை வருகின்ற கொள்கைகளில் கலந்துவேலை செய்ய ஒருவருக்கொருவர் முந்துவது மேலான குணமாகும். அவ்வித குணத்திற்கு இன்றைய சம்பவம் ஒரு அறிகுறியாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

நண்பர்களே! யதீந்திர தாஸ் பெயரால் இன்றைய வாசகசாலை திறக்கப்படுவதை நான் பாராட்டுகின்றேன். ஆனால், இதன் மூலம் நாம் அவருக்கு பெருமையும் மரியாதையும் செய்கின்றோம் என்று கருதினால் இப்பாராட்டத்துக்கு அர்த்தமே இல்லை; அல்லது இவ்வாசகசாலையில் அவரது படத்தை வைத்து அதற்கு தேங்காய் பழம் உடைத்து கற்பூரம் கொளுத்தி வைத்து கும்பிடுவதென்றால் அது மிகவும் மூடத்தனம் என்று தான் சொல்லுவேன். ஆனால் மற்றென்ன செய்வது? அறிவுடைமையானது என்று கேட்பீர்களானால் அவர் விட்டுப்போன வேலையை செய்வதும் அவரது தியாகத்தையும் கொள்கைகளையும் பின்பற்ற அடிக்கடி ஞாபகப்படுத்த அவரது பெயரை உபயோகிப்பதும் தான். இடத்தில் அபிப்பிராயபேதமிருக்கலாம். வாசகசாலைகள் இப்போது எங்கும் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டு வருவதானது நமது நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு அறிகுறி என்றே கருதுகின்றேன். கொஞ்ச காலத்திற்கு முன்பாக நமது நாட்டில் வாசகசாலைகள் அதிகம் இல்லை. காரணம் என்னவென்றால், அப்போது மக்களுக்கு எழுத்து வாசனை கிடையாது. ஆனால், இப்போது அதிகம் மக்கள் படித்திருப்பதால் இன்னும் அதிக

மாக படித்துக்கொண்டு வருவதால் நாளுக்கு நாள் வாசகசாலைகள் அதிகரிக்கின்றன.

இம்மாதிரி வாசகசாலைகள் எங்கும் ஏற்பாடு செய்வது மிகவும் மேலான தேசத்தொண்டாகும். இதனால் மக்களுக்கு உலக அனுபவம் ஏற்படும்.

ஏனெனில், உலக அனுபவம் தான் உண்மையான கல்வியாகும். அதுவே அறிவின் திறவுகோலாகும். பண்டித பரீட்சையில் தேறுவதும் மகா மகோ உபாத்தியாயராகிவிடுவதும் அரசாங்கத்தில் டாக்டர் அதாவது பண்டித பட்டம் பெறுவதும் ராஜாக்களிடத்தில் வித்வான்களாயிருப்பதும் உண்மையான கல்வி ஆகிவிடாது. ஏனெனில், செருப்புத் தைத்தல், க்ஷவரம் செய்தல், சலவை செய்தல், சித்திரம் எழுதுதல், வியாதிக்கு மருந்து கண்டு பிடித்தல், கவி பாடுதல், கதை எழுதுதல், ஒருபாட்டிக்கு நூறு அர்த்தம் சொல்லுதல், ஒரு சுலோகத்திற்கு இருநூறு தத்துவார்த்தம் செய்தல், பெரும் பெரும் கணக்குப் போடுதல், உலகத்தை எல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளுதல் முதலியவை எல்லாம் வித்தைகளாகுமே தவிர வேறில்லை. அதாவது ஒவ்வொரு தொழில் ஒவ்வொருவர் கெட்டிக் காரர்கள் என்றுதான் சொல்லலாம். எனவே, முன் சொல்லப்பட்ட உலக அனுபவத்திற்கு முக்கிய கல்வியாக முன் காலத்தில் தீர்த்த யாத்திரையை வசதியாக இருந்தது.

ஒரு அரசன் அல்லது ஒரு பிரபு தன் மகனுக்கு உபாத்தியாயர்களிடம் விட்டு "நாலுவேதம் ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்திநாலு கலைக்யானம், யானை ஏற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை, கத்தி விளையாட்டு, மற்றும் கூடுவிட்டுக் கூடுபாய்தல்" என்பனவாகிய வித்தைகள் எல்லாம் கற்பிக்கப்பட்ட பிறகு தீர்த்த யாத்திரைக்கு அனுப்பி திரும்பி வந்த பிறகுதான அமைச்சரிடம் பொறுப்பை ஒப்பித்து வந்தது வழக்கம் என்று சொல்லப்படுவதை நாம் பார்க்கிறோம். ஆனால், தீர்த்த யாத்திரை என்பது புராணங்களில் சொல்லப்படும் குளங்கள் நதிகள் ஆகிய குழந்தை குட்டி மூட்டை முடிச்சுகளுடன்போய் அழுக்குப் பிடித்த தண்ணீரில் எருமை மாடும் தலையையும் முழுகுவது போல் வெறும் முழுக்குப் போட்டு நோயுடன் வீட்டுக்குத் திரும்பிவருவதல்ல. மற்றென்னவென்றால், உலகமெல்லாம் சுற்றி ஆங்காங்கு நடைபெறும் விஷயங்களையும் உள்ள இயற்கை குணங்களையும் அறிந்து வந்து தனது வாழ்வை அந்தப்படி நடத்துவதுதான். அதனால்தான் இக்கருத்தையே "உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும் கல்லா அறிவிலாதார்" என்று திருவள்ளுவர் சொல்லியும் இருக்கிறார். ஆனால் இப்போதும் [illegible] யாத்திரை ஒரு சிலருக்குத்தான் சாத்தியமாக இருந்தபோதிலும் [illegible] இப்பொழுது [illegible] உலக அனுபவம் என்பதற்கு வாசக சாலைகள் மற்றெல்லா வசதிகளைவிடமேன்மையானதாக இருக்கின்றன. யாவருக்கு சாத்தியமானதாகவும் உள. உலகத்தில் உள்ள செய்திகளை யெல்லாம் பத்திரிகைகள் கொண்டு வந்து கொட்டுகின்றன. பலமனிதர்களுடன் தாராளமாய் பழகி அவரவர்கள் சுபாவம் அறியலாம். ஆதலால் வாசகசாலை நிறுவுதல் மிகவும் நன்மையான பொது தர்மம் என்று சொல்லுவேன்.

தவிர, இங்கு பல பாஷைகள் கற்பிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. பல பாஷைகள் கற்பது நன்மைதான், ஆனால் அது ஒவ்வொருவனுடையவும் வயிற்றுப்பிழைப்புக்காக கற்பிக்கப்படுவதென்றால் அவ்வளவு சுலபமான காரியமென்று நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், ஒரு பாஷையே கற்காத மனிதர்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் இருக்கும்போது அதற்குள் நாம் பல பாஷைகள் கற்றுக்கொடுப்பது என்பது சுலபசாத்தியமானதல்ல. ஆனால், பொதுநலத் தொண்டு செய்பவர்களுக்கு பயன்படும் மாதிரியாக பல் வேறு பாஷை பேசும் தேசத்து சங்கதிகளை அறிந்து அதை தங்கள் பொது நலத்திற்கு உபயோகித்துக் கொள்ளுவதற்காக என்றால் அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முயற்சிப்பது நல்ல காரியமாகும். அந்த முறையில் நான் இதைப்பாராட்டுகின்றேன்.

## தேசீயம்

தவிர, தேசியப் போராட்டத்திற்கு பல பாஷைகள் கற்பது அத்தியாவசியம் என்று தலைவர் கூறினார். இந்த இடத்தில் தேசியம் என்பதைப்பற்றி சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமற்றதாகாது என்று எண்ணுகின்றேன். ஏனெனில், இப்போதைய பொதுத் தொண்டில் அநேக தொண்டர்களின் மன வேறுபாட்டிற்கும் தப்பபிப்பிராயத்திற்கும் இந்த வார்த்தையே முக்கிய காரணமாயிருக்கின்றது. முதலில் தேசியம் என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் நன்குணரவேண்டும். இதைப்பற்றி உள்ள அபிப்பிராய பேதங்களில் இன்னது சரி இன்னது தப்பு என்று நான் முடிவுகட்டவரவில்லை. ஆனால் என் அபிப்பிராயத்தைச் சொல்லுகின்ற முறையில் சொல்லுகின்றேன். இப்போது விகுதியும் ஊக்கமுள்ள தொண்டர்கள் பலரின் மனதில் அரசியல் சம்பந்தமான பேச்சுகள்தான் தேசிய வேலையாக கருதப்படுகின்றது. தேசியம் வேறு, இப்போதைய அரசியல் வேறு என்பதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தியாவை ஒரு தேசமாக்க வேண்டியது வே இப்போதைய தேச பக்தர்களின் முதல் வேலையாகும். இப்போது இந்தியா பல தேசமாய் இருக்கின்றது. அதாவது பல பாஷை, பல மதம், பல ஆசாரம் பல ஜாதி வகுப்புகள் பலவித வித்தியாசம், பல வகுப்புகளுக்கு பலவிதமான தனித்தனி லட்சியம் இவைகளைப் பிரித்து அன்னியர்களே, அதாவது, இந்தியாவின் லட்சியத்தைக் கருதாதவர்கள் என்னும் படியான அன்னியர்களே ஆளுவதற்கு அனுகூலமான முறையில் இருந்து வருகின்றது. ஆதலால் முதலாவதாக நாம் நமது நாட்டை மேல்கண்ட பிரிவினைகளையும் வித்தியாசங்களையும் தனித்தனி லட்சியங்களையும் போக்கி ஒன்றுபடுத்தி அன்னிய ஆட்சிக்கு கஷ்டமானமாதிரியில் கொண்டுவந்து விட்டுவிடவேண்டும். பிரிவினைகளை போக்க சற்று கஷ்டமாயிருந்தாலும் தனித்தனி லட்சியங்களை மாற்றி ஒரு லட்சியத்திற்கு ஒன்றுபட்டுழைக்கும்படி ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் கூட்டுப் பொறுப்பையும் ஏற்படுத்தித் தீரவேண்டியது முக்கியமான வேலையாகும். முக்கியமாக நாம் இந்நாட்டு மக்கள் என்பவர்களுக்குள்ளாக எவ்வளவு வித்தியாசத்தையும் உயர்வுதாழ்வையும் நம்பிக்கை இன்மையையும் ஒற்றுமை இன்மையையும் பார்க்கின்றோம். இதில் எதாவது அதிகப்படுத்தியோ கூட்டியே குறைத்தோ சொல்லுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? வித்தியாசமும் உயர்வு தாழ்வும் பரஸ்பர ஸ்பாநம்பிக்கைக்கும் கூட்டுப் பொறுப்புக்கும் எவ்வளவு இடையூறாய் இருக்கின்றது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

மேற்கண்ட குணமுள்ள இவர்கள் அதாவது சமூக வாழ்வில் உயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் தாழ்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் ஒன்றுபடுவதென்றால் ஒருவருக்கு பெரிய நஷ்டமும் மற்றவர்களுக்கு பெரிய லாபமுமாயிருப்பதால சுலபத்தில் ராஜி செய்ய முடியாமல் இருக்கின்றது. ஏனெனில் வகுப்பு உயர்வு என்பது யாதொரு பொருளும் ஆதாரமும் இல்லாமல் தங்களுடைய வெறும் சுயநலத்தையே ஆதாரமாய்க் கொண்டிருப்பதால் அதாவது பிறர் உழைப்பில் சாப்பிட்டுக்கொண்டு சுகமாயிருக்க அனுகூலமாயிருப்பதால் எவ்வித நீதியும் தர்மமும் இங்கு பயன்படுவதில்லை.

தாழ்வு என்பதும் எவ்வித ஆதாரமும் பொருளும் இல்லாமல் வைக்கும் கஷ்டத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருப்பதால் அதாவது பாடுபடுவதை கடமையே ஒழிய அப்பாட்டின் பலனை வேறு ஒருவர் அனுபவிக்கக் கூடியதாய் இருப்பதால் அங்கும் எவ்வித பொறுமையும் சமாதானமும் சிறிதும் பயன் படுவதில்லை. ஆதலால் இதை எவ்வித அரசியலாய் நினைக்க முடியும்? எந்தவித நம்பிக்கை மீது இம்மாதிரியாக மக்கள் இருவருக்கும் கூட்டுப்பொறுப்பு ஏற்படுத்த முடியும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

மற்ற நாடுகளிலும் இவ்வித தனித்தனி லட்சியம் இருக்கக்கூடும் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், அங்கெல்லாம் பெரும்பாலும் ஒரு தொழில் முறையை ஆதாரமாய்க் கொண்டு லட்சியம் பிரிக்கப்படுகின்றதே தவிர ஜாதியையோ வகுப்பையோ பிறவியையோ கொண்டு பிரிக்கப் படுவதில்லை. ஆதலால் நாம் முதலில் இந்நாட்டு மக்களுக்கு கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்தவேண்டும். அதுதான் தேசியம் என்பது. இவ்விரு வகுப்பாரையும் சமநிலைக்குக் கொண்டு வர வேண்டியது தான். இதுமிகக்கஷ்டமானது என்று இப்பொழுது தோன்றினாலும் மற்ற வேலைகளை கட்டி வைத்து விட்டு தேசத் தொண்டர்கள் தியாகத்திற்கு தயாராயிருந்தால் வெகு சீக்கிரத்தில் சரிப்பட்டுப்போகும். அந்த சமயம் தானாகவே அன்னிய ஆட்சிக்கு கஷ்டம் ஏற்பட்டு விடும். ஆதலால் அப்பேர்ப்பட்ட தேசியத்திற்கு பல பாஷை கற்று வைப்பது அவசியம் தான் என்றுகருதுகிறேன்.

## நூல்நூற்றல்

நூல்நூற்றல் தொழிலும் இங்கு கற்றுக்கொடுக்கப்படும் என்றுசொல்லப்பட்டது. இது மக்களுக்கு அவசியமானதே. ஏனெனில், அது ஒரு நாட்டுக்கு, இன்றியமையாததொழிலாகும். தொழிலில்லாமல் கஷ்டப்பட்டு தரித்திரத்தில் மூழ்கி இருக்கும் மக்களுக்கு ஜீவனத்திற்கு மார்க்கத்தைக் கொடுக்கும்.

ஆனால் அது எக்கைக்கும் எல்லோரும் கைராட்டினத்தால் நூற்றுக்கொண்டிருப்பதற்கு என்று சொல்லுவதானால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில், இதைவிட தரித்திரத்தைப் போக்க வேறுவித கருவிகளும் தொழில்களும் ஸ்தானங்களும் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தும கைராட்டினம்சுற்றித்தான் ஆகவேண்டும்என்று சொன்னால் இதை யார் ஒப்புக்கொள்ளுவார்கள்? மனிதனுடைய எண்ணம் விரிவடைந்து முன்னேறிகொண்டுபோவதே இயற்கையாய் இருப்பதால் முற்போக்குக்கு அவசியமான மார்க்கங்களை கைப்பற்றவும் கண்டு பிடிக்கவும் முயலவேண்டும்.

## தேசாப்பியாசம்

தேசாப்பியாசமும் இந்த வாசகசாலையில் கற்றுக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இதுவும் நல்லகாரியம் தான். ஆனால் தேசாப்பியாசத்தின் லட்சியத்தை இங்கு தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் தேசாப்பியாசம் என்பது போர் வீரர்களுடன் சண்டைசெய்து தேசத்தைக் கைப்பற்றுவதற்கு என்றால் இது உதவாது, ஏனென்றால் இப்போது நமது நாட்டை ஆளுகிறவர்கள் ஒரு பீரங்கி குண்டு மூலம் 20-மைல் தூரத்தில் உள்ள ஊரைத் தூளாக்க முடியும்படியானவர்களும், ஒரு வெடி குண்டின் மூலம் ஒரு பெரிய பட்டணத்தை சாம்பலாக்க முடியும்படி யானவர்களும், ஒரு துப்பாக்கி புகையின் மூலம் பதினாயிர கணக்கான மக்களை கொன்றுவிட முடியும்படியானவர்களாய் இருக்கின்றார்கள். இன்னும் மேலும் மேலும் இது விஷயத்தில் அற்புதங்களை கண்டுபிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடன் சண்டைபோட நாமெல்லாம் தேகபலத்தை எவ்வளவு ஏற்படுத்

திக்கொண்டாலும் இதற்கு என்ன பயன்விளையும்? மேலும் தேகாப்பியாசத்தால் ஒரு வாளை தூக்கி மூன்று பர்லாங்கு தூரம் வீசி எறியும்படி செய்துகொண்டாலும் பாக்கி 19 மயில் 5 பர்லாங்குக்கு நாம் என்ன செய்ய முடியும்? ஆதலால் யுத்த வீரர்களுடன் போர்புரிவதற்குஎன்று கருதுவது அர்த்தமற்றதாகும். ஆனால் மனிதனுக்கு தேகாப்பியாசத்தால் சரீரசுகம் ஏற்படும். மன உறுதி ஏற்படும். ஊக்கம் முயற்சி முதலியவைகள் ஏற்படும் என்கின்ற லட்சியத்தில் அனுபவிக்கப்பட வேண்டியதேயாகும். அன்றியும் மேல்கண்ட அந்நிய பலம் பொருந்திய ஆட்சியின் கொடுமையை ஒழிக்க மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி எவ்வித தியாகத்திற்கும் தயாராகும்படியான உபதேசங்களைச் செய்ய ஊர் ஊராய்ச் சுற்றவும், மன உறுதியும் நன்னம்பிக்கையும் கொள்ளவும் தேக பலம் அவசியமானதே. உதாரணமாக, நூற்றுக்கணக்கான நாள் பட்டினி கிடக்கவும், ஜெயிலில் கஷ்டப்படவும், வேலை செய்யவும் உதவும். நமது தேசத்தொண்டர்கள் அநேகருக்கு மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்ய சரீரத்தில் பலமில்லை. கைப்பெட்டியைக்கூட தூக்க முடிவதில்லை. ஒரு வேளை சாப்பாடு சற்று நேரமாய்விட்டால் பிறகு அந்த பக்கமே போவதில்லை. ஒரு அரை பர்லாங்கு கூட நடக்க முடிவதில்லை. ஆனால், கால அட்டவணைப்படி வேலை செய்வதாக சொல்லிக் கொள்ளுகின்றார்கள். 6 மணிக்கு எழுந்திருப்பது, 6-30 மணிக்கு பல்லி எடுப்பது, 7 மணிக்கு நடப்பது, 7-30 மணிக்கு தண்டால் எடுப்பது, 8 மணிக்கு காப்பி சாப்பிடுவது 9 மணிக்கு பிரசங்கம் என்று அட்டவணை போட்டுக் கொள்வார்கள். இவர்களுடைய அட்டவணை பக்கியானது ஒருபர்லாங்கு நடக்க முடியவில்லையானால் இந்த பஸ்கியும் தண்டாலும் வெள்ளைக்காரனிடம் என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். ஆதலால் தேகாப்பியாசமானது சரீர கஷ்டம் பார்க்காமல் உழைப்பதற்கும் மனோதிடத்திற்கும் என்கின்ற லட்சியத்தின் மீது செய்யவேண்டும் என்று சொல்லுகின்றேன்.

### பாரதி பாடல்

பாரதியார் பாட்டுகளில் பல மன உற்சாகத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் முற்போக்கான கருத்துக்களையும் கொண்டதாகும். ஆதலால் அவைகளைப் படிப்பது மிக்க நன்மையாகும். அன்றியும் ஒரு கொள்கையை பாட்டு மூலமாக பதிய வைப்பது நன்மையானதாகும். நன்றாய் ஞாபகத்தில் இருக்கும்படி. அச்சுப்புஸ்தகம் இல்லாத காலத்தில் பல பண்டிதர்கள் இருந்ததற்குக் காரணம் பாட்டு முறையேயாகும். எனக்குக்கூட 40 வருடங்களுக்கு முன் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் படித்த கோலாட்டப்பாட்டு இன்னும் ஞாபகமிருக்கின்றது. அப்பாட்டில் ஒரு வார்த்தை ஞாபகத்திற்குவந்தால் முன் உள்ளதையும் பின் உள்ளதையும் தானாக இழுத்துக்கொண்டுவந்து விடும். ஆதலால் பாட்டு படித்து ஞாபகத்தில் வைக்கும் முறை மிகவும் நல்லதாகும்.

ஆகவே, இத்தியாதி காரியங்கள் கொண்ட இந்த வாசகசாலையை தேச முன்னேற்றத்தைக் கருதி இன்று ஆரம்பித்தது மிகவும் பாராட்டத்தக்கதென்றும், இதை நான் இருந்து நடத்த ஏற்பட்ட சமயம் எனக்கு பெருமகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கக்கூடியது என்றும் கொள்வதோடு, வாசகசாலையை ஏற்படுத்தியவர்களுக்கு நன்றி யறிதலை தெரிவிப்பதாகவும் சொல்லி வாசகசாலையைத் திறந்துவைத்ததாக வெளிபடுத்தி அமர்ந்தார். பிறகு திருவாளர்கள் தஞ்சை த.நா. நடராஜன் அவர்கள் வாலிபர்களுக்கு ஊக்கம் உண்டாகும்படியும் சமூக வித்தியாசத்தை ஒழிக்கும்படியும் சில வார்த்தைகள் சொல்லி சுயநலத் தலைவர்களை நம்பி மோசம் போகக்கூடாதென்று சொன்னார். திரு; வேணுகோபால் அவர்களும் இன்றைய வைபவத்தை ஒட்டி சிலபுராணப் பாட்டுகள் எடுத்துச் சொல்லி அர்த்தம் செய்தார். திரு. பாஷ்யம் தலைவர்கள் என்பவர்களின் புரட்டுகளைப்பற்றி சில வார்த்தை சொல்லி சென்னையில் காங்கிரசுக்கு யோக்கியமான தலைவர் இல்லை என்று சொன்னார். பிறகுதிரு மதுரைசுப்பிரமணிய ஐயர் வாசகசாலையின் கருத்துக்களைவிவரித்துச்சொன்னார். பிறகுதிரு வண்ணாமலை திரு. நா. அண்ணாமலை பிள்ளை சுயராச்சியம் பெற்றால் சட்டம் செய்து சமூக கொடுமைகளை நிவர்த்திசெய்து கொள்ளலாம் என்று பேசினார். பிறகுஅக்கிராசனர் இன்று எல்லோரும் கூடியதையும், ஒரே லட்சியத்தின் மீதே எல்லோரும் பாடுபடுகின்றோம் என்பது எல்லோருடைய சொற்பொழிவிலிருந்தும் தெரிந்ததென்றும், அடிக்கடி இந்தப்படி நடக்க வேண்டும் என்றும் வாசகசாலை கொள்கைகள் போற்றத் தக்கதென்றும் சொன்னார்.

கடைசியாக திரு. ராமச்சந்திர சர்மா அவர்கள் எல்லோருக்கும் வந்தனோபசாரம் சொல்ல 8 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

# தென்னாட்டில் சுயமரியாதை இயக்கமும் வைதிகர்களின் நடுக்கமும்

(அ. சோமசுந்தரம் எழுதியது)

இவ்வூரில் சமீப காலமாய் மக்களுக்கிடையே பெரியதோர் பரபரப்பேற்பட்டிருக்கிறது. காரணம் இங்கு வைக்கம் வீரர் வாசகசாலை தோன்றி அதனால் இடைவிடாது செய்துவரும் சுயமரியாதைப் பிரசாரங்களும் திருமணங்களுமேயாகும். இதனால் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்துவிட்டதை உணர்ந்த பார்ப்பனர்கள் தங்கள் தாசர்களாகிய சில வைதீகப் பிண்டங்களைத் தூண்டிவிட அதைக் கேட்ட அவ்வைதீகர்கள் பயந்து நடுங்கி சுயமரியாதையை இவ்வூரில் பரவவிடாது செய்துவிட வேண்டுமென்று கருதிக் கூட்டங்கள் கூட்டுவதும் தீர்மானங்கள் செய்வதும் ஆகிய வேலைகளில் தலைப்பட்டிருக்கின்றனர். இவர்கள் கூட்டம்போடுவதைப்பற்றியும் தீர்மானங்கள் செய்வதைப்பற்றியும் யாருக்கும் கவலை இல்லை. ஆனால் பொது அறிவுடைய மக்கள் எள்ளி நகையாடும்படி தீர்மானம் செய்துகொண்டு இப்பொழுது தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்களென்பது தான் நமக்குப் பரிதாபமாக விருக்கிறது. அதாவது உண்மையில் ஒரு கூட்டம் கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

முதலாவது- சுயமரியாதை இயக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மீறி ஏற்றுக்கொண்டவர்கள் காராம் பசுவைக்கொன்ற பாபத்திற்கு ஆளாவார்களாக. (வெட்கம் வெட்கம்)

இரண்டாவது – சுயமரியாதை முறையில் நடைபெறும் சுபாசுப காரியங்களில் தலையிடுவோர்களை தங்கள் ஜாதியினின்றும் விலக்கி வைப்பது.

மூன்றாவது-இவ்வூர் வாசகசாலைக்குப் போய்ப் படிப்பவர்களுக்கு அபராதம் விதிப்பது.

அந்தோ! இத்தகைய மூடமதி பெற்ற மக்கள் நம் கண்முன்படும் பாடு உள்ளம் வாடுகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இத்தகைய உருவங்கள் நமது பூமியில் நடமாடுவது தமிழ்த்தாயின் துர்ப்பாக்கியமேயாகும். வாசகசாலைக்குச் சென்று படிப்பவர்களுக்கு அபராதம் விதிப்பதென்றால் இதைவிடக் கொடுமையானதும் மக்களை மடையரென்று நினைப்பதுமான தீர்மானம் வேறுண்டோ? கல்வியைப் பரப்புவதற்காக நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரையிலும் காருண்யகவர்ன்மெண்டாராலும், பச்சையப்ப முதலியாரவர்களாலும், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களாலும், இன்னும் அநேக தர்மசிந்தனையுடைய தனவந்தர்களாலும் கல்வியின் பயனைக் கருதி கோடிக்கணக்கான பொருள்களைச் செலவுசெய்து கணக்கற்ற கலாசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் நிறுவி மக்களை மக்களாகச் செய்துவரும் இந்நாளில் இந்தக் குடுக்கைகள் செய்த தீர்மானத்திற்குப் பொருளுண்டா? என்பதை அறிஞர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.


நிற்க; சுயமரியாதையின் உண்மையான நோக்கங்களை உணர்ந்து அதில் ஈடுபடும் மக்களைத் தடுக்க இவ்வைதீகச் சபையார்க்கு என்ன உரிமையுண்டு? பண்டைய வழக்கம் பண்டைய வழக்கம் என்று குருட்டுத்தனமாக உளறிக்கொண்டு முன்னேறும் மக்களைப் பின்னுக்கிழுப்பது அறிவுடைமையாகுமாவென்று வினவுகிறோம்.

தன் மதிப்பைக் காக்க வகையறியாமல் கிழிந்த பஞ்சாங்கத்தையும் காய்ந்த தருப்பையையும் கையிலேந்தி பாமரர்களை வஞ்சித்துப் பொருள் பறித்துண்ணும் புரோகிதக்கூட்டத்திற்கு வக்காலத்து வாங்கிப்பேசும் ஒரு சில வைதீக மூட்டைகளின் பிற்போக்கான புத்தியையும் தீர்மானத்தையும் நினைக்க நினைக்க வியப்பையும் வருத்தத்தையும் உண்டாக்குகிறது. சுயமரியாதையின் உணர்ச்சியும் எழுச்சியும் ததும்பும் இக்கால வீர இளைஞர்களிடம் இந்த வைதீகப் பித்தலாட்டங்கள் பலிக்காதென்பதை சுயநலப்புலிகள் உணர்வார்களாக. ஏ! வைதீகர்களே!! நீங்கள் செய்த தீர்மானம் உங்களை இழிவுபடுத்துகிறதென்பதை இனியாவது உணர்ந்து உங்கள் புத்தியையும் தீர்மானத்தையும் மாற்றிக் கொள்வீர்களாக!

ஓ! தமிழ்நாட்டில் வதியும் எமது அருமைச் சகோதரர்களே!! நந்தாய் நாட்டில் ஒரு சில வைதீகர்கள் செய்துவரும் இத்தகைய தீர்மானங்களால் உங்கள் மனம் ஆத்திரமுற்றுத் துயருறுமென்பதை நாங்கள் அறிவோம். என் செய்வது? பார்ப்பனீயத்திலும் மூடப்பழக்க வழக்கங்களிலும் சுயநல வேட்கையிலும் மூழ்கிப்போன வைதீகப் பித்தர்களின் அறிவு சுலபத்தில் நல்வழிப்படாதென்பதை நீங்கள் மறந்துவிடமாட்டீர்கள். ஆகவே! அவர்கள் இதனினும் கொடுமையான பல தீர்மானங்களைச் செய்தபோதிலும் அஞ்சற்க. வாலிபர்களாலேயே சமூகமும் தேசமும் முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறதென்பதை சுயமரியாதை உணர்ச்சியுள்ள நீங்களே அறிவீர்கள். ஆகவே, எத்தகைய இடையூறுகள் நேரினும் நாம் அவைகளை உதைத்துத் தள்ளி வீரத்துடன் முன்னேறி நிற்றல்வேண்டும். வைதீகர்கள் வாயால் கூச்சலிட்டுக் கொண்டிருப்பார்களேயன்றி அவர்களால் ஒருபயனுமில்லை. உங்களுக்காகவே இங்கு வைக்கம் வீரர் வாசகசாலை தோன்றி தீவிரமாகப் பிரசாரம் செய்து எதிரிகளை முறியடித்து வருகிறது. இன்னும் உங்களுடைய நற்றொண்டுகளையும் எதிர்ச்சலியா ஊக்கத்துடன் வேலை செய்யக் காத்திருக்கிறது. ஆதலால் எனதன்பார்ந்த வாலிப இளஞ்சிங்கங்களே! நமது இயக்கத்தை மென்மேலும் அபிவிருத்தி செய்து, நமது கொள்கைகளைத் தளரவிடாது எத்தகைய காரியங்களிலும் சுயமரியாதை மணமாகவே பரிமளிக்கும்படி செய்ய முன்வரவேண்டும் என்பதை எமது அருமைச் சகோதரர்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

வியாபாரத்திற்கழகு —
— விளம்பரம் செய்தல்



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

## குடி அரசு

சென்னை 1929 டிசம்பர் 1உ

# இந்திய ராஜாக்களும் மடாதிபதிகளும்

சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் "இந்திய கடவுள்கள்" என்பதை தலையங்கப் பெயராகக் கொண்டு ஒரு தலையங்கம் எழுதி இருந்தோம். அதாவது, இந்தியாவில் உள்ள பத்தாயிரக் கணக்கான கோயில்களில் ஒன்றாகிய திருப்பதி கோயில் என்கின்ற ஒரு கோயிலுக்கு மாத்திரம் வருடம் ஒன்றுக்கு 20லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வரும்படி உண்டென்றும், இந்த வருமானம் பெரிதும் யாத்திரைக்காரர்களால், அதாவது, இமயமலைமுதல் கன்னியாகுமரி வரையிலிருந்து செலவுசெய்து வரும் யாத்திரைக்காரர்களால் காணிக்கையாகவும், வேண்டுதலை என்னும் பெயரால் தங்கம் வெள்ளி ரத்தினங்கள் ஆகிய நகைகள் முதலிய அரும் பொருள்களாகவும் மற்றும் பலவாறாய் கொடுக்கப்படுகின்றதென்றும், மேலும் திருபபதி என்கிற இந்த ஒரு தேவஸ்தானத்திற்கு மாத்திரம கட்டடம், நகை, வாகனம், சாமான், பூமி ஆகியவைகளில் ஏழு கோடி ரூபாய்க்கு மேல்பட்டும் மதிப்பிடக்கூடிய சொத்துக்கள் முடக்கமாய் இருக்கின்றதென்றும், இவைகளால் மொத்தத்தில் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு ஒருகோடி ரூபாய் போல் திருப்பதி வெங்கிடாசலபதி சாமியால் மாத்திரம் ஏழை இந்தியதேசப் பணம் வீணாகின்ற தென்றும், இன்னும் இதுபோல் இந்தியாவில் எத்தனையோ கடவுள்களும், புண்ணியஸ்தலங்களும் இருக்கின்றனவென்றும்; அவைகளுக்கும் இது போலவே வரவு செலவு கணக்குகள் போட்டுப் பார்த்தால் மேற்கொண்டும் இத்துடன் இனி, எத்தனையோ கோடி ரூபாய்களாகும் என்றும்; அதாவது இப்பொழுது நாம் கொடுமையான அரசாங்கம் என்று சொல்லும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நம்மிடம் "மிகக் கொடுமையாய்" வசூலிக்கும் வரியை விட குறையாத தொகையாகும் என்றும்; ஆகவே, இந்தியாவின் தரித்திரத்தையும் கல்வி பகுத்தறிவு, தொழில் திறம், ஆராய்ச்சி ஆகியவைகள் இல்லாமையையும், அடிமைத்தனத்தையும் ஒழிக்க வேண்டுமானால், முதலாவது இவ்வித கடவுள்களும் புண்ணியஸ்தலங்களும் பூகம்பத்தின் மூலமோ, புயல் காற்றின் மூலமோ, சமுத்திரம் பொங்கி வருதல், மண் மாரி, கல்மாரி, பேரிடி, எரிமலைக் கொந்தளிப்பு, இவைகள் மூலமோ, அடியோடு அழிந்து பாழாகி மண்மூடிப்போனாலொழிய வேறு மார்க்கமில்லை என்பதாகவும் பொருள்பட எழுதி இருந்தோம்.

ஆனால், அந்த வியாசம் எழுதி எழுதுகோலை கீழேவைக்கும் முன்னரேயே, வியாசம் எழுதிய எழுத்துக்களின் இங்கியின் ஈரம் புலர்வதற்குள்ளாகவே, இந்திய மடாதிபதிகள் அரசர்கள் என்னும் தலைப்புப் பெயர்கொடுத்து ஒரு தலையங்கம் எழுத நேர்ந்ததற்கு நாம் மிகவும் வருந்துகின்றோம். என்னை? திருப்பதிக் கடவுளுக்கு அடுத்தபடியாக திருவாங்கூர் அரசாங்கம் என்பது பற்றியும், சங்கராச்சாரிகள் என்பதுபற்றியும் நாம் எழுதநேர்ந்ததால் திருவாங்கூர் அரசாங்கம் என்பது சுதேச சமஸ்தானங்கள் என்று இந்திய அரசர்களால் ஆளப்படும் தேசங்களில் இது ஒரு நடுத்தர அரசாங்கமாகும். இந்த அரசாங்கத்தின் எல்லை சென்னை மாகாண ஜில்லாக்களில் இரண்டு ஜில்லாக்களுக்கு அதாவது சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கு சமானமானதாக இருக்கும். இதன் சனத்தொகை சுமார் நாற்பது லட்சமாகும். இதன் பரப்பு 7500 சதுரமைல்களாகும். இந்த நாற்பது லட்சம் சனத்தொகையில் ஏறக்குறைய சரிபகுதி சனங்கள், அதாவது இருபது லட்சம் பேர்கள் இந்துக்கள் அல்லாதவர்களான கிறிஸ்துவர்களும், மகமதியர்களுமே யாவார்கள். எஞ்சி உள்ள இருபது லட்சத்திலும் சுமார் பன்னிரண்டு லட்சம்பேர்கள் தீண்டக் கூடாதவர்கள், தெருவில்நடக்கக்கூடாதவர்கள், கண்ணில் தென்படக்கூடாதவர்கள், ஆகிய மிருகங்களிலும் கீழானவர்கள் ஆவார்கள். இப்படியாக முப்பத்தி யிரண்டு லட்சம் சனங்கள் போக எஞ்சியுள்ள சுமார் எட்டு லட்சம் பேர்களே "ஜாதி இந்துக்கள்." அதாவது, மனித உரிமையுடையவர்கள் ஆவார்கள். இதில் 50,000 பேர்கள் பார்ப்பனர்கள். இப்படியாக 40 லட்சம் சனத்தொகை கொண்ட இந்த அரசாங்கத்திற்கு வருஷாந்தர (ரிவினியூ) வருமானம் சுமார் எழுபது லட்சரூபாயாகும். எனவே, இந்த நிலையில் உள்ளமேற்படித் திருவாங்கூர் ராச்சியத்தில் தேவஸ்தான சம்பந்தமாக செலவு செய்யும் தொகையோ பதினேழு லட்ச ரூபாய் ஆகும். இந்த 17 லட்ச ரூ. தொகையானது இந்து மத சம்பந்தமான தேவஸ்தானங்களின் செலவு என்று சொல்லப் பட்டாலும், இவைகள் ஏறக்குறைய ஏன், முழுவதும், மேலேகாட்டப்பட்ட 50 ஆயிரம் பார்ப்பனர்களுக்கே அவர்களது சாப்பாட்டிற்கே செலவு செய்யப்பட்டு வருகின்றது. ஒரே அரசன் தனது ராச்சியத்தில் உள்ள எல்லா மக்களிடத்திலிருந்தும் வரி வசூலித்து ஒரு 'ஜாதி'க்கு மாத்திரம அதுவும் அநேகமாக வரி கொடுக்கக் கூடாத ஜாதியும், கஷ்டப்படாமல் பிறர் உழைப்பில் தேகம் நோகாமல் வாழ்கின்ற ஜாதியும், தங்களைத் தவிர மற்ற மக்கள் எல்லாம் கீழ்ஜாதி, இழிகுலத்தவர்கள், தங்களது வைப்பாட்டி மக்களாய் இருக்கத்தகுந்தவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் ஜாதியுமாகிய பார்ப்பனர்களுக்கே போய்ச் சேருகின்றது என்றால், அந்த ராச்சியத்தின் நீதிக்கும் புத்திக்கும் வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. அந்த ராச்சியத்தில் உள்ளபார்ப்பனர்கள் எத்தனைபேர்களானாலும்; மற்றும் வெளிநாட்டிலிருந்து அந்நாட்டுக்குச் சென்றுகுடியேறும்பார்ப்பனர்கள் எத்தனை பேர்களானாலும், அவர்கள் அத்தனை பேருக்கும் ஆண் பெண் குழந்தை குட்டிகள் சகிதம் அவர்கள் எந்த வேலையில் எவ்வளவு சம்பாதித்தாலும், எந்த உத்தியோகத்தில் எவ்வளவுசம்பளம் பெற்றாலும், எந்த வியாபாரத்தில் எவ்வளவு லாபம் அடைந்தாலும், அதைப்பற்றி சிறிதும் கவலை இல்லாமல் பார்ப்பனர்என்கின்ற பேருக்குமாத்திரம் தினம் இரண்டு வேளை கோயிலிலும், ஊட்டுப்புரை என்னும் சாப்பாட்டு சத்திரங்களிலும் தாராளமாயும் நிரந்தரமாயும் சாப்பாடு போடப்பட்டுவருகின்றது. இது நிற்க; மற்றப்படி "பண்டிகை நாட்களிலும்; "புண்ணியநாள்"கள், "விரதநாள்கள்" என்பவைகளிலும் சிரார்த்த நாள்களிலும் மிகுதியும் விசேஷமான சாப்பாடும், தவிர பணமும் கால், அரை, ஒன்று என்பதாக தட்சணையும் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதுதவிர, மாதம்தவறாமல் உற்சவங்களுக்கும் இப்படியே நடக்கின்றது. இவைகள் தவிர அந்நாட்டுபார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதிபெண்கள் என்பவர்கள் பார்ப்பனர்களை புணருவது மோட்ச சாதனம் என்றும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. இதை தவிர ஆறு வருஷத்திற்கு ஒரு முறை ஜபம் என்னும் பெயரால் சுமார் எட்டு லட்ச ரூபாய் செலவில் ஒரு சடங்கும் கொண்டாடப்படுகின்றது. இச்சடங்கானது 56 நாள்களுக்கு தொடர்ச்சியாய் நடத்தப்படுவதாகும். இந்த ஐம்பத்தியாறு நாள்களுக்கும் சுமார் பதினையாயிரம் பார்ப்பனர்கட்கு வரைமூன்று வேளை உணவுகளும், ஒவ்வொரு வேளைக்கும் பத்து இருபது வகை காய்கறிகளுடனும் 5, 6-வகை பலகாரங்களுடனும் 2 3வகைபாயாசங்களுடனும், 2, 3 வகை அப்பளங்களுடனும் விருந்துகள் நடக்கும். இவ்விருந்து செய்வதற்காக சமையல் காரர்கள் மாத்திரம் தினம் ஆள் ஒன்றுக்கு இரண்டு, மூன்று ரூபா கூலியில் 600,700 பேர்கள் அமர்த்தப்படுவார்கள். தவிரவும்மேற்கண்டபதினையாயிரம் பேர்களுக்கும் தினம் இவ்விதவிருந்தளிப்பதுடன் நபர் ஒன்றுக்கு நாலணா எட்டணா ஒரு ரூபாய் வீதம தட்சணையும் கொடுப்பார்கள், மற்றும்ஆயிரக் கணக்கான பார்ப்பனரல்லாதார் குழந்தைகளை உடன் கூட்டிக் கொண்டு போய் அவைகளையும பார்ப்பனப் பிள்ளைகள் என்று காட்டி அவைகளுக்கும் தட்சணை வாங்கிக் கொள்ளுவார்கள். அன்றியும் தூர தேசங்களில் இருந்து வரும் பதினாயிரக் கணக்கான நம்பூதிரி பார்ப்பனர்களுக்கு போக வர பிரயாணச் செலவும் சாப்பாடு தட்சணையும் கொடுத்து ஆள் ஒன்றுக்கு ஒவ்

ரோஜா முத்தையா

வொரு கட்டில் மெத்தை இரண்டு தலையணை சால்வை நான்கு நான்கு ஜோடி வேஷ்டிகள் முதலியவைகளும் கொடுப்பார்கள். மற்றும் இவைபோன்ற பல செலவுகளுக்காக மேற்கண்ட எட்டு லட்ச ரூபாயும் 56 நாள்களில் பஞ்சு பஞ்சாய்ப் பறந்து செலவாகிவிடும்,

இப்படிசெலவுசெய்து நடத்தப்படும் இந்த முறை ஜபமனது எதற்காக என்றால், சுமார் 200 வருஷத்திற்கு முன் இருந்த ஒரு ராஜா அந்நாட்டில்செய்தவதோ ஒரு சிற்றரசர்கள் யுத்தத்தில் சில பார்ப்பனர்கள் இறந்து போனதால், அந்தப் பாவம் தீர்ந்து தங்களுக்கு சந்ததி விர்த்தியாவதற்குபிராயச்சித்தமாகஇப்படி இந்தஇருநூறுஆண்டுகளாக ஆறு வருஷத்திற்கு ஒரு முறை எட்டு லட்சரூபாய் (அதாவது அந்த பார்ப்பனர்களின் குடும்பத்திற்கு போய்ச் சேரும்படி) செலவு செய்து முறைஜபம்செய்யப்பட்டு வருகின்றது. இந்த மாதிரியான முட்டாள் தனமான கொள்கைகள் உடையவர்களாகிய இந்து அரசர்களால் இந்தியா ஆளப்பட்டுவந்திருந்ததினால் தான், இன்றைய தினம் இந்தியா ஆயிரக்கணக்கான வருஷங்களாக அந்நிய நாட்டு நன்மையின் பொருட்டு அன்னியர்களால் ஆளப்படுவதில் ஏதாவது ஆச்சரியமிருக்க முடியுமா என்று கேட்கின்றோம். நிற்க இந்தப்படி ஆறு ஆறு வருஷத்திற்கு ஒரு முறை எட்டு எட்டுலட்சரூபாய் செலவு செய்து முறை ஜப பிராயச்சித்தம் செய்து வந்தும், அந்த ராஜாங்கத்திற்கு சந்ததி இல்லாமல் அடிக்கடி சுவீகாரம் செய்து தான் பிள்ளைகள் உண்டாக்கி பட்டம் கட்டி ஆளப்பட்டு வருகின்றது. இதை அந்தராஜியத்திலுள்ள ஒவ்வொரு ராஜாக்களும் கண்டு வந்திருந்தும், இம்மாதிரியான மூட நம்பிக்கை இவர்களைவிட்டுப்போகவில்லையானால், இவர்கள் ஒரு நாட்டை ஆள யோக்கியதை உடையவர்களா என்று கேட்கின்றோம். நமது இந்து கடவுள்களைவிட இந்து ராஜாக்களால் இந்திய நாட்டு செல்வங்கள் இம்மாதிரி மதத்தின் பேராலும் சடங்கின் பேராலும் வருஷம் வருஷம் பலகோடிக்கணக்கான ரூபாய்களாகபாழ்ப்படுத்தப்பெறுகின்றன.

திருவாங்கூர் இராஜாங்கம் வருஷம் வருஷம் இந்தப்படி இவ்வளவு லட்ச ரூபாய்கள் மத சம்பந்தமாகவும், சடங்கு சம்பந்தமாகவும் செலவு செய்துவந்தும், இன்றைய தினம் தோட்டத்தில் பகுதி கிணறுஎன்பதுபோல் அந்த ராஜாங்கத்தில் உள்ள மக்களில் அரைவாசிப்பேர் கிறிஸ்தவர்களும் மகமதியர்களுமாக இருக்கவும், மீதியிலும் அரைவே அரைக்கால் வாசிப்பேர் "சண்டாளர்" அதாவது, நிழல் கூட மேல்படக்கூடாதவர்களாக இருக்கவும், ஆன நிலையில் இருக்கின்றதென்றால் இந்த மதமும் சடங்கும் ஒரு காதறுந்த ஊசிக்காவது உபயோகப்பட்டிருக்கின்றதா என்று தான் கேட்கின்றோம். கடந்த ஒரு ஆயிர வருஷகாலமும் இந்தியாவின் மற்றபாகமும் சுதேச அரசர்களால் ஆளப்படும் சுயராஜ்ஜிய தேசமாய், ராமராஜ்ஜிய தேசமாய் இருந்திருக்குமானால்: இந்தியாவில் உள்ள மலைகள் எல்லாம் உடைக்கப்பட்டு கோயில்களாகவும் பாறைகள் எல்லாம் உடைக்கப்பட்டு சாமிகளாகவும், சொத்துக்கள் எல்லாம் அந்த சாமிகள் பேரில் எழுதிவைக்கப்பட்ட மானியங்களாகவும், பெண்களில் அரை வாசிப்பேருக்கு மேலாக அந்தசாமிக்கு பொட்டுக்கட்டிவிடப்பட்டு தாசிகளாகவும், மற்றும் அரைவாசிப்பேர் பார்ப்பனர்களை புணர்ந்தால் மோட்சம் என்று கருதிக் கொண்டிருக்கின்றவர்களாகவும், இருப்பதோடு இன்றையதினம்காப்பிக்கடையிலஎச்சில் கிண்ணம்கழுவும் பார்ப்பனர் முதல் தாசித் தெருவில் தாருக்கடைவைத்திருக்கும்பார்ப்பான வரை ஒருவர் தவறாமல் ரிஷிகளாகவும், முனிவர்களாகவும் சங்கராச்சாரிகளாகவும், மடாதிபதிகளாகவும், ஜீயர்களாகவும், குல குருக்களாகவும், மகந்துக்களாகவும் இருந்திருப்பதோடு பார்ப்பனர் தவிர மற்றார்கள் எல்லாம்அந்தபார்ப்பனர்களுக்கு தொண்டு செய்துகொண்டு அவர்கள் எச்சிலையில் மீதிவிட்டதை பொருக்கி சாப்பிட்டுக்கொண்டும், அவர்கள் கட்டி கிழிந்து தெருவில் எறிந்துவிட்ட கந்தைகளை கட்டிக்கொண்டு பார்ப்பனர்கள் வீட்டு வாயில்களில் மேல்வேஷ்டி இல்லாமல் முழங்காலுக்குக்கீழாக துணி தொங்காமல் சுருட்டி கட்டிக்கொண்டு இடது கையை மடக்கி வலது கச்சத்தில்வைத்து,வலதுகையால் வாயைப் பொத்தி நின்றுகொண்டிருக்க வேண்டி இருக்குமா? அல்லவா என்பதை இன்றைய தினம் திருவாங்கூரைப் பார்த்து எந்த தேசிய வாதியாவதுமதத்தைக் காப்பாற்ற தவம் கிடக்கும் மிதவாதியாவது, சடங்கைகாப்பாற்ற உயிரைவிடும் ஆஸ்திக வாதியாவது ஆட்சேபிக்கமுன் வரக்கூடுமோ என்றுகேட்கின்றோம். இந்த இருபதாவது நூற்றாண்டில் உலகமே விஞ்ஞான சாஸ்திர ஆட்சியில் இருக்கும்போது நமது நாட்டை இம்மாதிரி கடவுள்களும் சுயராஜ்ஜிய அரசர்களும் பாழாக்குவதைப்பற்றியும் இழிவுபடுத்துவதைப் பற்றியும் ஒருவருக்காவது வயிறுபற்றிஎரியவில்லையானால்,நெஞ்சம்குமுறவில்லையானால் இந்நாட்டுக்கு தேசிய உணர்ச்சியோ தேசிய சுயமரியாதையோ கடுகளவாவது இருக்கின்றதா என்று கேட்கின்றோம். தேசியம் தேசியம் என்று கடந்த ஐம்பது வருடகாலமாய் அடிபட்ட நாய்கள் தங்கள் வீட்டு வாசற்படியில் நின்று கொண்டு குரைப்பது போல் நாம் எல்லோரும் தான் குரைத்து வருகின்றோம், சந்து பொந்துகளில் எல்லாம் தேசிய உணர்ச்சியை ஊட்ட வேண்டுமென்று வானத்திற்கும் பூமிக்குமாகத் துள்ளித்துள்ளி குதித்து நமது தேசிய வீரத்தை காட்டுகின்றோம். பூரண சுயேச்சை வேண்டு மென்கின்றோம். எப்படி இருந்தும் இந்து சாமிகளின் கொள்கைகளையும், இந்து அரசர்களின் முட்டாள் தனங்களையும், இந்து மதத்தின் அயோக்கியத் தனங்களையும், ஒரு மயிர்க் கால்அளவு கூட அசைக்க நம்மால் முடியவில்லையே என்றால், இப்படிப்பட்ட நம்மால் இனி எப்படி 20மைல் பீரங்கியையும் மணிக்கு 500 மைல் வேகம் போகும் ஆகாயக்கப்பல் வெடிகுண்டையும் விஷப்புகைத் துப்பாக்கியையும்சிறிதாவது அசைக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்து இராணுவச் செலவைப்பற்றி பிரமாதமாய்ப பேசுகின்றோம். செலவுசற்று அதிகமென்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம். ஆனாலும், அந்த இராணுவ பலத்தின் ஒருபாகத்தால்தான் இன்று நாம "எமது சொத்து" "எமது பெண்ஜாதி" "எமது அபிப்பிராயம்" என்று சொல்லிக்கொள்ள வசதி உடையவர்களாயிருக்கின்றோம் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டி இருக்கின்றது. அன்றியும், அது இல்லாவிட்டால் இன்றைய தினம் நமது ஜமீன்களும் பாளையங்களும் மற்றும் அதுபோன்ற பாச்சாசாக்கோக்களும் மனுதர்மிகளும் நம்மை என்ன செய்திருப்பார்கள் என்பது நமக்கு தெரியும் எனவே, இப்படியே இன்றியமையாத செலவைக்கூட அடியோடு கண்டித்து இராணுவமே வேண்டியதில்லை என்கின்ற நமது தேசியம் இந்த சாமிகள் கொள்ளையையும், மதத்தின் கொள்ளையையும் இந்திய அரசர்கள் முட்டாள்தனக் கொள்ளையையும் சிறிதுகூட கண்டிக்க முன்வருவதில்லையே, அன்றியும் இவற்றைப்பற்றி பேசுவது தேசியமல்ல என்பதாக நமது பூரண சுயேச்சை வாதிகளால் வேதக்கட்டளையும் வெளிப்படுத்தப் பட்டாய் விட்டதே. நிற்க; இம்மாதிரி முட்டாள் அரசாங்கத்தையும், அக்கிரமத்தையும் அயோக்கிய தேசியத்தையும் இனியும் வைத்துக் கொண்டு வெறும் பார்ப்பனர்களை மாத்திரம் குற்றம் சொல்லுவதில் ஏதாவது பொருள் இருக்க முடியுமா என்றும் கேட்க வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். இன்றையதினம் திருவாங்கூர் பார்ப்பனர்களுக்கு நாம் என்ன புத்திமதி கூறுவது என்று நமக்கு விளங்கவில்லை இதற்காக அவர்கள் மீது என்ன குற்றம் சொல்லுவது என்று நமக்கு தோன்றவில்லை. உதாரணமாக "ஓ பார்ப்பனர்களே! எங்கள் ராஜா வைத்தியக்காரர் ஆதலால் அவர் ஏதாவது பணம்,கட்டில், மெத்தை வேஷ்டிகள் கொடுத்தால் வாங்காதீர்கள். சாப்பாடு போட்டால் சாப்பிடாதீர்கள். எங்கள் பெண்கள் அறிவில்லாதவர்களாதலால் அவர்கள் கூப்பிட்டால் போகாதீர்கள்" என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். அப்படிச் சொல்லுவதானாலும் அது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து "ஓ ஐயாவே! எங்கள் வீட்டு பெண் சற்று ஒரு மாதிரிநடவடிக்கை உள்ள பெண். ஆதலால் தங்கள் வீட்டு பையன்களை எங்கள் வீதிப் பக்கம் நடக்க விடாமல் அடக்கிவையுங்கள்" என்று சொல்வது போல் தானே இருக்கும்.

இன்னும் அநேகபார்ப்பனர்கள் நம்மை இந்த கேள்விகளைக் கேட்கின்றார்கள். பல மொட்டைக் கடிதங்களும் எழுதுகின்றார்கள். அதாவது "ஓய் குடி அரசு ராமசாமியாரே! நீர் எங்களாணும் பார்ப்பனர்களை வீணாய் திட்டுகின்றீர்? உங்கள் ஜனங்கள் புத்தி இல்லாமல் முட்டாள் தனமாய் எங்கள் வீடு தேடிவந்து கூப்பிட்டுக்கொண்டுபோய் எங்கள் காலில் விழுந்து பணம் காசு வேஷ்டி கொடுத்து சோறும்போட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வோம்? நீர்தானாகட்டும் யாராவது சும்மா ஒரு காசு கொடுத்தால் வேண்டாம் என்று சொல்லி விடுவீரா? அப்படி இருக்கும்போது எங்கள் காலிலும் விழுந்து காசும் கொடுத்தால் வேண்டாம் என்றால் அது எங்கள் முட்டாள்தனமாகாதா" என்று எழுதி இருக்கிறார்கள். திருவாங்கூர் போன்ற அரசாங்கத்தை வைத்துக்கொண்டு இதற்கு என்ன பதில சொல்வது என்பது நமக்கு புலனாகவில்லை, நமது நாட்டு ஏழைகள் கூலிகள் முதல் செல்வான்கள் கற்றவர்கள் பெரும் அதிகாரிகள் அரசர்கள் ஆகிய எல்லோருமே பெரிதும் இப்படிப்பட்ட மூடர்களாயிருப்பதோடு "தேசிய வீரர்கள்" "பூரண சுயேச்சைக்காரர்கள்" ஆகிய "பொது நலத்தொண்டர்கள்" என்பவர்களும் அவர்களுக்கு உதவியாய் இருந்தால், இந்த நாட்டுக்கு எப்படிதான் என்றுதான் விடுதலையும் சுயமரியாதையும் உண்டாக்க முடியும் என்று நமக்கு விளங்கவில்லை. மனிதர்கள் பணம் சம்பாதிக்கும் போது எவ்வளவு தந்திரமாய்,எவ்வளவு புத்திசாலித்தனமாய், எவ்வளவு சாமர்த்தியமாய்,


எவ்வளவு கன்னெஞ்சமாய், எவ்வளவு புரட்டு பித்தலாட்டம் அயோக்கியத்தனம் ஆகியவைகள் செய்து ஒன்றுக்கு இரண்டு விலை, ஒன்றுக்கு இரண்டு கூலி, ஒன்றுக்கு இரண்டு சம்பளம், ஒன்றுக்கு இரண்டு வட்டி ஆகிய முறையில் நாட்டுமக்களைக் கசக்கி பிழிந்து சம்பாதித்தது அந்தப் பொருளை சிறிதாவது கவலை இல்லாமலும் அறிவில்லாமலும் ஆராய்ந்து பார்க்காமலும் சிக்கனமில்லாமலும் கண்ணை மூடிக்கொண்டு குடிகாரன் தனது அதிக போதையினால் கையிலிருந்தும் மடியிலிருந்தும் கீழே விழும் பணங்களை கவனிக்காமல் அந்த போதையை அனுபவிப்பதுபோல் இந்த மாதிரி சாமி என்றும், சடங்கு என்றும், பாழாக்குவதாயிருந்தால் எப்படி ஒரு நாட்டின் பணம் ஒரு நாட்டின் ஏழைகளின் நன்மைக்கு உபயோகப்படும் என்பது நமக்கு விளங்கவே இல்லை. இந்த நாட்டுக்கு தொழிலாளிகள் முன் வரவேண்டுமானால், ஏழைகளின் கஷ்டம் நீங்க வேண்டுமானால், நாட்டின் தரித்திரம் தொலையவேண்டுமானால்-முதலில் இந்த நாட்டு பணக்காரர்களும் பெரும பணம் சம்பாதிக்கிற முதலாளிகளும் அதிகாரிகளும் அரசர்களும் யோக்கியர்களாக வேண்டும். அறிவாளிகளாக வேண்டும் இல்லாதவரை இவர்கள் அடியோடு முதலில் அழிக்கப்படவேண்டும். அந்தப்படி இவர்கள் யோக்கியர்களாகவோ, அழிக்கப்படவோ வேண்டுமானால் முதலில் இந்த மாதிரியான கடவுள்களும் மதமும் ஒழிந்தாக வேண்டும். அப்படிக்கில்லாமல் எந்தப் பேர்வழியாவது எந்த மாதிரியிலாவது இப்படி கடவுள்களையும் மதங்களையும் வைத்துக் கொண்டிருக்கிற வரையில் என்ன தேசியம் பேசினாலும் ஒருக்காலும் நமது நாடு உருப்படாது என்றுதான் சொல்லுவோம். அதாவது கா..போல்வாழ்ந்து இளைத்தலை ஆசாரமாய்க்கொள்ளும் இடமாகுமென்று தான் சொல்லுவோம். நிற்க, இனி இந்திய மடாதிபதிகள் என்று சொல்லிக்கொண்டு இந்திய செல்வங்களை கொள்ளையடித்து பாழாக்குகின்றவர்கள் எத்தனைபேர்கள் என்பதை சற்றுயோசித்துப்பார்க்கவேண்டுகின்றோம். சங்கராச்சாரிகள் என்று ஒரு ஏழு எட்டு பார்ப்பனர்கள் இந்தியாவிற்குள் தினமும் கிராமம் கிராமமாய் பட்டணம் பட்டணமாய்ச் சுற்றிச் சுற்றி அடிக்கும் பகற் கொள்ளைக்கு ஏதாவது அளவு கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றதா? ஒவ்வொரு சங்கராச்சாரிகளும் அரண்மனைபோல் மடமும், யானை, குதிரை, பல்லக்கு படைகள், நகைகள், கூடாரங்களுடனும் தளங்களுடனும் சுற்றுப் பிரயாணங்கள் நடப்பதைப் பார்த்தால் மதம் பதைக்கின்றது. இரத்தம் கொதிக்கின்றது. இவர்களுக்கு ஒவ்வொரு ஊரிலும் உள்ள பணக்காரர்கள் பதினாயிரம், ஐயாயிரம், ஆயிரம், ஐந்நூறு இருநூற்றைம்பது ரூபாய்கள் என்கின்ற கணக்குப்படி காணிக்கைகளும், 108-1008 ரூபாய்கள் என்கின்ற கணக்குப்படி பாதபூசைகளும், தினம் ஒருவேளை பிச்சைக்கு என்று 4?7-436 ரூபாய்களும் கொடுக்கப்பட்டுவருகின்றது. அத்தோடு அவர்கள் காலிலும் விழுந்து கால் கழுவின பாத தீர்த்தம் அருந்தப்படுகின்றது. இப்படியாக ஆயிரக்கணக்கான வருஷங்களாக நாளெல்லாம் நடந்துவருகின்றது ஆனால் இப்படிப்பட்ட சங்கராச்சாரிகளைப் பற்றி பணம் கொடுக்கின்றவர்களில் எந்த மூடர்களாவது சிந்தித்துப் பார்த்து பணம் கொடுக்கின்றார்களா? என்றுபார்த்தால், அதுஒரு சிறிதும் தென்படுவதில்லையே, சங்கராச்சாரி என்றால் என்ன! அவர் யார்? யாருக்கு குரு? எதற்காக குரு? அவரால் யாருக்கு என்னபிரயோஜனம்? எதற்காக பணம் கொடுக்க வேண்டும்? அந்தப் பணம் என்ன ஆகின்றது? என்பதுபோன்ற விஷயங்களில் ஏதாவது ஒன்றைப்பற்றி கவனித்துப்பார்த்து யாராவது பணம் கொடுக்கின்றார்களா? ஒரு சிறிதும் இல்லவே இல்லையே. அந்தோ! அந்தோ! வெகு பணம் வீணாய்ப்போகின்றதே. இதனால் நமது மானமும் மனிதத்தன்மையும் வீணாய்ப்போகின்றதே. உதாரணமாக எந்த சங்கராச்சாரியும் ஸ்நானம் செய்வதற்கு முன்தான் நம்மைப்பார்ப்பார் என்னெனில் நம்மைபார்த்தால் சூத்திரனைப் பார்த்த தோஷமும், நமது நிழல்பட்டால் சண்டாள நிழல் ஸ்பரிசமும், நம்முடன் பேசினால் நீச பாஷை உச்சரித்த பாதகமும், அவரை சூழ்ந்து கொள்ளுகின்றன. ஆதலால் இவற்றிற்காக அவர் தோஷபரிகார பிராயச்சித்தம் செய்யவேண்டி இருக்கிறது. இதன் நிமித்தம் அவர் ஸ்நானம் செய்வதற்கு முன்பாகவே நம்மை பார்த்து நம்மிடம் பேசி நமக்கு தீர்த்தம் கொடுத்து பணம்பெற்று அந்தப்பணத்தைக் கொண்டே மேல் கண்ட பிராயச்சித்தங்களும் செய்துவிட்டு பிறகு பூஜைசெய்து சாப்பிடுகின்றார். தவிரவும், இந்தப்பணங்களால் சமையல்செய்து ஆயிரக்கணக்கான வெறும் பார்ப்பனர்களுக்கே சாப்பாடு போடுகின்றார். எஞ்சியதை ஊருக்கு அனுப்புகின்றார். இந்தப்படி இனியும் குட்டி ஆச்சாரிகள் மடம் எத்தனையோ? ஆகவே இப்படிப்பட்ட சங்கராச்சாரிகள் கொள்ளை எத்தனை கோடி என்பதை வாசகர்கள்தான் கணக்கு போட்டு பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றபடி ஜீயர்கள், பட்டர்கள், சுவாமிகள், குலகுருக்கள் என்கின்ற சில்லரைப் பார்ப்பனக்குருக்கள் கொள்ளைகள் ஒரு புறமிருக்க, இனி பார்ப்பனரல்லாத பண்டார சன்னதிகள் என்ற மடாதிபதிகள் கொள்ளைக்கும் கணக்கு வழக்கில்லை. சாதாரணமாய் தஞ்சை ஜில்லாவில் மாத்திரம்உள்ள இரண்டுமூன்று பண்டார சன்னதிகளின் வரும்படி ஆண்டு ஒன்றுக்கு 24 லட்ச ரூபாய்களுக்கு குறையாது என்று சொல்லலாம். இதுபோல் மற்றும் நம் நாட்டில் எத்தனையோ மடாதிபதிகளும் பண்டார சன்னதிகளும் ஆயிரக்கணக்கான பேர்கள் நமது கண்களுக்கு தென்படாமல் இருக்கின்றார்கள். இவர்கள் சொத்தும் வரும்படியும் எவ்வளவாகும்? அது என்ன ஆகின்றது? யாருக்கு பலன் கொடுக்கின்றது? இவைகளால் நாட்டிற்கு என்ன பலன்? என்று யாராவது, எந்த தேசிய ஜாதிகளாவது மதவாதிகளாவது, ஆஸ்திக வாதிகளாவது, கவனிக்கின்றார்களா என்று கேட்கின்றோம். எனவே, நமது நாட்டின் தேசியமும் மதவாதமும் ஆஸ்திகமும் எவ்வளவு புரட்டின் பேரிலும் அயோக்கியதனத்தின் பேரிலும் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை இப்போழ்தாயினும் மக்கள் உணர முடிந்ததா என்று கேட்கின்றோம்.

## சுயமரியாதை கலப்பு மணம்

நாளது 8-12-29 ஞாயிற்றுக்கிழமையன்று ஈரோட்டில் வைக்கம்வீரர் உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாளிகையில் குருவிக்கரம்பை, சாமிநாத முதலியாரவர்களின் புதல்வர் ரிவோல்ட் உதவி ஆசிரியர் திருவாளர் எஸ். குருசாமி அவர்களுக்கும் திருவாரூர் திரு. டி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் புதல்வி திருவளர்ச்செல்வி எஸ். குஞ்சிதம் அவர்களுக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெறும்.

* * *

லால்குடி:—பார்ப்பனீய மொழிந்த சடங்கு சமீபத்திலுள்ள அம்பில், ஜங்கமராஜபுரத்தில் சென்ற 27-11-29ம் நாள் எம். சிங்கார வேலு நாயுடு அவர்கள் மனைவியாரின் 16ம் நாள் இறுதிசடங்கு பார்ப்பனீயமற்ற சுயமரியாதை முறையில் நடைபெற்றது. இதன் ஞாபகார்த்தமாய் நன்கொடை ரூபாய் ஒன்று குடியரசு பத்திரிகைக்கு லால்குடி பாணகல் அரசர் வாசகசாலை காரியதரிசி மூலமாய் அனுப்பப்பட்டுள்ளது.



திரு. கண்ணப்பர் தலைமையின் கீழ் 17-11-29 ல் விருத்தாசலத்தில் நடைபெற்ற தென்னாற்காடு ஜில்லா 15-வது ஆதிதிராவிடர் மகாநாடு

# புராண ஆபாசங்கள்

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

(தரும பரிக்ஷை யென்னும் பண்டைய ஓலைச் சுவடியில் கண்டது)

8ம் நாள்

லட்சுமி வாசனும் சத்ய சொரூபனும் சாகித்திய விநோதனும் சகல கலா வல்லவனுமான மனோவேகன் தன் தோழனாகிய வாயுவேகனுடன் ஜைன முனிவர் (சமண முனிவர்) வேடம் பூண்டு பாடலீபுர நகரத்தில் பிரசித்தமாயுள்ள பிரம்மாலயத்திற் சென்று பேரிகை கொட்டி சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பேரிகை சப்தத்தை கேட்டு விப்ரர்களும் பொது ஜனங்களும் ஏராளமாக வந்து கூடிவிட்டார்கள்! விப்ரர்கள் அவ்விரு முனிவர்களையுங் கண்டு தாங்கள் தயவு செய்து இந்த உயர்ந்த ஆசனத்திலமருங்கள். எங்களை வாதத்தில் வென்ற பின் தங்களுக்கு அச்சிம்மாதனமுரியதேயன்றி அதற்கு முன் யாவரும் அமருவது வழக்கமல்லவென்று கேட்டுக்கொண்டனர். உடனே போலி வேடதாரிகளாய அவ்விரு முனிவர்களும் வேறாசனத்திலமர்ந்தார்கள். உடனே விப்ரர்கள் எழுந்து, ஹே! முனிகளே! நீங்கள் இவ்வாறு தவ வேடம் பூண காரணமாயிருந்த விரக்தி யாது என்று கேட்டார். மனோவேகனும் புன்னகையுடன் எழுந்து எங்கள் தவத்திற்கு காரணமென்னவெனில், நாங்கள் வத்ஸவதேசத்தில் கௌசாம்பி என்னும் நகரத்தரசனான சந்திரசேகர ராஜனின் குமாரர்கள், எங்கள் தாயார் மிருகாவதி. இன்னும் எங்களுடன் பிறந்த சகோதரர்களான நந்தகன், விரஷபன், விமலன் என்று மூவர் இருக்கின்றனர். இவ்வாறு நாங்கள் ராஜவைபவத்திலிருக்கும்போது எங்கள் தகப்பனார் மேகம் கூடி கலைவதைக்கண்டு விரக்தியாகி எங்களில் இளையவனான விமலனுக்குப் பட்டங் கட்டிவிட்டு தீட்சை பெற்றுக்கொண்டு தவவனம் போய்விட்டார். மூத்த பிள்ளைகளிருக்க இளைய பிள்ளைக்குப் பட்டமளித்தாரென்று கோபங்கொண்டு அதுவே விரக்தியாகி யமதாவென்ற ரிஷி ஆஸ்ரமத்தில் சேர்ந்து நாங்களிருவரும் தீட்சையை பெற்றுக்கொண்டு சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்து அங்க, வங்க, கலிங்க, கொங்க, தெலுங்க, மதங்க, ஜ்யோனக, லாட, [illegible], சேர, சோழ, நேபாள, பாஞ்சால, பங்காள, வராள முதலிய தேசங்களெல்லாம் சஞ்சரித்து பல உத்தண்ட வாதிகளை ஜெயித்து வருகையில், பாடலீபுரத்தின் மகிமையையும் இங்குள்ள வாதவல்லவர்களின் திறமையையுங் கேள்விப்பட்டு இங்கு வந்தோம் என்று கூறி முடித்தான். இதைக்கேட்ட விப்ரர்கள் சரி சரி, இவர்கள் வாதம் பண்ணவே நேராக வந்திருக்கின்றார்களென்று தெரிந்து ஹே! ரிஷிகளே! நீங்கள் கடவுளை ஜினனென்றும், சர்வக்ஞனென்றுங் கூறுகின்றீர்கள். அவர் ஆக்கல் அழித்தல் காத்தல் என்ற முக்குணமுமில்லாத சர்வக்ஞனாரென்றும், அவரே உலகுக்கு இறைவனென்றுங் கூறுகின்றீர்கள். அரி, அரன், அயன் மூவரும் கடவுள்களல்லவா? அவர்கள் சர்வக்ஞராயிற்றே. இவைகளை நீங்கள் மறக்கலாமா யென்றனர். "ஐயா, விப்ரர்களே! இம் மும்மூர்த்திகளையும் சர்வக்ஞரென்று சொல்ல உங்கள் மத புராணங்களிடம் கொடுக்கின்றனவா முழுதும்வாசித்துப் பார்த்தீர்களா?" யென்றனன். இவ்வார்த்தையைக் கேட்ட விப்ரர்கள் எங்கள் புராணம் என்ன கூறுகின்றது? தயவு செய்து விவரியுங்கள் என்றனர். மனோவேகன் புன்முறுவல் கொண்டு உங்கள் சபையில் கபிலனென்றவனைப் போன்று ஆட்களிருப்பின் அதை சொல்ல முடியாது என்றான். விப்ரர்கள் அந்தக் கதை யெப்படி என்று கேட்க, மனோவேகன் சொல்லுகின்றான். மதுரையென்றபட்டணத்தில் காளதாசன் என்கிற அரசனிருந்தான். அவன் ஒரு நாள் தன்வீட்டிலிருந்து ஒரு முக்கியமான வேலையைக்குறித்து புறப்படுகையில், அவனுடைய புத்திரன் கபிலன் என்ற நான்கு வருடத்திய பையன் தும்மினான். அத்தும்மலால் தன் காரியத்திற்கு இடையூறுண்டாகுமென்று கோபித்து அக்குழந்தையின் நாசியை அறுத்துவிட்டான். மூக்கறுந்த அந்தக்குழந்தையை அதன் தாயார் பல சிகிச்சைகளால் இரணத்தை ஆற்றிவளர்த்து வந்தாள். இவ்வாறு 10-வயதாகி வளர்ந்து வரும் மூக்கறையன் ஒருநாள் கடைத்தெருவு சென்றிருந்தான். அங்குள்ள கண்ணாடி கடையைக்கண்டு அவ்விடம் சென்றான். அங்குள்ள ஒரு கண்ணாடியைக் கேட்க கடைக்காரன் உயர்ந்த கண்ணாடியைக் கொடுத்தான். அப்பையன் அக்கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கும்போது மூக்கில்லாமலிருந்தது. இதைக் கண்டுகோபித்து ஹே! கடைக்காரா! மூக்கில்லாத கண்ணாடியையா நான் கேட்டேன்? இது வேண்டாம் என்று அதைத் தாக்கி கீழே போட்டு உடைத்தனன். கண்ணாடியை இழந்த கடைக்காரனும் அங்குள்ளவர்களும் நகைத்து ஓ இளவரசே! உமக்கு தான் மூக்கில்லை. கண்ணாடியில் யாதொரு குற்றமுமில்லை ஆகையால் கடைக்காரனுக்குண்டாகிய நஷ்டத்தைக்கட்டிக் கொடுங்கள் என்றனர்.

இவ்வாறு தன்னிடத்திலிருக்கும் குற்றத்தை உணராமல் களங்கமற்ற கண்ணாடியின்பேரில் குற்றங்கூறி உடைத்தவனைப் போன்றவர்கள் உங்கள் சபையிலிருந்தால் நாங் சொல்ல மாட்டோம் என்றனர். இதைக்கேட்ட விப்ரர்கள் அத்தகைய மூடர்கள்யாருமில்லை நீங்கள் தாராளமாகக் கூறுங்களென்றனன். உடனேவாயுவேகன் எழுந்து உங்கள் சபையில் நியாயமறியா அரசனைப் போன்றவர்இருப்பின் சொல்லிப் பயனென்ன என்று கூற, விப்ரர்கள் அக்கதையையும் கூறுங்கள் என்றனர். உடனே வாயுவேகன், "கௌசிபுறமென்ற ஓர் பட்டினத்தில் ஒரு வீட்டில் திருடன் கன்னம் வைத்தான். அச்சமயம் அச்சுவரானது திடீரென்று இடிந்து திருடன் பேரில் விழ அதனால் அக்கள்ளன் இறந்து விட்டான். இவ்வரலாறு அரசன் கேள்விப்பட்டு அவ்வீட்டுக்குரியவனை அழைத்து இந்தத் திருடனின் மரணத்திற்கு உன் வீட்டுச்சுவரே காரணமாகையால் அதற்கு நீயே குற்றவாளியாவாயென்றான். அதைக்கேட்ட வீட்டுக்காரன் அரசே! நான் கொல்லத்துக்காரரைக் கொண்டே சுவர் எழுப்பினேனேயன்றி என் வேலை அல்லவென்றான். உடனே கொல்லத்துக்காரனை வரவழைத்து, நீசுவரை அழுத்தமாக வைக்காததால் சுவரிடிந்து ஆள் மாண்டான் ஆகையால் உன் பேரில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறதென்றான். கொல்லத்துக்காரன் பயந்து, ஐயோ நான் இந்த சுவர் வைத்துக் கொண்டிருக்கும்போது அந்ததட்டான் கடையில்ஒரு தாசிஆடிபாடிக்கொண்டிருந்தாள். அவ்வாட்டத்தால் நான் இந்த சுவற்றைக் கவனிக்கவில்லை யென்றான். ஆனால் தாசியின் பேரில் குற்றஞ்சாட்டி கூப்பிட்டு விசாரிக்கையில் அவள் என்பேரில் குற்றமில்லை. என் நகையை இவர் சீக்கிரம் செய்து கொடாததால் அவர் கடையில்வந்தாடினேன். ஆகையால் தட்டாரின் குற்றமேயொழிய யென் குற்றமல்லவென்றனள். உடனே அரசனும் தட்டான் பேரில்குற்றம்சாட்டிகூப்பிட்டுவிசாரித்தார்கள் அவனும்பயந்து அரசே என்பேரில்யாதொருபிழையும்இல்லை நான் சுவரன் வாங்கிவர சந்தைக்குப் போயிருந்தேன் அவ்விடத்தில் திடீரென்று வன்கையிலிருந்த திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டுபோய் விட்டார்கள். ஆகையால் நகை செய்ய நான் அதிகமாயிற்றென்றுதப்பித்துக் கொண்டான். உடனே அரசன் மந்திரியை யழைத்து திருடர்களைக்கண்டு பிடிக்கச்சொல்ல, மந்திரியும் சந்தையிலுள்ள எல்லாரையும் கைது செய்து அரசனிடத்தில் கொண்டுவந்து இவர்களெல்லாரையும் கொன்றுவிட்டால் இதில் தட்டானிடமிருந்து திருடினவர்கள்கூடமாண்டுபோவார்கள் என்றார்கள் இதைக்கேட்டு அரசனும்உடன்பட்டான் என்ற கதையுண்டு. அத்தகைய கொடுங்கோலரசனைப்போன்ற நீதியறியாதவர்கள் உங்கள் சபையிலிருந்தால் சொல்லமுடியாது" யென்றனன். விப்பிரர்கள் நகைத்து, இத்தகைய மூடர்கள் எங்கள் சபையில் இல்லை கூறுங்கள் யென்றனர். உடனே மனோவேகன் யெழுந்து, சுவ

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

## 100 வருஷ பஞ்சாங்கம்

இதில் இங்கிலீஷ் 1854 முதல் 1954 வரை எல்லா வருடங்களுடன் தமிழ், இங்கிலீஷ் வருடம், மாதம், தேதி, கிழமையாகியவைகள் அடங்கியுள்ளது.

மற்றும் (இங். 1854) ஆனந்தாதி ஆனந்த அக்ஷயாந்தம் (இங். 1927) வரை பஞ்சாங்கங்களின் எல்லா அங்கங்களும் அடங்கிய முழுப்பகுதியும் சேர்ந்துள்ளதுடன் உபயோகமுள்ள பல சோதிட கணித சாரப்பொக்கிஷமும் மற்றும் பல உலகசம்பவக் குறிப்புக்களும சேர்க்கப்பெற்று சுமார் 1200 பக்கங்களுடன் உயர்ந்த கில்ட் அழுத்திய சிறந்த பயிண்டுள்ளது. இது பொது மக்கட்கும், வக்கீல்கள், ஆபீசர்கள், பிராசுதாரர்கள், சோதிடர்கள் மற்றுமனைவருக்கும் உபயோகமுள்ளது. குறைந்த விலை.

விலை ரூ. 7-0-0 தபால் செலவு ரூ. 0-12-0.

வெளிநாட்டிற்கு தபாற்கூலி வேறு முன்பணம் அனுப்பவும்.

எஸ். கிருஷ்ணசிங், புத்தகசாலை, மதுரை (S. I.)

ரன் தாருகாவனத்திலுள்ள ஒரு ரிஷியின் பத்தினியைக் கண்டு மோகித்து நாகரூபத்தினால் அவளை மயக்கி மாறு வேடத்துடன் அவளுடன் சுகமனுபவித்து வந்தனன். இதனால் அந்த ஸ்திரீ தன் நாயகனாகிய ரிஷியினிடத்தில் முன்னிருந்த விருப்பங் காட்டாதிருந்தனள். அந்த ரிஷியும் தன் மனைவி தன்னிடத்தில் அன்பு குறைந்திருக்கின்றாளென்பதை தெரிந்துகொண்டு அவள்பேரில் சந்தேகம் பூண்டு ஒருநாள் தான் வெளியே போவதாகவும், மாலைப் பொழுதிற்கு வருவதாகவுங் கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டனன். உடனே ஈஸ்வரனும் அங்குவர, இருவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். அச்சமயத்தில் வெளியே சென்ற ரிஷியும் உடனே திரும்பி ஆச்ரமத்தில் நுழைந்தான். அப்பொழுதே, தன் மனைவியின் சோரச் செய்கையைக் கண்டு கோபித்து, அந்த சோர நாயகனைப் பார்த்து, 'உன்னுடைய சிசுனம் அற்று விழக்கடவது' என்று சபித்தான். அச்சாபத்தால் ஈஸ்வரன் சிசுனம் அற்று கீழே விழுந்தது. ஈஸ்வரன் மகா கோபமுடையவனாகி, இந்தசிசுனம் உன்நெற்றியில் ஒட்டிக் கொள்ளக் கடவது என்று எதிர்சாபங்கொடுக்க, அதுவும் துள்ளி அந்த ரிஷியின் நெற்றியில் ஒட்டிக்கொண்டது. இந்த அதிசயத்தைக் கண்ட ரிஷி, ஈஸ்வரனே இங்கு வந்தவரென்று ஞானத்தால் அறிந்து அவர் பாதத்தில் விழுந்து எ! சுவாமி! நான்செய்தது தப்பிதமே. என் பிழையைப் பொறுத்தருளவேண்டும். என் பேரில் தயவு வைத்து என் நெற்றியில் ஒட்டிக்கொண்டலிங்கத்தை விலக்கும்படி அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். ஈஸ்வரனும் [illegible]னைக் கொண்டு அக்கோலத்துடனே கைலாசகிரிக்குவருவாயாக வென்று கட்டளையிட்டுச் சென்றனன். ரிஷியும் வெகு ஆவலுடன் நெற்றியில் ஒட்டிக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கும் சிசுனத்தை தன்கையினால் தூக்கிப்பிடிக்க, மேலும் நீளமாக வளர்ந்து கீழே தொங்கிற்று. அம்மனை[illegible] கண்ட மற்றொரு ரிஷி ஓடிவந்து அதிகமாக வளர்ந்த லிங்கத்தைத் தூக்கிப் பிடிக்க அதற்கு மேலும் வளர்ந்து தொங்கலாயிற்று. இதைக் கண்ட தாருகாவனத்து ரிஷிகளெல்லாம் சேர்ந்து தூக்க, அவ்வளவும் நீளமாக வளர்ந்து கடைசியில் கொ[illegible]சம்கூடவிடாது தொங்கிற்று. மறுபடியும் அதைத் தாங்க ரிஷிகளில்லாததால் அதனுடன் அங்கிருந்[illegible]டத்தார் [illegible] இழுத்துக் கொண்டு கைலாசகிரிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இவ்வதிசயத்தைக்கண்டு பார்வதி விழுந்து விழுந்து நகைத்தாள், ஈஸ்வரனும் [illegible] ரிஷிக்கு [illegible] கீழே [illegible] கட்டளையிட அவ்வா[illegible] அந்த லிங்கத்தை [illegible] பார்வதியின் யோ[illegible] இந்த அடையாளத் [illegible] போக்கியமாக பூலோ[illegible]கத்தில் வைத்து கும்பிடுங்களென்று அருள்புரிய ரிஷிகளும் அவ்வாறே பரம்பரையாய் லிங்க பூஜையென்று நாமங்கொடுத்து பூஜித்து வருவதை யாவருமறிந்தவிஷயந்தானே. இதுவும் தவிர ஆதியில் சராசரமெல்லாம் அழிந்து ஒன்றுமில்லாத ஒரு காலத்தில் ஆச்சரியமாக ஒரு சரீரம் உண்டாயிற்று. அந்த சரீரம் ஒன்று இரண்டாயிற்று. இரண்டிலொன்று ஆகாயத்தில்போயிற்று. மற்றொன்று கீழேயே இறங்கிற்று. மேலேசென்ற அண்டில் சொர்க்கம் முதலாகிய லோகங்களுண்டாயின. கீழே இருந்ததில் பூமி மலை சமுத்திரம் முதலியவைகளுண்டாயின. இவைகளிரண்டிற்கும் மத்தியில்தான் சதாசிவன் பிறந்தான். அவன் எட்டு திக்கும் நோக்குகையில் ஒருவரையுங்காணாது பிரமித்து தன் இடது தோளைப்பார்க்க அங்கே விஷ்ணு பிறந்தான். வலது தோளை நோக்க அங்கே பிரம்மா பிறந்தான். இவ்வாறு மூவருந் தோன்றி ஸ்திரீ இல்லாமல் அநேக நாளிருந்தார்கள். பிறகு வரவர மூவருக்கும்காமாக்கினி பொறுக்கமாட்டாமல அவஸ்தையுற்றுக்கடைசியாகபிரம்மாஒரு பெண் உருவம் எழுதினான். அதற்கு விஷ்ணு உயிர்கொடுத்தான். உடனே அந்தப்பெண்நடக்கவும்பேசவும் ஆரம்பிக்கவே சிவன் சேலை கொடுத்தான். இவ்வாறாக ஒருபெண்ணை உற்பத்தி செய்து பிரமயாளெனக்கென்றும், விஷ்ணு எனக்கென்றும், சிவன் நான் சேலை கொடுத்தேன் எனக்குதானென்றும் சண்டையிட ஆரம்பித்து அப்பெண்ணை மூவரும் பிடித்திழுத்துத் தொந்தரவு செய்தார்கள். ஒருவருக்கொருவர் விடாதிழுத்தும் முடியாமல் மூவரும்யுத்தம் செய்யஆரம்பித்தார்கள். இக்கோலத்தைக் கண்டதேவர்கள் ஓடிவந்துஅவர்களை விலக்கிஎன்ன அயோக்கியத்தனமான சண்டையா யிருக்கிறது. இது உங்களுக்குக் கௌரவமாகுமாவென்று கண்டித்தனர். உடனே மூவரும் தலைகுனிந்து நீங்கள் எவ்வாறுதீர்மானிக்கிறீர்களோ அவ்வாறே நாங்கள் [illegible] விடுகிறோம் என்று கூறி நிற்க தேவர்களும் நன்றாக ஆராய்ந்துஉரு எழுதினவன் தந்தை, உயிர்கொடுத்தவன் தாய், உடைகொடுத்தவன் புருஷன்; ஆகையால் இப்பெண் சிவனுக்கே உரியவளென்று தீர்மானித்து இப்பெண்ணை ஈஸ்வரனிடத்தில் ஒப்பித்துவிட்டு போய் விட்டார்கள். பிரம்மாவும் விஷ்ணுவும் ஒன்றும் பேசமுடியாமல்திரும்பி விட்டார்கள். ஈஸ்வரன் அப்பெண்ணோடு கூடி இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தான். இவ்வாறு சில நாள் சென்றதும் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் மனம் பொறுக்க முடியாமல் ஓடிவந்து அப்பெண்ணின் சேலையை பிடித்திழுத்து அமணமாக்கினார்கள். அதனால் அக்கன்னி [illegible] வெட்கி [illegible] நதி[illegible]போய்விட்டாள். அவ்விடத்தில்தான் கங்காநதி உற்பத்தியாயிற்று. பிறகு மூவரும் [illegible]வில்லாமல் [illegible] மூவரும் ஒரு மனதாகி பிரம்மா உருவெழுதவும், விஷ்ணு உயிர் கொடுக்கவும், ஈஸ்வரன் உடை அளிக்கவுமாக அநேகஸ்திரீகளை உற்பத்திசெய்து காம சுகமனுபவித்தார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆ! ஹா!! என்ன கோரம். இப்படியும் ஒரு சர்வக்ஞன் இருப்பானா? நல்ல வேடிக்கை. ஐயா பிராமணர்களே! நன்றாய் சிந்தித்துப் பாருங்கள். இம்மூர்த்திகளின் திருவிளையாடல்களை, இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள். (தொடரும்)

# தன் மதிப்பு

(ஸ்ரீ ஆதிநாதன்)

'பெருமையும் சிறுமையும்தான்தர வருமே' ஒருவனுக்குத் தன் மதிப்பும் இழிவும தன்னாலே (தனது முயற்சியினாலே) வரவேண்டுமே யொழிய பிறர் தர வாராது.

தன் மதிப்பு யாருக்கு வேண்டும்? ஏழைகளுக்கும், இழிகுலத்தோர் என்று ஒதுக்கப்பட்டோருக்கும் தான்.

"பெருக்கத்து வேண்டும்
பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு"

என்றார் வள்ளுவனார்.

செல்வக் காலத்திலும் உயர்ந்த குலம் எனப் பிறர் புகழும் நிலையிலும் உள்ளவர்களுக்குத் தன் மரியாதை வேண்டியதில்லை. அடக்கம் தான் அழகு. வறியரும் இழிந்தோரென்று எண்ணப்படுவோரும் தமது உயர்வை விட்டுவிடக்கூடாது.

என்ன உயர்வு? தாம் மக்கள் படைப்பில் எவருக்கும்ஒத்தவர்களே அன்றி இழிந்தவர்களில்லை என்று காட்டுவது.

எவ்வாறு? பொதுவான கோயில் குளங்களிலும் தெரு பள்ளிக்கூடங்களிலும் உரிமையைப்பெறல்வேண்டும்.

தம்மிலேயே மிகவும் தூய்மையும் ஒழுக்கமும் பெறல் வேண்டும்.

கல்வி செல்வங்களை அதிகப்படுத்தல்வேண்டும். இதைவிடமுன்னேற வினாவானவழி எது வென்றால், நாகரீக முறைகளை உடனே கைக்கொண்டு வெளிநாடுகளுக்குக் கடல் கடந்தும் போய்விடுவதுதான்.

பொதுப்பட பஞ்சமர் கிறிஸ்தவ மதம் தழுவிக் கல்வி உத்தியோகம் நாகரீகம் பெறுதல்லவதுதான். அது அவர்களுக்கு உயர்வைக்கொடுக்கும். இதுபோல்தான் முன்பு மகமதிய புத்த ஜைன மதங்களைத் தழுவினோரும் ஒத்து உயர்ந்து விட்டனர்.

இப்பொழுது பல பிரிவுக்கு உள்ளாகிறோமே என்று வருந்தினாலும் வருந்தலாம். எல்லாரும் கிறிஸ்தவர்களாகிப் புதியமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் தொழில்களையும் மேற்கொண்டால் அது சிறவாமல் போகாது.

துருக்கியும் ஜப்பானும் நாகரீகப் பழக்க வழக்கங்களாலும் நூதன தொழில் முறையாலும்தான் மேல் நாட்டாரை யொத்து உயர்வடைய முயல்கின்றனர். அவர்கள் மதத்தைக் கடைசிப்படியாக வைத்து அவ்வளவு பொருட்படுத்துவதில்லை. நமது நாட்டில் மதத்தின் பெயரால் பல தீங்குகள் இழைக்கப்பட்டு வருகின்றன. குலவேறுபாடு, பொது மகளிர் வாழ்க்கை, போலி மடாதிபதிகள், ஜீயர்கள் ஏற்பட்டு நிலைபெற்றுவருவது இந்த பாழும் மதத்தினால் தான். (தொடரும்)

## நோட்டீஸ்

உடுமலைப்பேட்டை பிரின்ஸ்பல் டி. மு. கோர்ட்டில்
அசல் நெம்பர் 131 oN. 1929
எஸ். டி. சுப்புராவ் வாதி.
சிவகுருநாதபிள்ளை வகையறா பிரதிவாதிகள்.

மேற்படி நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் கிரய பாக்கித் தொகைக்காக ரூ. 3000க்கு தாவா செய்திருப்பதில் 3-ம் பிரதிவாதி அண்ணுக்குட்டி என்கிற திருமூர்த்தி பிள்ளைக்கும் 6-ம் பிரதிவாதி சரவண பெருமாள் பிள்ளைக்கும் பல தடவைகளில் சமன் எடுத்தும் சர்வாகாததால் 22-11-29யில் ஆன உத்தரவின்படி மேற்படி பிரசுதான விவரம் இதன் மூலமாய் மேற்படி பிரதிவாதிகளுக்கு பிரசித்தம் செய்திருக்கிறது. மேற்படி நெம்பர் வாய்தா 11-12-29ல் மேற்படியார்கள் மேற்படி கோர்ட்டில் ஆஜராகாவிட்டால ஒரு கக்ஷியாய் தீர்ப்பாகுமென்கிற விவரம் தெரிவித்திருக்கிறது.

எஸ். ராமராவ்,
வாதி வக்கீல்.

நறுமணம்மிகுந்தது ! கூந்தலுக்கு கருநிறம்கொடுப்பதில்நிகரற்றது !!

## அவுரக்கீரை விதைத் தைலம்

கூந்தலை வளரச் செய்து, பளபளப்பையும் குறையாத மணத்தையும் கொடுப்பதில் நிகரற்ற தைலம்.

சகல வியாதிகளையும் குணப்படுத்தும். தினசரி உடலில் கொள்ளவும், ஸ்நானத்திற்கும் ஏற்றது.

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—2—0. வி. பி. தபால் பிரத்தியேகம்

குறிப்பு:— இரண்டு டின் தருவிப்பவர்களுக்கு ரூ. 0—4—0பெறுமானமுள்ள முதலுதவி பற்பொடி இனாமாக அனுப்பப்படும்.

ஸ்ரீ கிருஷ்ண கௌதம பரிமள ஸ்டோர், [illegible], (வயா) கும்பகோணம். பிராஞ்ச்:— 58, தம்புசெட்டி தெரு, சென்னை.

(6-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாய் வர்ணாச்சிரம தர்மங்களால் பரிபக்குவம் பெற்றுதான் பரமேசுரனோடு ஐக்கியமடைந்து பரசுகமடையலாகும், அதற்கு வர்ணாச்சிரம தர்மந்தான் நேரான வழியென்று வலுப்பெறக் கட்டியகட்டினாலன்றோ வருணாச்சிரம தருமம் வலுவடைந்து, போன்று அறிவு ஆராய்ச்சியாற்றல் அமைந்துள்ள மக்களையும் தீண்டப்படாதாரெனத் தெருக்களிலும் வரவொட்டாது மிருகங்களிலும் கீழாக மதித்துத் தூரத்தி சமூக ஒற்றுமையின்றி வேற்றுமை பாவத்தை விர்த்திசெய்து விலகும்படி செய்து, இந்துஜனசமூகத்திற்கேதுர்பலமுண்டாக்கிவிட்ட தொற்றுமையுமுண்டாகி சுதந்தரத்தோடுசுயமரியாதையோடும் வாழவும் வேண்டுமென்பது ஒரு பகுதியனரின் வஞ்சகமாகுமா? அல்லது வாஸ்தவமாகுமா? குடி அரசு இதைக் கூறவந்தால் ஜாதி கர்வங்கொண்ட சமயிகளுக்குப் பெருஞ் சங்கடமாகத் தோன்றி குடி அரசு நாத்திகப் பிரசாரஞ்செய்கிறதென்று தூற்றத் துணிகின்றார்கள்.

கடைசியாகக் காலசுபாவம் ஓர் விதமாகச் சென்றுகொண்டிருப்பதால், ஆதித்திராவிடரும் தமது அறிவு ஆற்றலால் தமது சம சுதந்தரத்தைப் பலாத்காரமாய் பற்றிக்கொள்ளுமுன் தாமே அவர்கள்பால், இரக்கமுற்றுச் சம சுதந்திரங்கொடுத்துவிட்டால் எந்த தெய்வமும் வந்து எதிர்க்கப் போவதில்லை என்றும், இனி எந்த ராச்சியம் வரினும் அவர்கள் அறியாத்தன்மையால் இதுவரையிலும் மிருகத்தினும் கேடாய் அடங்கி இருந்ததுபோலிராமல் ஆக்கிரமித்து அவர்களது சுதந்திரத்தை எவ்விதத்தும் அடைந்தே தீருவார்களென்பதும், எல்லா மக்களும் இவ்வுலக ஜீவியத்தில் ஆண்பெண்ணென்ற ஜாதியோடு சம சுதந்தரமுற்று இகபர சுகத்திற்கு இன்றியமையாத சாதனங்களாய், நவீன சாஸ்திர உணர்வும், அனுபவம், பயமின்மை, நிர்மலம் ஆத்மஞான ஆராய்ச்சி, தானம் செய்தல், இந்திரியங்களை அடக்கியாளுதல், பிறருக்குத் துன்பமிழையாமை, பொய்யின்மை, கோபம், அகங்காரமின்மை, புறங்கூறாமை, ஜீவகாருண்யம் அடக்கம், சபலமின்மை, வீரியம், க்ஷமை, தைரியம், சரீரம் மனோசுத்தி, பிறருக்குத் துரோகஞ்செய்யாமை, கர்வமில்லாமை ஆகிய நற்குண நற்செய்கைகளால் சகோதரத்வமுற்று வாழ்தல் கூடும். இவ்வுலக வாழ்வானுபவமே சுவர்க்கமாகிய லோகானுபவமாகும் என்பதே குடி அரசின் கொள்கையாம்.


உத்திரவாதம்!

நம்முடைய திருநேத்திர சஞ்சீவி பல மூலிகைகளைக் கொண்டு சித்தர் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது காலரா, பிளேக், சுரம், ஜன்னி இவைகளை ஒரு மணி நேரத்திலும், பரு, கண் குத்து, பல்வலி முதலிய சகல வலிகளையும் 5, 6 நிமிஷத்திலும் சுகமாக்கக்கூடிய சஞ்சீவி. ஒரு முறை பரீட்சித்தால் இதன் அபூர்வ சக்தியைத் தெரிந்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2-0-0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

ஆர்.பி. நரசிம்மலு நாயுடு,
191, தெற்கு மாரட்டு வீதி,
மதுரை.

(75)


கடவுள் கடவுளென காசை துலையாதே


Beauty For Ladies !

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்ரப் ...ர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 8.
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.

(34)

முன்னேற்றம்

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. கி. நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(ஏப்) 155, செலிகிரோட், சிங்கப்பூர்.


# "இராமாயணத்தின் ஆபாசம்"

உலகத்தில் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆழ்த்தி வைப்பதற்குரிய சான்றுகள் ஆழ்த்தும் சமூகத்திற்றான் காணப்படுவதுவழக்கம். ஆனால் தமிழ்மக்களை மிருகங்கள், குரங்குகள், பேய்கள், இராக்கதர்கள், கொடியவர்கள், குடிகாரர்கள், சோரம்புரிபவர்கள், கொலை நிகழ்த்துபவர்கள், அநாகரிகர்கள், வரன்முறை அற்றவர்கள், தாசி மக்கள், அடிமைகள், குருபிகள் என்ற வகையில் திரித்துக் கூற ஆரியர்கள் இராமாயணம் என்னும் ஒரு கட்டுக் கதையை வரைந்து, அது ஒரு மதியின் மிக்க ஆரிய முனிவனால் எழுதப்பட்டதென்று அதனைப் போற்றி, அண்ட முகடு முட்டும் வரையிற் புகழ்ந்து, அதற்கோர் மொழிபெயர்ப்பு போன்ற கம்ப.—இராமாயணத்தையும் வரைந்து இத் தென்னிந்தியாவில் புகுக்கியதும்; இத்தென்னிந்திய மக்கள் தம் இழிவையே அடிப்படையாகக் கொண்டு வரையப்பெற்ற இராமாயணத்தை ஓர் இதிகாசம் என ஏற்று அதனை மெய்யென்று நம்பி அவ்விதிகாசக் கதா நாயக நாயகிகளை தெய்வங்களாக ஏற்றதும வருந்தத் தக்கதோர் உண்மையாகும். அறிவுடைய திராவிட மக்கள் சூழ்ச்சியில்மிகுந்த ஆரியக்கதையாம் இராமாயணத்தை நம்பி பார்ப்பன வலையிற் சிக்கியதற்குக் காரணம், சிந்திக்குந்தோறும் சிந்திக்குந்தோறும் எளிதில் தோற்றக்கூடியதாயில்லை.

என்றாலும் பொருள் காப்பாளன் அறிவிலும் வலியிலும் மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஆற்றல் உடையவனாய் இருப்பினும், அறிவிலும் சீலத்திலும் குன்றிய ஓர் கள்வன், அப்பொருளை ஏகதேசம் கவர்ந்து செல்லுவதுபோல, அறிவுடைய நம் திராவிட மக்கள் இப்பார்ப்பன ஆபாசக் கதையாகிய இராமாயணக் கதையை ஏற்று மதிமோசம் போயினர். பார்ப்பன சூழ்ச்சியை பத்துக் கோடி முறை வலியுறுத்தினும், நாம் ஏமாற்றம் அடைந்தது, அடைந்துதான்.

எனவே, நம்மை இப்பார்ப்பனர்கள் இற்றை வரையில் ஆழ்த்தி அவர் நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும், க...ள்களையும் நம்மவை என்று ஏற்று நடக்குமாறு செய்தற்கு இத்தகைய கதைகளே சிவ நாடிகளாய் இருக்கின்றன.

பார்ப்பன வேதங்களையும், வேதாந்தங்களையும் பார்ப்பனரே அறியாதவர்களாய் இருக்க, நம்மவர்கள் பெரும்பாலும் அறிவதற்கில்லை. நம்மவர்கள் தெய்வங்கட்கும்; சமூக ஒழுக்கங்கட்கும்; மற்றும் எல்லாவிதமான இயல்கட்கும் இப்பொழுது நமக்கு ஆதாரமாயுள்ளவை பார்ப்பனப் புராணக்கதைகளேயாம் என்பதில் தடையுளதோ? இல்லை.

எனவே, நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறியவும், பார்ப்பனர்கள் நம்மைத் தாழ்மைப்படுத்தி இன்றுவரை நம்மை அடார்ந்தாசபுரியும் சூழ்ச்சி முறையைத் தெரிந்து அதனைக் கத்தரித்து சுயமரியாதை உணர்ச்சி படைக்கவும், இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் நூல் நமக்குக் காண்பிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூலில் நம் அரிய குடியரசில் வாரந்தோறும் வெளிப்போந்த கட்டுரைகளே மிளிர்வதனால், கட்டுரையாசிரியர் திரு: சந்திரசேகரப் பாவலரின் ஆராய்ச்சிக்கு நாம் ஒரு ஆராய்ச்சி வெளியிடுதல் மிகையாகும்.

ஆதலின் உண்மை திராவிடமக்கள் தொடர்ச்சியாக நம் பதிப்பகத்தால் வெளியிடப்படும் 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் அரிய ஆராய்ச்சிநூலை வாங்கிப் படித்து உண்மை உணர்ந்து எதிரிகட்குத் தக்க ஆப்பிறுத்தல் இன்றியமையாததாகும்.

# மகளிர் உரிமை

(ஸ்ரீ ஆதிநாதன்)

நமது நாட்டில் இப்பொழுது இருக்கிற வழக்கங்கள் மிகவும் மோசமானவை. அவற்றில் பெண்மக்களும் இழிநிலத்தோரும் இருக்கும் நிலைமை நன்றாக இல்லை.

முற்காலத்தில் கற்ற தாய்மாரும் அரசாளையும் அறப்போர்களையும் நடாத்திய வீரப்பெண்டிரும் இருந்தனராம். இக்காலத்தும் அத்தி பூத்தாற் போன்று ஆங்காங்கே ஒன்றிரண்டு இல்லாமலில்லை. பண்டைப் பெண்டிர் தாங்கள் விரும்பின கணவனை மணந்து வாழ்ந்தனர். அதற்குச் சுயம்வரம் என்று பெயராம்.

இப்பொழுது நமது நாட்டில் பற்பல குலங்களும் மதங்களும் வந்து மொழிகளுடன் கூடிக்கொண்டு ஆயிரக்கணக்கான பிரிவுகளாகிவிட்டன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முறையுண்டு. சிலர் இளமணங்கோடல் வேண்டும், சிலர் பலகணவர்களை மணந்து கொள்ளலாம், சிலர் கணவன் மறிந்தவுடன் விதவையாகப் பல இழிந்த வழிகளில் கட்டுப்படுத்தி வாழ வேண்டும் எனப் பல்வேறுபாடுண்டு.

பொதுவாகப் பெண் மக்களைக் கல்வி கற்காது வைப்பதும், அடிமை போல் நடத்துவதும், ஆண்களுடன் சகோதர சகோதரிபோல் பழகவிடாமையும் ஆகிய குறைகள் தீராதன.

ஆண்மக்களும் பெண்மக்களும் குறைந்தது சீரான ஐந்து ஆண்டுக் கல்வி கற்க வேண்டும். அதற்குள் [illegible]பவர்களுக்கு தமிழ் கணக்குகளும் பழைய பாக்கள் நிறைந்தபாடல்களும் ஆரம்பக்கல்வியுடன் சேர்த்துக் கற்பிக்க வேண்டும்.

பழையகாலத்து ஆரம்பக்கல்வி முறை மிகவும் சிறந்தது. அதன் வழி முறை தெரியாதும், அதை நன்கு மதியாதும், மேல்நாட்டுக் கல்வி முறை வந்தும் கெடுத்து விட்டது.

சில பெண்களுக்குச் சரியான தொழில்கள் உண்டு. பலருக்குக்கிடையாது. ஆய்ச்சியருக்குந் தொழில் தயிர் மோர், பால், வெண்ணெய் விற்றல் ஆக்கலாகும். பட்டு நூல்காரப் பெண்டிர் துணி நெய்கின்றனர். உழப்பெண்டிர் வயலில் நன்றாக வேலைசெய்கின்றனர். கூலிக்கு வேலைசெய்வோரும், நெல் குற்றுவோரும் நூல் நூற்பவரும் ஒரு பகுதியினர்.

[illegible]த்தரமானவர்களும் உயர்ந்தோரும் பெண்டிரைச்சோம்பேறிகளாக்கி விடுகின்றனர். வீட்டில் வைத்துச் செய்தக்க பல தொழில்கள் ஏற்படுத்துவதுடன் ஆண் பெண் அடங்கலும் பத்திரிகை படிக்க வேண்டும்.

பொதுவாக கூட்டம் இராஜிய தேசிய சீர்திருத்தம் கல்விப் பெருக்கு [illegible]கின்ற இடங்களில் ஆண் [illegible] பெண்களும் கூட [illegible] [illegible] முக்கியம் [illegible] [illegible]மாய நமது முப்பத்துமுக்கோடி மக்கள் நிறைந்த நாட்டிக்குப் போதாது.

வீட்டுக்கு வீடு உள்ள ஆணும் பெண்ணும் கல்வி தொழில், ஆண்மை, பிறருக்கு உதவுதல், உலகத்தோடு பொருந்தி நடத்தல் பெற்றிருக்க வேண்டும்.

பொதுப்பட ஆரம்ப ஆசிரியர் இடங்கள் மகளிர் மயமாதலாம். வயது வந்த பெண்கள் தங்கள் பிரியம் போல் மணமகனைத் தெரிந்து எடுத்துக் கொள்ள விட்டுவிடல்வேண்டும்.

பெற்றோர் அதன்மீது தமது சம்மதத்தை வேண்டுமானால் தெரிவிக்கலாம் என்று இருக்கலாம். அப்பொழுதான் உண்மையான அன்பும், இன்பமும், கற்பும், ஒழுக்கமும், திருப்தியும், மகிழ்ச்சியும், நன்மக்கட்பேறும் அக்குடும்பத்தில் சிறந்து விளங்கும். இதை யுணராமல் வழக்கத்தை மேற்கொண்டு பெற்றோர் பிரியம்போலவே பெண்கள் கூடிவாழ வேண்டுமென்றால் அக்குடும்பங்கள் ஆயிரத்தில் 10, 20 நலம்பெற வாழுமோ என்னவோ?

காதல் மணம் நூற்றுக்கு எழுபத்தைந்தாவது எல்லா நலமும் அமையப்பெறும்என்பதில்ஓர் ஐயமுமில்லை, இழிகுலமும், ஏழைத்தன்மையும் நலமின்மையும் கூட காதலைக் கெடுத்துவிடாது. அதுஓர் வல்லமையுள்ள இன்பம் நிறைந்த இயற்கையன்பாகும். அதனை இகழ்வதோ மாற்றுவதோ கொடுமையாகும். அதனிடம் ஏற்படும் துன்பமெல்லாம் கூட இன்பமாகும். பல நாடுகளுக்கும் போய் வருவோர் இதன் உயர்வை உள்ளவாறுணரக்கூடும்.

இயற்கையிலேயே காதல் என்பது ஒரு ஊரினர் குலத்தினர் காட்டினரிடம் அவ்வளவு சிறந்து தோன்றமாட்டாது. வேறு நாடு வேறு குடிகளில் தான் உண்மைக்காதல் ஒளிரும்.

கிழவர்களுக்கும் பெண்ணும் புருஷனும் விரும்பாதவருக்கும் உறுப்புக்குறைந்தவர்க்கும், நலன் அற்றோர்க்கும் பெற்றோர் பொருளையும் குலத்தையும் கருதிக்கொடுத்துக் கொண்டால்அது அதிகத்தீமை செய்யும் அதைவிட இளைஞர்தம் காதல் மயக்கத்தில் தகாத கூட்டுறவுசெய்து கெட்டுப்போவது குறைவேயாக முடியும்.

ஆண்கள் விரும்பாத மனைவியரைவிட்டு விட்டு வேறு மாதரை மணப்பதுபோலப் பெண்களும் தாம் விழையாத கணவரை அகற்றி விட்டு வேறு தக்க நல்ல காதலரை மணந்து கொள்ள உரிமை பெற வேண்டும்.

கணவனை இழந்த மாதர் தாம் உடம்பட்டால் வேறு மணவாளரைக் கூடி வாழவேண்டும். இதில் கணவரைக்கொன்று வேறு புருடர்களைத் தேடுவோர் ஏற்படலாம், தான் அந்தக்குக்கிறின்றவர்களைப்போல் தான் விரும்பாவிட்டாலும் ஒருமனைவியைத் தவிர வேறு மணக்கக் கூடாதென்ற கட்டுப்பாட்டை [illegible]

[illegible] தம் விருப்பம் போல் [illegible] [illegible]க்க விட்டு விடல் வேண்டும். ஆண்கள் தாம் மட்டும் எங்கும் போகலாம், எவ்வாறும் நடந்து கொள்ளலாம், மகளிர் வெளியே செல்லக்கூடாது; தம் விருப்பம்போல் நடந்து கொள்ளக்கூடாது என்று இருக்கிற எண்ணத்தையும், அதனால் குடி அழிந்துவிடும் என்கிற சுயநல அபிமானத்தையும் அறவே ஒழித்து விடல் வேண்டும்.

சிலருக்கு ஒரு கணவரிடமே வாழப்பிரியமிருக்கும்; சிலருக்கு ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவரைச் சேர்ந்து வாழ மனம் இருக்கும். சிலர் தாம் விரும்பும் சிலருடன் ஒரு காலத்தில் வாழவிருப்பம் இருக்கும். சிலருக்கு ஆண்களிடம் கூட்டுறவுகொள்ளவே எண்ணம் இராது.

இவையாவும்இயற்கை இயல்பைப் பொறுத்ததாகும். மக்களில் சிலர் ஏழை, செல்வர், அறிஞர், மூடர், வலியர், மெலியர், பருத்தவர், இளைத்தவர், கருப்பு நிறத்தவர், சிவந்தவர், நலமுற்றவர், அழகில்லாதவர், நோயாளி, பிணியற்றோர், நற்குணத்தவர், தீயர், கள்வர், காமி, மடியுடையோர், பரோபகாரி, வள்ளல் எனப் பலவாறாக இருப்பதுபோல் மன எண்ணம் போக்கு நடையுடைகளும் ஒவ்வொரு சாராருக்கு ஒவ்வொரு வகையாகஇருக்கலாம். அதை வழக்கத்தில் இழுத்துக்கட்டுப்படுத்தினால் கட்டுப்பட்டது உட்படும், படாதது வெளியேறும். பல நாடு தேயங்களின்பழக்கவழக்கங்கள் வெவ்வேறு வகையாக இருப்பதைப்பார்க்கலாம்.

ஆப்பிரிக்காவின்வடபக்கத்திலுள்ள ஒரு நாட்டில்ஆண்கள், நம்நாட்டுப் பெண்கள் போல் உரிமையற்று இல்லிருந்து ஒருமனைவியை மணந்து அவளுக்குட்பட்டு நடக்கவேண்டுமாம். பெண்கள் வெளியே சென்று தம்பிரியம்போல் நடந்து பொருள் தேடிக்கொண்டு குடும்பத்தை நடாத்தல்வேண்டும். தமது எண்ணம்போல் பல புருஷர்களை மணந்து அவர்களைக் கட்டி ஆளலாமாம்.

இவையெல்லாம் எவ்வளவு உலக இயக்கத்தைத்தடுப்பவையாக இருக்கின்றன. அதனால் அவரவர்கள் தத்தம் எண்ணம்போல் நடந்துகொள்ளவிட்டு விடுவதே முறைமை

நாகரிகத்துக்குத் தக்கவாறு ஒவ்வொருவரும் தம்மை மாற்றித்திருத்திக்கொள்ளுதலே சரியானது. பழமை பாராட்டிக்கொண்டே இருந்து விடுதல் ஏற்றதன்று. நாமுங்கூட இராஜராஜன் காலத்தில் பல பாய்க் கப்பல் கொண்டு நம்மவர் இலங்கை, பர்மா முதலிய இடங்களையும், இன்னும் பன்னிரு லட்சம் தீவுகளையும் வசக் கொண்டிருக்கின்றோம். அதனால் இயற்கையாக இந்தியாவும் ஐரோப்பாவைப்போல் கடற்கரை உடையதுபட்டு இராததனால் வெளி நாடுகளுக்குப் போய் வராமல் கெட்டு விட்டோம் என்றவர்களின் சொற்களை எதிர்க்கலாம்,

[illegible]

காலம் சில சில வேலைகளில் வேறுபடுகிறது. ஒரு காலத்தில் வேட்டுவர் உலகை நடாத்தினர் பின் உழவர் வந்தனர். அப்புறம் ஆடு மாடு மேய்க்கும் ஆயர் உயர்ந்தனர். இப்பொழுது வாணிகம் செய்யும் மேல் நாட்டார் மேம்பட்டிருக்கின்றனர். இனி தொழிலாளர் உயரலாம். ஒரு காலத்தில் மதத் தலைவர்கள் கூட நாடாண்டு இருக்கின்றனர்.

இந்நிலையில் நாம் செய்ய வேண்டியது காலத்துக்கேற்ப நடையுடைகளை மாற்றிக் கொள்வதே யாகும். பெண்டிர் உலக இயக்கத்தில் கூடி உழைத்தால் நாட்டின் நலம் பாதியளவு அதிகமாக மேம்படும். நமக்கும் இருக்கிற பொறுப்பு இலகுவாகும். வளரும் குழந்தைகள் அறிவு ஆண்மையுடன் விளங்குவர். தாய்மாரை மூடர்களாகவும், பயங்கொள்ளிகளாகவும், அடிமை போலவும் வைத்திருந்தால் அவர்களிடம் மாசற்ற பெருமையும் தூய்மையும் பொருந்திய இளமையைக் கழிக்கும் மக்கள் எவ்வாறு அறிஞர்களாகவும் ஆண்மையுடையவர்களாகவும் உலகில் முற்றிய உரிமையுடையவர்களாகவும் ஆகப் போகின்றனர்?

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளைவதரிது அதனால் இளைய குழந்தைகளை அடிமைத்தனத்திலிருந்து நீக்கவும் செந்நெறிப்படுத்தவும் பெண்டிர் உரிமையும் ஒழுக்கமும் பெற்றிருக்கவேண்டும்.

ஒழுக்கத்தைப்பற்றி இவ்விடத்தில் பேசுவதற்கில்லாமல் இருக்கிறதே என்றால்; அதற்கு ஒரு சமாதானந்தான் உண்டு. உண்மையான தெய்வத்தன்மை வாய்ந்த கற்பு காதல் ஒன்றினால்தான் ஏற்படலாம். ஆண்கள் கூட காதல் வாய்க்கப்பெற்றால் வேறு மகளிரைக் கனவிலும் கருதாது இருப்பர். ஆனால், அது அரிதுதான்.

இதில் கூறப்பட்ட முற்போக்கான கொள்கைகள் யாவும் இப்பொழுது உடனே கைக்கொள்வதற்கு இல்லையாதலால் காதல்மணம், மறுமணம், பொதுக்காரியங்களில் கலந்து வேலைசெய்தல், கல்வி கற்பித்தல்களில் முன்னேற்றம் செய்வது இன்றியமையாதவை.

பெண்கள் தமது உரிமை முற்றும் பெறுதல் அவர்களுக்கேயன்றி ஆண்களுக்கும் பெரிய நன்மை தரும்.

ஒரு பகுதியினர் கோட்டைகட்டி அதனுள் அடைத்துச் சிறைசெய்கின்றனர். சிலர் முக்காடிட்டு வீட்டுக்குள் அடைத்துவைத்து வேறு ஆண் முகம் பாராது இருக்கச்செய்கின்றனர். நம்மிடம் வளருகின்ற ஆடுமாடுகளுக்குக்கூடச் சிறிது உரிமை உண்டுபோலும். மகளிருக்கு ஒரு உரிமையும் கொடுப்பதில்லை.

ஆதலால் இனியாவது கால நிலைமையும் நாகரீகப்போக்கையும் அறிந்து, குடியும் நாடும் முன்னேற்றமடையவும், உலகில் நாமும் மனித [illegible] [illegible] அறிஞர் உட[illegible] பெண்டிருக்கு ஏற்ற உரிமை யளிக்க முன்போ தருவார்களாக.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புகழ்ந்து சிந்தித்ததையும் அவர் மறைத்துவிட்டார். இராவணனையும் சீதையையும் கண்டு அனுமான் 'வாழி நான் மறைவாழியர் அந்தணர்' என வாழ்த்தினனென்று கம்பர் கூறுகிறார், இதுவேண்டாததும் இல்லாததுமாம். மேலும் இவ்விடத்து அனுமான் வாழிநான்மறை வாழியர் அந்தணர் என்று வாழ்த்தவேண்டிய அவசியமென்னை? ஈதெல்லாம் பார்ப்பனர் வலையில் அகப்பட்ட கம்பர் அப்பார்ப்பனர் மதத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டுமாறு செய்த சூழ்ச்சிகளே!

வால்மீகியும் சீதையினுடைய அங்குலையும் கொங்கைகளையும் விவரித்தார். ஆனால், கம்பரோ இவைகளை அளவுகடந்து வேண்டா இடங்களிலும் வருவித்து விவரிக்கிறார். இராவணன் சீதையை நோக்கி, "வார்க்குன்று முலை!" (சிந்தனைப் படலம் பாட்டு-29) என்று விளித்ததாகக் கம்பர் கூறுகிறார். மேலும் அவர் இராவணன் அசோக வனத்திற்கு வந்ததை விவரிக்குமிடத்து (சிந்தனைப் படலம் பாட்டு-10) "குவ்வுமக் கொங்கைக்குவிமுலைக்கனிவாய்மங்கையர்" என்று கூறுகிறார். வாசனை எனப் பொருள்படும் கொங்கு என்ற சொல்லின்மேல் ஐகாரச் சாரியை ஏற்றிக் கொங்கை எனக் கூறி மகிழ்ந்து அதனையுடைய குவிமுலை என்கிறார்.

திரிலோகாதிபதியும் ஒப்புயர்வற்ற தமிழ் மன்னனுமாகிய பிரதாப லங்கேசுவரனாகிய இராவணன்,

"குடிமை மூன்று உலகும் செயும் கொற்றத்து என் அடிமை கோடி அருளுதியால் எனு குடியின்மீது முகிழ்த்து உயர் கையினன் படியின்மேல் விழுந்தான் பழிபார்க்கலான்"

என்று கம்பர் கூறுகிறார். (சிந்தனைப்படலம் பாடல் 37) இதன் பொருள் "இராவணன் தனக்கு தரும் பழியை எண்ணாது தலைமேல் கைகளைக் குவித்துக் கொண்டு மூன்றுலகங்களும் வல்ல என்னை அடிமையாக்கி அருள் செய்ய வேண்டும் (அதாவது மணம் செய்து கொள்ள வேண்டும்) என்று தரைமேல் விழுந்து கும்பிட்டான்" என்பது தமது மனநிலையும் மன இயற்கையும் செயலும் வெளிப்படக்காமப் பித்தராகிய கம்பர் இவ்வாறு கூறியது வியப்பன்று. இல்லாததுமபொல்லாததும் கூறியாவது இராவணனைக் கேவலப்படுத்த வேண்டுமென்பது தானே கம்பர் கருத்து. மெய்ப்புலவர்கள் தாம் எழுதும் கதைகளிலே இவ்விதக் கீழ்மைச் செயல்கள் காணப்பட்டாலும் அவைகளைமறைத்தெழுத வேண்டியிருக்க முதல்நூலார் கூறாத இக்கீழ்மைச் செயலைக் கம்பர்ஈண்டுக் கூறினர். இதனால் இராவணனுக்கு யாதொரு கீழ்மையுமாகாது.

சீதை இராவணனிடம் பெண்தன்மை விடுத்து மூரட்டுத் தனமாகப் பேசினதாகத் தெரிகிறது. கம்பரும் இதனையே "பெண்மைக்கு ஏய்ந்தன அல்லா வெய்ய மாற்றங்கள் இனைய சொன்னாள்" என்று (பாடல் 38) கூறுகிறார் அவள் ஒரு துரும்பைக் கிள்ளி இருவருக்கும் இடையே போட்டுக் கொண்டு சொன்னாளென்று வால்மீகி கூறினும், அவள் அத்துரும்பைப் பார்த்துக் கூறியதாக ஒன்றும் காணப்படவில்லை; எல்லாம் அவனை நேரில் பார்த்தே பேசுகிறாள். இதனால் துரும்பைக் கிள்ளிப் போட்டாள் என்பது வேண்டா கூறலாயிற்று. கம்பரோ அவள் அவனைத் துரும்பே' என்று விளித்துக்கூறினாள் என்று கூறுகிறார். சீதை கூறியதாகக் கம்பர் கூறுகின்றன எல்லாம் வால்மீகிகூறாதனவே. இராவணனைக் கண்டு நடுங்கி அனுமான் மறைந்திருந்தனனாக வால்மீகி கூறுகிறார். கம்பரோ இராவணன் சீதையது மொழிகேட்டு அதட்டினபோது அனுமான் "இவன் தனியே இருக்கிறான், இராவணனுடைய பத்துத் தலைகளையும் சுக்கிக் கொன்று சீதையைத்தூக்கிக்கொண்டு போவேன்" என எண்ணிக் கையை பிசைந்து கொண்டிருந்தான் எனப் பொய் கூறுகிறார். இது அனுமானை மிகப் பெரிய வீரனெனக்காட்டவே!

"வீரனுகிய நீ என் என்னை வஞ்சித்து எடுத்து வந்தாய்" என சீதை கேட்டதாக வால்மீகி எழுதுகிறார். இதற்கு விடை வால்மீகி இராவணன் மறுமொழியிற் கூறவில்லை. கம்பரோ "இராமனோடு நேரே போரிட்டு அவனைக்கொன்றால் நீசாவாய், நீ செத்தால் நானும் சாவேன். அதனாலேயே உன்னை வஞ்சித்து எடுத்து வந்தேன்" என இராவணன் கூறியதாக எழுதுகிறார். இது சிறு பிள்ளைக் காரணமாகக் கூட ஆகாதே!

கம்பர் சிந்தனைப் படலம் பாடல் 73ல் "பெண்ணே! நீ இணங்காவிடில் உன் உயிர் போகும், காலம் இன்னும் இரண்டு திங்களே உள" என்று இராவணன் கூறினதாகக் கூறுகிறார். இது உண்மையேயாயினும் முன்னர் "ஓராண்டில் உன் மனம் திரும்பாதிருந்தால் உன் உயிர்போம்" என்று இராவணன் கூறிய பேச்சைக் கம்பர் கூறாமலே மறைத்துவிட்டார். காரணம் முன்னரே ஆரணிய காண்டத்தில் விவரித்தோம். அது சீதை இராவணன் இழுத்துக்கொண்டு இலங்கை முழுதும் அலைந்து திரிந்த செய்தியை மறைக்கும்பொருட்டே என்பது அங்கே விளக்கப்பட்டது. இராவணன் மனைவிதானியமாலியின் செயலையும் பேச்சையும் கம்பர் மறைத்ததோடு சீதை புன்சிரிப்புடன் இராவணனை நோக்கிப் பேசிய செய்தியையும் மறைத்தனர். இனி மேற் செல்லுதும்.

## "தமிழர் திருநாள்" கொண்டாட்டம்

சென்ற 10-11-29 ஞாயிற்றுக் கிழமைபிற்பகல் 3-30 மணிக்கு தாம்சன் வீதி பி.இ. டி. பாய்ஸ் ஸ்கூலில் பர்மா சமரச சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் "தமிழர்திருநாள்" கொண்டாட்டம் நடைபெற்றது. அப்போது திருமதி பாக்கிய சுந்தரி அம்மாள் எம். ஏ. அக்கிராசனம் வகித்தார்கள். திருவாளர்கள் (1) பஞ்சாக்ஷரம்பிள்ளை அவர்கள், (2) சோளயா முஸ்லீம் அசோசியேஷன் காரியதரிசி முகம்மது இப்ராஹீம் அவர்கள் (3) கனகசபை அவர்கள், (4) பத்மராஜு அவர்கள், (5) அரங்கநாத பாகவதர் அவர்கள், (6) அப்துல் கரீம்கனி அவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். இவர்கள் பேசியதின் சாரம்சமாவது:-

தமிழ் மொழி சற்றேறக்குறைய 5000 வருடங்களுக்கு முற்பட்டதென்றும், அதன் நூல்களான காப்பியம், அகத்தியம், சோதியம், மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள் முதலியன எவராலும் மறக்க முடியாமல் போற்றப் பாலனவென்றும், வெறும் புகழ்ச்சியன்றி சரித்திர ஆராய்ச்சி உடையவர்களால் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டவையென்றும், தமிழர்கள் பரம்பரம் சகோதரப்பான்மை நிரம்பியிருந்தவர்களென்றும், தன்னலங் கருதி, தமக்கென வாழ்வதை ஒழித்து பிறர் நன்மைக்காக வாழ்ந்து வந்தவர்களென்றும், இன்னும் பலவித புகழ்க்குரிய பெருமைகளுடன் வாழ்ந்து வந்த ஓர் பெரிய ஜன சமூகம் என்றும், அத்தகையவர்களின் வழி வந்த தற்கால சந்ததியார்களான தமிழர்கள் எக்குடி பிறந்தோராயினும், எம்மதத்தோராயினும், உயர்வு தாழ்வு என்கிறவித்தியாசமின்றி தமிழர்களின் புராதன நிலையையும், தன்னலங் கருதலற்ற பெருந்தன்மையான மனப்பான்மையையும் முன்னிலையாய் வைத்து தற்காலம் தமிழ் மொழியை தாய்மொழியாய்க்கொண்டுள்ள ஒவ்வொருவரும், தற்காலம் வாழ்ந்துவரும் கேவல நிலையிலிருந்து முன்னேற்றமடையவேண்டிய மார்க்கங்களை அனுசரித்து மேம்பாடடைய வேண்டுமென்பது தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமையாகுமென்றும் வற்புறுத்திப் பேசினார்கள்.

முன்னேற்றமடையும் மார்க்கங்களில் ஒன்றாக "தமிழ் சங்கம்" ஒன்று ஸ்தாபித்தல் இன்றியமையாததென்று திரு. பத்மராஜு அவர்கள் பேசினார்.

அக்கிராசனம் வகித்த அம்மையாரவர்களும், தமது முன்னுரையிலும் முடிவுரையிலும், தமிழ் மொழியினுடையவும் தமிழர்களுடையவும், புராதன உயர்வையும், தற்காலம் இருந்து பாதவிக்கும் நிலையையும். முன்னேற்றத்திற்கான வழிகளைத் தீவிரமாய் அனுசரிக்க வேண்டுமென்றும், "தமிழர் சங்கம்" ஒன்று நிறுவ வேண்டியது அவசியத்திலும் அவசியமென்றும் கூறி முடித்தார்.

பிறகு சங்கத்தின் உபதலைவரான திரு. பு. மாணிக்கஞ் செட்டியாரவர்கள் "தமிழர்சங்கம்" நிறுவ வேண்டியதின் அவசியத்தைப்பற்றி அக்கிராசனர் உள்பட உபந்நியாசகர்கள் பலரும் அபிப்பிராயப்பட்டதாலும், பொது நலப் பிரியர்களான நண்பர்கள் பலர் வெகு ஆவலுடன் இருப்பதாலும், மேற்படி சங்கம் ஸ்தாபிப்பான் வேண்டி எவராயினும் சரி தனித்தேனும் கூடியேனும் முன் வருவார்களாயின் தம்மால் கூடிய அளவு ஒத்துழைக்க சமரச சன்மார்க்கச்சங்கத்தார் சித்தமாயிருக்கிறார்களெனக் கூறி "தமிழர் திருநாள்" கொண்டாட்டத்தை முற்றுப் பெறுவிப்பான் வேண்டி அக்கிராசனம் வகிக்க உடன்பட்ட திருமதி பாக்கிய சுந்தரம் அம்மையாரின் உபரிய நோக்கத்திற்காக டி அம்மையாருக்கும், டி திருநாளைக்கொண்டாடிக் களிக்க ஆங்கு குழுமிய தமிழ் செல்வர்களான நஞ்சோதர சோதரிகட்கும்; அன்னோர்கட்கு பெரிய மூதூட்டுவித்த உபந்நியாசகர்களுக்கும் தங்ஙாய்ந்த புண்ணியசீலர்களுக்கும், மேற்படி திருநாள் நடைபெற இடங் கொடுத்து உதவிய பி.இ.டி. ஸ்கூல் அதிகாரிகளுக்கும், இன்னும் பலவிதத்திலும்உதவிபுரிந்துமேற்படி திருநாள் கொண்டாட்டத்தைபெருமையாய் முடித்து வைத்த நண்பர்கள் அனைவருக்கும் மேற்படி சங்க சார்பாக வந்தனமளிக்கவும் கூட்டம் முடிவு பெற்றது.

(உலகம் முழுவதும் பிறப்பு நேசம் பாஷை என்பனவாகியபாகுபாடுகளும் இன்றி மனிதராய்ப் பிறந்த யாவரும் ஐக்கியப்பட்டுசகோதரர்களாய் வாழவேண்டும் என்றபெருநோக்கத்துடன் உலகின் பல பாகங்களிலும் பலவித முயற்சிகள் செய்துகொண்டு இருக்கவும், அதிலும் முக்கியமாக இந்தியர்களுள் ஐக்கியமும் சகோதரபாவமும் வளர்ந்து செழிக்க வேண்டிய இந்நாளில் "தமிழர்கள்" தனிப்பட்டு தங்களுக்கு மட்டுமெனத் தமிழர் சங்கம்" ஏற்படுத்தி தாங்கள் தனித்த ஒரு ஜன சமூகத்தினராய் விலகி நிற்க வேண்டுமென்பது தமிழ் மக்களுடைய கருத்தல்ல வென்பது இங்கு குறிப்பிடத்தகுந்தது.)


## பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மகாத்மாவான திலீபனென்னும் அரசன் செய்த யாகங்களை பிராமணர்கள் வெகிதாகச் சொல்லுவார்கள். அவன் செய்த யாகத்தில் இந்த பூமியை பிராமணர்களுக்குசந்தோஷமாக தானம் செய்தான். அவன் செய்த யாகத்தில் புரோகிதர் சுவர்ணத்தால் செய்த ஆயிரம் யானைகளை தெட்சனையாகப் பெற்றார்கள். அவன் செய்த யாகத்திலிருந்த பெரிய ரூபமானது தங்கத்தால் செய்யப்பட்டது. இந்திரன் முதலிய தேவர்கள் அவனுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டு அவனை ஆராதித்தார்கள். பொன்னால் செய்த அந்த யூபத்தின் மேலிருக்கும் சஷாலமென்னும் தங்கள் துயிலில் ஆறுயிரம் தேவர்களும் கந்தர்வர்களும் நடனம் செய்தார்கள். அதன் நடுவில் விசுவாவசு வென்னும் கந்தரவன் வீணாகானம் செய்தான். இந்த திலீப மகாராஜனை தரிசித்த மனிதர்களெல்லாம் சொர்க்கலோகத்தை ஜயித்தார்கள். (இந்தசமய த்தில் தான் மகமது கோரி எல்லோரையும் மண்டையிலடித்தது. தெண்டாயுதத்தால்சோமநாதரை மூன்று துண்டாக்கிசுவர்க்கத்தை ஜெயிக்க அனுப்புவதற்காகஇந்தியாவில்ஒனபது தடவை யாகம் செய்தார்போலும்)

மாம்தாதவென்னும் அரசன் நூற்றுக் கணக்கான யாகம் செய்து அவைகளில் பிராமணர்களுக்கு ஒரு யோசனைபருமனும் பத்துயோசனை நீளமுமுள்ள பொன்னுற்செய்த மீன்களைத் தானம் செய்தான். அந்த யாகத்தில் அதிகமாகவிருந்தபொருள்களை மற்ற ஜனங்கள் பிராமணர்களுக்குத் தானம் கொடுத்தார்கள்.

நகுஷனின் புத்திரனுன யயாதி மகாராஜன் தன்னுல் ஜெயிக்கப்பட்டபூமிகளை ஒவ்வொரு வேதியாகச்செய்து பூமியை அலங்கரித்து உயர்ந்த பல யாகங்களைச் செய்து பூமிமுழுமையும் யாக சாலையாகச் செய்தான். நூறு ராஜசூய யாகங்களையும் வேறு ஆயிரம் யாகங்களையும் செய்து மூன்று தங்க மலைகளை பிராமணர்களுக்குத் தானம் செய்து சந்தோஷப்படுத்திக் காட்டிற்குச்சென்று விட்டான்.

நாபாகனுடைய புத்திரனுன அம்பரீஷன் எனனும் அரசன் தான்செய்த பெரிய யாகத்தில் யாகம்செய்விக்கும் பிராமணர்களுக்கு யாகம் செய்தவர்களான பத்து லட்சம் அரசர்களைப் பணிவிடை செய்யக் கட்டளையிட்டான். அவனுடைய யாகத்தில் பிராமணர்களுக்கு ஊழியம் செய்தஅரசர்கள் யாவரும் அசுவமேதயாகம்செய்தவர்கள்போல் உத்தராயணமென்னும் தேவ மார்க்கம் சென்று பிர்ம லோகத்தையடைந்தார்கள். சித்ரரதன் புத்திரனுன சசபிந்து என்னும் அரசனுக்கு லட்சம் மனைவிகளும், பத்துலட்ச புத்திரர்களுமிருந்தார்கள். ஒவ்வொரு புத்திரனுக்குமாகச் செய்த யாகத்தில் தனித்தனியே நூறுநூறுகன்னிகைகளும், ஒவ்வொரு கன்னிகைக்கும் நூறு நூறு யானைகளும், ஒவ்வொரு யானைக்கும் நூறு நூறு தேர்களும், ஒவ்வொரு தேருக்கும் நூறு நூறு குதிரைகளும், ஒவ்வொரு குதிரைக்கும் நூறு நூறு பசுக்களும், ஒவ்வொரு பசுவுக்கும்நூறு நூறு வெள்ளாடுகளும், ஒவ்வொரு வெள்ளாட்டிற்கும் நூறு நூறு செம்மறியாடும், அளவில்லா பொருள்களும் பிராமணர்களுக்குத்தானமாக அளித்தான். அந்த அரசன் யாகம் செய்த மிச்சத்தை தேவலோகத்தில் நூறு தேவ வருடம் அனுபவித்து சொர்க்கத்தை அடைந்தான்.

அதூர்த்தரஜசனுடைய புத்திரனு கயனென்னும் அரசன் தருமத்தில் சிரத்தை விருத்தியுடைய அக்னி பகவானுல் வரங்கள் பெற்றதாக நாங்கள கேள்விப்பட்டதுண்டு; அவன் மாசம், பூரணமாசம், சாதுர்மாசம் அசுவமேதமென்ற யாகங்களை பல ஆயிர வருஷங்கள்வரையில் திரும்பவும் திரும்பவும் செய்துகொண்டிருந்தான். இவன் சோமயாகத்தால் தேவர்களையும், தானத்தால் பிராமணர்களையும் திருப்திசெய்து அந்த யாகத்தில் ஐம்பது முழ அகலமும், நூறுமுழமுமுள்ளதான பொற்பூமியை உண்டுபண்ணி பிராமணர்களுக்குத் தட்சணையாகக் கொடுத்தான்.

சங்கிருதியின் புத்திரனுன ரந்திதேவனுன அரசன் அநேக யாகங்களைச்செய்தான். வனத்திலும் கிராமங்களிலுமிருக்கும் பசுக்கள் தாமாகவே வந்தன. அந்த யாகத்தில் உபயோகிக்கப்பட்ட பசுக்களின் தோற்சுவையிலிருந்து கசியும் நீர் சர்மண்வதியென்னும் பெயர்கொண்ட பெரிய நதியாய் பிரசித்திபெற்றிருந்தது. அந்த காலத்தில் பிராமணர்கள் 'உமக்கு நூறு சொர்ணம் கொடுக்கப்போகிருர்; உமக்கு நூறு கொடுக்கப்போகிருர்; என்று சொல்லும்பொழுதே உமக்கு ஆயிரம், உமக்கு பதினுயிரம்' என்று சொல்லிக் கொடுத்து.பிராமணர்களை அவன் சந்தோஷமாய் அடைந்தான். அவன் வீட்டில் ஒரு ராத்திரி ஆயிரத்திருபது பசுக்கள் மெருகிட்ட ரத்தின குண்டலம் பூண்ட பரிசாரர்களால் சமைக்கப்பட்டது.

இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த சகரன் ஆயிரம் யாகங்களால் தேவர்களைத் திருப்திசெய்வித்து, தாமரை இதழ்போன்ற கண்களையுடைய ஸ்திரிகளாலும் படுக்கைகளாலும் நிறைந்தனவும் பொன்மயமான தூண்களுள்ளனவும் பொன்மயமான உப்பரிகைகளையும் மற்றும் பல போக வஸ்துக்களையும் பிராமணர்களுக்குத் தானம் செய்தான்.

வேனபுத்திரனுன பிருதுவென்னும் க்ஷத்திரியன் செய்த யாகத்தால் பூமி உழவின்றி செழித்தது; மரங்களில் ஒவ்வொரு இலையிலும் தேனொழுகியது; பசுக்கள் பதக்குப் பால கரந்தன; அவன் செய்த காயத்தில் மூன்று ஆள் உயரமுள்ள இருபத்தொரு தங்க மலைகளை பிராமணர்களுக்குத் தானம் செய்தான்.

ஐந்தாம் வேதமான இதிகாசத்தில் இன்னும் அநேக கதைகளுண்டு. சில வற்றை மட்டும் எழுதினேன். வேத வேள்விகளை நிந்திக்கப்படாதென்று ஞானசம்பந்தர் சொல்லியிருந்தாலும் இந்தக் கதைகளின் கருத்தென்ன ? இதைக்கேட்ட இந்து சமய ராஜாக்கள் என்ன செய்திருப்பார்கள் ? எப்படி அழிந்தார்கள் என்பதை நீங்களே கவனித்துப்பாருங்கள். இக் கதைகளெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் நாரதருக்குச் சொல்லி, நாரதர் தருமருக்குச் சொன்னது அடுத்த வியாசத்தில் இன்னும் சிலவற்றை எழுதுகிறேன்.


## பாதி விலை !

15 தினம் வரை ! ! முந்துங்கள் ! ! !

கீழ்வரும் 15 ரூபாய் புஸ்தகங்களுக்கும் ஒரே தடவையில் ஆர்டர் தருவோருக்கு

ரூ. 7—8—0-க்கு அனுப்பி வைக்கிரேம்.

1. காஞ்சிபுரி இரகஸ்யம் ரூ. 4-0-0. 2. சிறு கதா செட் ரூ. 3-0-0. 3. ராதா மாதவன் ரூ. 1-4-0. 4. அனுபவ கைத்தொழில் போதினி ரூ. 1-0-0. 5. சுந்தரவதனி அணு. 0-12-0. 6. யுக்தி போதினி அணு 0-12-0. 7. வசந்த சமுத்திரம் அணு 0-12-0. 8 விதவிவிடு தூது அணு 0-12-0. 9. தனபாக்கியம அணு 0-8-0. 10. மண வாழ்க்கையின் மர்மம் அணு 0-8-0. 11. ராஜ ராஜம் அணு 0-8-0. 12. ஆகாயப் புருக்கள் அணு 0-8-0. 13. மெய்ப்பொருள் நாயனுர் சரித்திரம் அணு 0-8-0. 14. பஜனை கீர்த்தனை அணு 0-4-0. புஸ்தக மார்க்கெட்டில் பொறுக்கெடுத்த ரத்தினங்கள் இவைகளே.

எஸ், வி. நாதன்,
எலப்புள்ளி, பாலக்காடு.



## விளம்பரம்

## மேயோ கூற்று மெய்யா-பொய்யா ?

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற திருவள்ளுவர் வாக்கை உணர்ந்தீர்களா?

எனின், ஏன் வீண்வாதம்?

மேயோவின் நோக்கம் கொடியதேயாயினும் அவர் கூறியுள்ள குறைகளும் கொடியவைகளே! அக்குறைகள் நமக்குச் சொந்தமானவை. அவை என்னவென்று அறிந்தீர்களா? அறிந்த பின் அவற்றைப் போக்க வழி தேடாமல், வாயால் மேயோவைத் தூற்றுவது தேசத்திற்கிழைக்கும் நற்கடனுகுமா?

மேயோவின் "குப்பைகளை" கூட்டித்திரட்டி அவற்றிற்கு விளக்க உரை கூறப்பட்டுள்ள அருமையான நூலை இன்றே வாசித்துப் பாருங்கள்.

திரு. அய்யாமுத்து அவர்களால் எழுதப்பட்டது. ஆக்கியோன் உருவப்படத்துடனும், திரு. ஈ. வெ. ராமசாமி முகவுரையுடனும், திரு. சனக சங்கர கண்ணப்பரின் அபிப்பிராயத்துடனும் மிளிர்வது.

விலை அணு நான்கு. தபாற் செலவு இனும். முன் பணம் அனுப்ப வேண்டும்.

கிடைக்குமிடம்: கோவை. அ. அய்யாமுத்து,
புஞ்சை புளியம்பட்டி.
(எப்) சத்தியமங்கலம் வழி கோயமுத்தூர் ஜில்லா.


## வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க!

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| விவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மெரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

(28)



வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

# சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

இராவ்ட்டன் புத்தகாலயம்,

14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.



அன்பார்ந்த

நண்பர்களே!

இங்கிலீஷ் பாஷையை சுலபமாயும் சுலபமாயும் கற்றுக்கொள்வதற்கான பல புஸ்தகங்களும் தற்கால நாகரீகத்துக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான சட்ட திட்டங்கள், நாவல்கள், நாடகங்கள், சாமான்கள், மருந்துகள் அடங்கிய எங்கள் கேட்லாக்குக்கு எழுதினால் உடனே அனுப்புகிறோம்.

வி. எஸ் கே. சுவாமி அண்ட் ஸன்ஸ்,

புக்செலர்ஸ், விளாத்திகுளம்.

(வயா) கோவில்பட்டி, எஸ். ஐ. ஆர்.



குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—

வாரப்பதிப்பு ரூ. 5—0—0

மாதப்பதிப்பு ரூ. 1—8—0

மானேஜர் குமரன், காரைக்குடி.

(எப்)



## குடி அரசு புத்தகாலயம்

வெளியாக்கும்

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |
| சோதிடப்பாட்டு ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0-12—0 |

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடி-அரசு புத்தகாலயம்,


14, மவுண்ட்ரோட், மதராஸ்.

(எப்)



முதலாவதாயில் தமிழில் வெளிவாத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

மூன்று 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

(11)



இனாம்! இந்த மருந்தில் குணமில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூபா 500 இனாம்!!

ஒரே நாளில் அடக்க முடியாத வாலிபம்! நாதபுஷ்டி மாத்திரை!

தங்க பஸ்பம் அமிர்த சஞ்சீவி லேகியம் ஓர் பக்கிரியின் முறை

நா உபயோகிகளும் வாலிபருமெல்லாம்; இல்லற இன்பத்தை இழந்தே அலைகின்றனர்; உடைந்த கெட்ட இந்திரியங்களை நிற்கச் செய்து வாலிப மணியாக்கி தாது கட்டிப்புகளை முறுக்கேற்றி, சரீரத்திடம், புஜபல பராக்கிரமம் அதிகரித்து மதயானையைப்போல் பலமும் சக்தியும் உண்டாக்கும் வீரர்கொண்டு அடக்கமுடியாத தாதுபுஷ்டியினால் இல்வாழ்க்கை இன்பசுகம் நெடுநேரம் நின்று சுகிக்கும் ஆனந்தத்தை அளவிடமுடியாது. இவ்வித ஆச்சரியமான மருந்தை பார்த்திருக்கமாட்டீர்கள். எங்கும் கிடைக்காது. ஒவ்வொருவரும் சாப்பிட்டு இன்பசுகமடையுங்கள்.

100 வேளைக்கு தங்க பஸ்பம் சேர்ந்த லேகியம் சேர்ந்து விலை ரூ. 5.

YALMAL & Co., P. O, 226, MADRAS

## கொக்கோக வசனம்.

அதிவீரராமபாண்டியர் பாடிய பழைய கொக்கோகத்தின் விளக்கமும் விரிவுமான வசனம். படங்களுடன் ரூபா 1.

30-வருடமாய் பிரசித்திபெற்ற எங்கள்

### ஸ்வர்ண சஞ்சீவி:

இது 108 புடம் நீர்த்த அயம், காந்தம், தங்கம் இம்மூன்றுமான செந்தூரமாகும். இதனுல் பல துர்ப்பழக்கங்களால் இழந்த தாதுவைக் கட்டச்செய்து தளர்ந்து பயனற்ற நரம்புகளுக்கு முறுக்கேற்றிப் புதிய வாலிபனுக்செய்யும் சிறந்த ரத்த விருத்தி ஔஷதம். துரிதஸ்கலிதம், மதி இனி இல்லற இன்பம் நமக்கு உண்டோ என்று ஏக்கம் காரண மாகிய நபும்சகம் என்னும் ஆண்மை யின்மையை முற்றும் ஒழிப்பதில் கைகண்டது. 20 நாள் மருந்தில் தேகநிறை அதிகரிக்கும். மேல்தோல் தளர்ச்சியும் சுருக்கமும் நீங்கும். நகக் கண்கள் பலமடையும். கண் பார்வை அதிகரிக்கும். ஜீரண சக்தியை உண்டாக்கும். நரைக்கத் தொடங்கும் மயிரைக் கருமையாக்கி நல்ல முகதேஜஸையும் உற்சாகத்தையும் கொடுத்துப் புதிய மனிதனைச் செய்வதில் உத்தரவாதமானதும் நம்பிக்கையுமானதும் ஜெகப்பிரசித்தியுமானது.

20-நாள் மருந்து விலை ரூபா 5-0-0.

### மதனகாமேஸ்வர லேகியம்

இது விலையுயர்ந்த தற்பங்களும் அபூர்வ மூலிகைகளும் அரிய விதைகளும் சேர்ந்தான திவ்ய லேகியம். 20-நாளில் நீத்துப்போன தாதுவை அபாரமாக்கி கட்டிச் செய்து நரம்புக் கூடுகளுக்கு மிகவும் முறுக்குண்டாக்கிப் புதிய வாலிபத்தை உண்டாக்குவதில் கைகண்டது.

20-நாள் லேகியம் ரூபா 2-0-0.

### மதனராஜ திலா

இது சகலவித நரம்புத் தளர்ச்சியையும் முற்றும் போக்கிவிடக் கூடிய அற்புத சக்திவாய்ந்த விலை உயர்ந்த சரக்குகளால் ஆனது. இந்த மருந்து இனிச் சிற்றின்ப சுகத்தை யனுபவிப்பதற்கில்லையே என்று ஏங்கின நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு நபும்ஸகத்தைப் போக்குவதால் கரையேற்றி நரம்புகளுக்கு முறுக்கையும் வலிமையையும் கொடுத்துள்ளது. துவண்டு தளர்ந்துபோன நரம்புகளை நன்றாய் முறுக்கேற்றிக் கெட்டிப்படுத்துவதில் கைகண்டதும் உத்தரவாதமுமானது.

1-அவுன்ஸ் தைலம் ரூ 2-0-0.

வெளிநாட்டு ஆர்டர்கள் முன்பணத்துடன் வரவேண்டும்.

தனம் & கம்பெனி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



இன்ப ஊற்று! இன்ப பொக்கிஷம்!!

## ★ கற்பகம் ★

அற்புதமான பல விஷயங்களோடு : :
: : மாதந்தோறும் வெளிவரும் உயர்ந்த

### "நாவல் சஞ்சிகை"

சகோதர சகோதரிகளே!

"கற்பகம்" என்னும் சஞ்சிகையானது இந்த கார்த்திகை மாதமுதல் வெளிவரப்போகின்றது. இந்த சஞ்சிகை (டிம்மி) 72 பக்கங்களையுடையது. முதல் 64 பக்கங்களில் இன்பம் சொட்டும்படியான நீண்ட கதையானதும், பாக்கியுள்ள எட்டு பக்கங்களில் இன்பம், விநோதம் முதலியன அடங்கிய அற்புத சுயமரியாதை விஷயங்களும் வெளிவரும். இதில் வெளிவரும் கதைகளும், மற்ற விஷயங்களும படிப்போரின் மனதை ஆனந்தசாகரத்தில் அமிழ்த்தும் என்பது திண்ணம். நீங்கள் என்றும் இன்பமடைய விரும்பினால், அற்புதமான கதைகளை வாசிக்க விரும்பினால், உலக ரகசியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உடனே "கற்பக"த்திற்குச் சந்தாதாரராகச் சேருங்கள். இதன் ஆசிரியர் "திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர்." "கற்பக"த்தில் முதன்முதல் 'சென்னை நகரத்தின் இரகசியங்கள்' (Mystries of Madras) என்னும வரிசையில 'சௌந்தரவல்லி அல்லது சிறந்த இரகசியங்கள்' என்னும் கதை அற்புதமான பல விஷயங்களோடு வெளிவரும்.

சந்தா விவரம்:—உள்நாடு 3 மாத சந்தா அணா 0-10-0. 6 மாத சந்தா ரூ. 1-0-0. வருட சந்தா ரூபா 2-0-0. வெளிநாடு:—6 மாத சந்தா ரூ. 1-4-0. வருடசந்தா 2-8-0.

மாதிரி பிரதி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்:—கற்பகம் ஆபீஸ்,
5, வீராசாமி பிள்ளை வீதி,
எழுகிணறு, மதராஸ்.



## தாதுபுஷ்டிக்கு

பழநி, சி. எம் சாமி,

### மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்ப்பட்டது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், ஜலமேஹம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீட்சித்தவர்களுக்கே இதன் அருங்குணம் விளங்கும். 120 குளிகைக்கு ரூ. 10, 60 குளிகைக்கு ரூபா 5, 30 குளிகைக்கு ரூபா 3.

அந்நிய நாட்டார் முன் பணம் ரூபா 5 அனுப்பவும்.

வைத்திய ஆசிரியர், சி. மலையப்பசாமி,
(61 டி.) நித்தியானந்த வைத்தியசாலை, பழநி.



நறுமணம்! பெருங்குணம்!

காப்பிக் குடியை ஒழிக்கும்

### ஹேப்பி பவுடர்

Registered No (3108)

பலஹீனம், தாகம், உஷ்ணம், பித்தம், மலக் கட்டுதலை நீக்கிப் புஷ்டியைத் தருவதில் நிகரற்றது. வி. பி. வேறு. அயல் நாட்டுக்கு முன் பணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ½ சேர் டின் 3, | ரூ. | 1 | 0 | 0 |
| டஜன் ½ | ரூ. | 1 | 12 | 0 |
| ¼ பவுண்டு டஜன் 1, | | 3 | 0 | 0 |

S. V. ராஜப்பா,
ஹேப்பி பாக்டரி, பழனி, S I



## ஒரே ரூபாய்

வாசனைகளிற் சிறந்தது எது?
பிரெஞ்சு செண்டுகளே!
ஜாஸ்மின், லில்லா, ரோஸ்
பெரிய புட்டி விலை ரூபா 2
சிறிய புட்டி விலை ரூபா 1.
3 மாதிரி புட்டிகளின் விலை ரூ. 1
3 சோப் திணுசுகள் ரூ. 1-0-0
கூந்தல் வளரும் தைலம் ரூ. 1-0-0
முகப்பருவுக்கும் தடவும் பௌடர் ரூ. 1-0-0
தபால் செலவு அணா 12 பிரத்தியேகம்.
நம்முடைய கேட்லாக்கிற்கு எழுதவும்.
லக்ஷ்மண பிரசாத் அண்டு கோ,
(டிபார்ட் 19) புதுச்சேரி.


(4)

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.